திங்கட் பதிப்பக பதிப்பு-5.

"தியாகத் தீ"

திருமதி.
கலைச் செல்வி
அவர்கள் எழுதியது.

கல்லக்குடி வெஞ்சமர் வீரர்
கலைஞர் மு. கருணாநிதி
அவர்களின் மதிப்புரையுடன் கூடியது.

திங்கட் பதிப்பகம்
திருப்பாதிரிப்புலியூர்.

...ர்] விலை ரூ 1-8-0

O-,2NKC,T
N54
103405

திங்கட் பதிப்பக வெளியீடு-5.

"தியாகத் தீ"

✵

திருமதி.

கலைச் செல்வி

எழுதியது.

✵

கல்லக்குடி வெஞ்சமர் வீரர்

கலைஞர் மு. கருணாநிதி

அவர்களின் மதிப்புரையுடன் கூடியது.

✵

திங்கட் பதிப்பகம்

திருப்பாதிரிப்புலியூர்.

காப்பிரைட் ரிஜிஸ்டர்] விலை ரூ. 1-8-0

கலைஞர் மு. கருணாநிதி.



இந்நூலாசிரியையின் வலது கரம்

தோழியர் கலைச்செல்வியின் முயற்சி பெரிதும் போற்றுதற்குரியது. 'தியாகத் தீ' என்னும் இக்கதை தோழியரின் முதல் முயற்சி என்றபோதிலும் அவருக்கு நல்ல எதிர்காலம் எழுத்துலகில் இருக்கிறது என்பதற்கு இந்நூல் ஒரு எடுத்துக்காட்டு. சகோதர பாசத்தை அழகுறச் சித்தரித்துள்ள சகோதரியை பாராட்டுகிறேன்

அன்பு

[illegible]

'தியாகத் தீ' யைத் திறம்படத் தீட்டிய
'கலைச்செல்வி' அடுத்து வடித்துத் தரும் இரண்டு
சிந்தை கவரும் சிறந்த சிந்தனைச் சிற்பங்கள்

"தினகரா" "ஆசைக் கனல்"

நூன் முகம்.

உலக அரங்கில் வாழ்க்கை நாடகத்தை மனிதர் நடிக்கின்றனர். மானிட வாழ்க்கையில் அன்ருடகம் நடைபெறும் சம்ப வங்கள் எண்ணிறந்தன. அத்தகைய உண்மை நிகழ்ச்சிகளில் சிலவற்றை உருவாக்கி, மக்கள் விரும்பும் வண்ணம் இனிய முறையில், எளிய நடையில், அரிய கருத்துக்களுடன் **'தியாகத்தீ'** என்னும் இந் நூலை இயற்றியிருக்கிறேன். நாட கத்தின் சுவையும் விறு விறுப்பும் குன்றி விடாத படி காட்சிகளைக் கூடிய வரையில் சுருக்கமாகவே அமைத்திருக்கிறேன். கதையின் போக்குக்கு அத் தியாவசியமான சம்பவங்களை மட்டில் புகுத்தி யிருக்கிறேன். உரையாடல்கள் தேவையான அள வுக்கு அதிகமாக வளர்ந்து விடாத வாறு ஆக்கி யிருக்கிறேன். சமூகத்தில் பல்வேறு கோணங்க ளில் காணப்படும் கோணல்களைக் கூடிய வரை ஆங்காங்கு சித்திரித்திருக்கிறேன். நவரசங்களும் நிரம்பித் ததும்பும் இந் நாடகத்தில், வாசகர்களை ஒரேயடியாய்ச் சோக வெள்ளத்தில் ஆழ்த்தி விடாது களிப்பூட்டும் வண்ணம் நகைச் சுவைக்கு நெடுகிலும் நிறைய இடம் தந்திருக்கிறேன்.

வாசக நேயர்கள் எனது இந்த முயற்சியை முற்றிலும் ஆதரிப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்குப் பரிபூரணமாக உண்டு. அபிமானிகளின் அபிப்பிராயங்களை ஆவலோடு வரவேற்கிறேன்.

இந் நூலை வெளியிட்டுதவி என்னை ஊக்கி உற்சாகப் படுத்திய **திங்கட் பதிப்பகத்தாருக்கு** என்றும் என் இதயங் கனிந்த நன்றி.

இதற்கு மதிப்புரை வழங்கியிருக்கும் கருத்துக் களஞ்சியம், சிந்தனைச் சிற்பி 'கல்லக்குடி' வெஞ்சமர் வெற்றி வீரர் கலைஞர் மு. கருணாநிதி அவர் களுக்கு என் நன்றி கலந்த வணக்கம்.

12—2—54

இங்ஙனம்,

'ஆசிரியை'

பதிப்புரை.

இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழ்களுள் மூன்ருவதற்கு, நாட்டில் இன்று இருக்கும் முக்கியத்துவம் அனைவரும் அறிந்ததே.

'நாடகம் வெறும் பொழுது போக்குக்காக' என்று யாராவது சொன்னல் 'உயிர் வாழ்வது, உண்டு உறங்குவதற்காக' என்று உரைப்பதற்கொப்பாகும்.

புதுமை! புரட்சி!!........ புன்மையினுல் புரையோடி விட்டிருக்கும் சமுதாயத்தில், நாடகத்தின் வாயிலாக நாட்டு மக்கள் நாடுபவை இவைதான்.

சமூகத்தின் பல்வேறு கோணங்களில் குடி கொண் டிருக்கும் கோணல்களை, குறைபாடுகளை, சீர் குலைவுகளை நகைச் சுவை ததும்ப, பக்குவமான முறையில் சித்திரிப்பதன் மூலம், இந்த சிக்கலான பணியில் சிறந்த வெற்றி கண்டிருக்கிருர் ஆசிரியை கலைச் செல்வி.

மக்கள் கூட்டத்தில் மறைந் திருந்த திறன் மிகு நாடகாசிரியை ஒருவரை 'தியாகத் தீ' என்னும் இந்நூலின் வாயிலாக நாட்டுக்கு அறிமுகப் படுத்தும் வாய்ப்பு எமக்குக் கிடைத்தது பற்றி மட்டற்ற மகிழ்ச்சி.

முடிவில்........? நல்ல மலர் என்று நவிலத் தேவை யில்லை. அதன் நறு மணம் ஒன்றே போதும். எங்கே.........வாசியுங்கள்! யோசியுங்கள்!!.......... சிரியுங்கள்! சிந்தியுங்கள்!!.......... வழங்குங்கள் உங்கள் தீர்ப்பை!!!

வாசகர்களின் தீர்ப்பு எனக்கு ஏற்கெனவே தெரியும் சொல்லட்டுமா?........மாட்டேன்........ அப்புறம்...........'அதுதான் எங்கள் தீர்ப்பும்....... ஆனல் தற் பெருமை' என்பீர்கள்........ஆகவே இத்துடன் நிறுத்திக் கொள்கிறேன்.

வணக்கம்.

திங்கட் பதிப்பகம்
திருப்பாதிரிப்புலியூர்

இரா. சுப்ரமணியம்.

" தியாகத் தீ "

நாடக பாத்திரங்கள்.

ஆபத்சகாயம் பிள்ளை	—அழகாபுரி பண்ணையார்
அன்பானந்தன்	—பண்ணையாரின் மூத்த மகன்
அழகானந்தன்	—பண்ணையாரின் இளைய மகன்
சாவித்திரி	—அழகனது மனைவி
நஞ்சப்பன்	—அழகனது நயவஞ்சக நண்பன்
சாமி	—பண்ணையார் வீட்டு வேலையாள்
செல்லப்பன்	—பண்ணையத்துக் காரியஸ்தன்
சொர்ணம்	—செல்லப்பன் மனைவி
சுந்தரம் பிள்ளை	—ஆபத்சகாயம் பிள்ளையின் மைத்துனர்.
சுசீலா	—சுந்தரம் பிள்ளை மகள்
நாகமணி	—நவநாகரீக நாரீமணி

(இன்னும் பலர்)

குறிப்பு:- இதை நாடகமாக நடிக்கவோ, திரைப்படமாகத் தயாரிக்கவோ விரும்புகிறவர்கள் ஆசிரியையின் அனுமதி பெற வேண்டும்,

ஆசிரியையின் முகவரி:—

திருமதி. ப்ளாரென்ஸ் ஜோஸப் (கலைச்செல்வி)
C/o C. V. J. ஜோஸப்,
ரெவின்யூ இன்ஸ்பெக்டர்,
கூடலூர் O. T. (தென்னாற்காடு மாவட்டம்.)

காலஞ்சென்ற என் அருமை மகள்
'தனராணி'யின் அன்பு ஞாபகார்த்தத்துக்கு
ச ம ர் ப் ப ண ம்.

" தியாகத் தீ "

காட்சி 1.

இடம்: அழகாபுரி பண்ணையார் வீடு.

காலம்; அதிகாலை.

பாத்திரங்கள்: அன்பன், அழகன், சாவித்திரி முதலானோர்.

(அழகனின் திருமணம் மிக விமரிசையாய் நடந்தேறு கிறது. மணமக்கள் முன்னிலையில் 'இல்வாழ்க்கை' என்னும் இசை நாடகம் நடைபெறுகிறது. நாடகம் முடிந்ததும் பெரியவர் ஒருவர் மணமக்களுக்கு ஆசி கூறுகிறார்.)

பெரியவர்: திருமணத்தின்போது ஆண், பெண்ணுக்கு அணிவிக்கும் மாங்கல்யம் ஓர் அன்பின் அடையாளமாகவும் அணி கலனாகவும் கருதப்பட வேண்டுமே தவிர அடிமைத் தளை யாகவோ அல்லது ஆணின் உயர்வுச் சின்னமாகவோ எண்ணப் படக்கூடாது. இந்த அரிய கருத்தைத்தான் இந்த இனிமையான இசை நாடகம் அனைவருக்கும் அறிவுறுத்துகிறது இவ்வுண் மையை மனதிலிருத்தி இல்வாழ்க்கையில் ஈடுபட்டு நீடூழி வாழ மணமக்களை வாழ்த்துகிறேன். (கரகோஷம்)

(புது மணத்தம்பதிகள் பண்ணையார் ஆபத்சகாயம் பிள்ளையை நமஸ்கரிக்கின்றனர்.)

ஆபத்: (அழகனிடம்) தீர்க்காயுசாய் இரப்பா. (சாவித்திரி யிடம்) தீர்க்க சுமங்கிலியாய் இரம்மா.

(அன்பனிடம் வந்து வணங்குகின்றனர்.)

அன்: பல்லாண்டு வாழுங்கள்.................. அழகா, உங்க ளுக்கு ஒரு கச்சிதமான கலியாண வெகுமதி.......

அழ: அப்படியா?........ என்ன அண்ணா அது?

அன்: என்னோடு வாருங்கள் காட்டுகிறேன் (ஒரு 'ஷெட்' டைத் திறந்து காட்டி) பார்த்தாயா அழகா?

அழ: (ஆனந்தம் மேலிட) கார்! (காரைப் பார்வை யிட்டவாறு) First Class ரோல்ஸ்ராய்ஸ் கார். ஆகாகா! வாழ்க் கைக்கு இன்றியமையாத ஒரு சாதனம்.

அன்: அதோடு வாழ்க்கையை ஓரளவு பிரதிபலிக்கும் சாதனமும் கூட.

அழ: அப்படியென்றால்?

அன்: தம்பி, உலகச் சாலையில் வாழ்க்கையென்னும் காரைச் செலுத்தும்போது எண்ணற்ற இடையூறுகள் எதிர்ப்படும், மோகம் மோதும், ஆத்திரம் அலைக்கழிக்கும்; ஏழ்மை எதிர்க்கும்; கூடா நட்பு குறுக்கிடும் 'பகுத்தறிவு' என்னும் 'ஸ்டீயரிங்' ஐப் பத்திரமாகக் கையாண்டு சங்கடங்களை எல்லாம் சாமர்த்தியமாய்ச் சமாளிக்க வேண்டும். இல்வாழ்க்கையில் இன்று பிரவேசிக்கும் உனக்கு நான் தரும் புத்திமதி இதுதான்.

அழ: நல்லது அண்ணா.

அன்: இன்னொரு சந்தோஷ சமாச்சாரம், அந்த அழகு ததும்பும் ஆற்றங்கரை பங்களாவையும் உங்களுக்கென்று வாங்கி விட்டேன்.

அழ: (சந்தோஷம் அதிகரிக்க) அப்படியா?.... அப்புறம் உங்களுக்கு அண்ணா?

அன்: உம்........ எனக்கா?........ எனக்கென்ன மனைவியா? மக்களா? அந்தக் கொல்லைவெளி வீடே எனக்குப் போதும்.

அழ: இந்த உபகாரங்களையெல்லாம் என் உயிர் உள்ளளவும் உணர்ந்து நடப்பேன் அண்ணா!

அன்: இது உபகாரமல்ல தம்பி.... (கண்களில் நீர்வடிய) கடமை!

அழ: கடமையா?

அன்: ஆம்! (பழைய நினைவுகள் நெஞ்சில் மோத) கடமைதான். (கண்ணீர் உகுக்கிறான்)

அழ: (திடுக்கிட்டு) ஆ கண்ணீர்! கவலை ஏன் அண்ணா?

அன்: இந்த மங்களகரமான காட்சியைக் காண அம்மா மட்டும் உயிருடன் இருந்திருந்தால்................? அழகா, அப்பொழுது எனக்கு வயது பன்னிரெண்டு........................

[திருப்புக் காட்சி] (Flash-back)

காட்சி 2.

இடம்: ஆபத்சகாயம் பிள்ளை வீடு

காலம்: மாலை

பாத்திரங்கள்; ஆபத்சகாயம் பிள்ளை; அன்பன், குண பூஷணி அம்மாள்.

(குணபூஷணி அம்மாள் அறைக்குள் பிரசவ வேதனைப் படுகிறாள்.)

குண; (வேதனையில்) அம்மா............உம்............அப்பா............தெய்வமே............

(ஆபத்சகாயம் பிள்ளை அறைக்கு வெளியில் சிந்தா கிரந்தராய் குறுக்கும் நெடுக்குமாய் உலவுகிறார். அன்பன் அழுதுகொண்டு நிற்கிறான். அப்பொழுது அவன் பன்னி ரெண்டு வயதே நிரம்பிய பாலகன்)

(குழந்தையின் அழுகுரல் கேட்கிறது,)

நர்ஸ்: (வெளியே வந்து) அழகான ஆண் குழந்தை!

(மீண்டும் அறைக்குள் செல்கிறாள்)

ஆபத். (மகிழ்ச்சி பொங்க) ஆண் குழந்தையா?.... என் அப்பனே நமசிவாயம், எல்லாம் உன் கருணை! (அன்பனிடம்) டேய் உனக்கொரு தம்பி, பொறந்திருக்கான்டா. அழகன்! அழகன்!!

அன்; (சந்தோஷத்துடன்) தம்பியாப்பா.... அவனைப் பார்க்கணும்னு ரொம்ப ஆசையாய் இருக்கப்பா....

(நர்ஸ் மீண்டும் வெளியே வருகிறாள்)

நர்ஸ்: தாய் உயிருக்கு ஆபத்து மிஸ்டர் ஆபத்சகாயம் பிள்ளை.

ஆபத்: ஆபத்தா? ஐயையோ! என் அப்பனே! ஆபத் பாந்தவா!! அனாத ரட்சகா!!!

நர்ஸ்: அந்த அம்மா உங்க இரண்டு பேரையும் பார்க்க ணும்னு விரும்புறாங்க.

ஆபத்: இதோ வந்து விட்டோம். டேய் அன்பா, ஓடியா ஓடியா. (பரபரப்புடன் இருவரும் அறைக்குள் செல்கின்றனர்)

குண: (அன்பனை அழைத்து அணைத்தவாறே) அன்பா, என் கண்ணு. (குழந்தையைக் காட்டி) இந்தா பார்த்தியா

உன் தம்பியை? பாவம் தாயில்லாப் பிள்ளையாகப் போகிறான். நான் என்ன பாவம் செஞ்சேனோ, அவனைச் சீராட்டிப் பாராட்டி வளர்க்க எனக்குக் கொடுத்து வைக்கலே. உன்னை நான் எவ்வளவோ அன்பும் அருமையுமாய் வளர்த்தேன். இவனுக்கு அந்த பாக்கியமில்லே. அப்பா அடிக்கடி வயலுக்குப் போயிடுவார். நீதான் அவனை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக் கொள்ளணும். வேலைக்காரங்களை நம்பி பிள்ளையை ஒப்படைச் சால் ஏதோ கடமுறைக்குச் செய்வாங்களே தவிர உள்ளன் போடே ஒண்ணும் செய்ய மாட்டாங்க. தம்பி இனிமே உன் பொறுப்பு அவன் கண் கலங்காமல் கவனிச்சுக் கொள்ள வேண்டியது உன் கடமை. அவனை வளர்த்துத் திருத்தி ஆளாக்க வேண்டியது உன் பாரம். அவன் சந்தோஷமாய் இருந்தால்தான் என் ஆத்மா சாந்தியடையும், தெரிஞ்சுதாடா கண்ணு.

அன்: (அழுதவாறே) நல்லதம்மா. அவசியமானால் என் உயிரைக் கொடுத்துகூட அவனைக் காப்பாத்துறேனம்மா. இது சத்தியம். (அன்னைக்குக் கையடித்து சத்தியம் செய்து கொடுக்கிறான்)

(குணபூஷணி மக்கள் இருவரின் கன்னங்களிலும் மாறி மாறி முத்தமிடுகிறாள். பிறகு கணவன் முகத்தை அன்பு ததும்பப் பார்த்தவண்ணம் ஆவி துறக்கிறாள், ஆபத் சகாயம் பிள்ளையும் அன்பனும் அழுது புலம்புகின்றனர்)

[**திருப்புக் காட்சி**]

காட்சி 3.

இடம்: திருமண வீடு.

காலம்: காலை.

பாத்திரங்கள்: அன்பன், அழகன், சாவித்திரி.

(மூவர் கண்களிலும் நீர்வழிகிறது)

அன்: (கண்களைத் துடைத்துக்கொண்டு)....ஆம்!....அன்று அருமை அன்னைக்கு நான் அளித்த ஆணையை ஓரளவு நிறைவேற்றி விட்டேன். (சாவித்திரியை நோக்கி) அம்மா சாவித்திரி, உனக்கு நான் அதிகம் சொல்லத் தேவையில்லே. நீயும் உயர்ந்த குடும்பத்தில் உதித்த உத்தமி

"தற்காத்துத் தற்கொண்டார் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்"

என்ற வள்ளுவர் வாக்கையே வாழ்க்கைப் பிரமாணமாக வைத்துக்கொள். அதுவே போதும்.

(சம்மதத்திற்கு அடையாளமாக சாவித்திரி தலையை அசைக்கிருள். அழகனும் சாவித்திரியும் அன்பனிடம் விடை பெற்றுச் செல்கின்றனர்)

[திரை]

காட்சி 4

இடம்: சாலையோரமாய் உள்ள பாழடைந்த மண்டபம்.

காலம்: மாலை.

பாத்திரங்கள்: நஞ்சப்பன், சொர்ணம், அன்பன்.

(அன்பன் வயல் வெளியிலிருந்து சாலைவழியே வீட்டுக்கு வந்துகொண்டிருக்கிருன். வழியில் ஒரு பெண்ணின் பரிதாபகரமான அலறல் அவன் காதில் விழுகிறது)

பெண் குரல்: ஐயோ, இந்த அனுதையைக் காப்பாற்ற யாரும் இல்லையா?

(அன்பன் அருகில் இருந்த பாழும் மண்டபத்திற்கு ஓடிச் சென்று பார்க்கிருன். நஞ்சப்பனின் இரும்புப் பிடியில் ஒரு இளம்பெண் திணறித் திமிறிக் கொண்டிருக்கிருள்.)

அன்: (ஆத்திரத்தோடு) அயோக்கியப் பதரே, ஒரு அனுதை அபலைப் பெண்ணிடமா உன் ஆண்மையைக் காட்டுகிருய்?

நஞ்: அதைக் கேட்க நீயாரடா?....அன்பானந்தா, அனுவசியமாய் என் ஆத்திரத்தைக் கிளப்பி அவதிக்குள்ளாகாதே.

அன்: மடையா, மரியாதையாய்ப் போய்விடு.

நஞ்: மறுத்தால்?

அன்: மானம் மலையேறி விடும். மண்டை சிதறிப் போகும்.

நஞ்: ஊம்ஹூம்.... கொக்கென்று நினைத்தாயோ கொங்கணவா?

(என்று சொல்லிக் கொண்டே அன்பன் மீது பாய்கிருன். இருவருக்கும் பலத்த கைகலப்பு ஏற்படுகிறது. முடிவில் நஞ்சப்பன் தோல்வியுறுகிருன்.)

நஞ்: (நஞ்சப்பனைத் துரத்தியவாறு) வஞ்சகா! பஞ்சத்தால் துவண்ட பாவைக்கு லஞ்சம் கொடுத்து மஞ்சத்தில் கொஞ்ச எண்ணுகிருய், நெஞ்சத்தில் கிஞ்சித்தும் ஈரமின்றி. தஞ்சமாக நான் வந்து தடுத்திரா விட்டால் இந்தப் பஞ்சையின் மானம் என்ன ஆவது?

நஞ்: டேய் சீர்திருத்தச் சிங்கமே! நெருப்புடன் நெருங்கி விளையாடி விட்டாய். இந்த நஞ்சப்பனையா மிஞ்ச எண்ணிஞய்? இன்னும் கொஞ்ச நாளில் உன்னைக் கெஞ்ச வைத்து வஞ்சம் தீர்க்கிறேன் பார். உன் குடும்பத்தையே சிதைத்துச் சிதறடித்துச் சித்ரவதை செய்யா விட்டால் என் இனத்துக்கு இழுக்குத்தேடியவனுவேன்.

அன்; உன்னுல் ஆனதைப் பாரடா அற்ப நாயே. களங்கமற்ற கன்னியரின் கற்பைக் கசக்கக் கருதும் உன் போன்ற கல் நெஞ்சக் காமுகர் கூட்டத்தைக் கருவறுக்க வேண்டும்.

(நஞ்சப்பன் உறுமியவாறே வெளியேறுகிருன்)

(அன்பனும் பெண்ணும் சாலைவழியே ஊரை நோக்கி வந்து கொண்டிருக்கின்றனர்.)

அன்: யாரம்மா நீ?

பெண்: ஐயா, நான் ஒரு அனுதை. ஆதரவற்ற அபலை....சிறு வயதிலேயே தாயை இழந்துவிட்ட என்னை அன்பும் அருமையுமாய் வளர்த்து வந்த அப்பாவும் அகால மரணமடைந்தார். என் இளமை உலகில் நிர்ப்பயமாய் வாழ இடையூருயிருந்து. சாகத் துணிந்து வந்தேன். அங்கேயும் இந்த அனுமதேய அற்பனின் அட்டகாசம்!

அன்; உங்க அப்பா யாரம்மா?

பெண்; அவர் பெயர் கோவிந்தசாமி பிள்ளை.

அன்: (திடுக்கிட்டு) யார்? கோவில்தெரு கோடிவீட்டு கோவிந்தசாமி பிள்ளையா? அவர் பெண் சொர்ணமா நீ? அட பாவமே அவர் இறந்தா போய்விட்டார்?

பெண்: ஆமாம். ஏன் உங்களுக்கு அவரைத் தெரியுமா?

அன்: தெரியுமாவாவது? (இளமை நினைவுகள் மனதில் பளிச்சிட) அன்றைக்கு ஒருநாள் ஆற்றில் ஒரே வெள்ளம், கரை புரண்டு ஓடியது நான் படித்துறையில் குளித்துக் கொண்டிருக்கும்போது நழுவி ஆற்று நீரில் அடித்துக்கொண்டு போகப்பட்டேன். அவர்தான் தன் உயிரையும் திரணமாக மதித்து ஆற்றில் நீந்தி வந்து என்னைக் கரை சேர்த்தார்........அவர் செய்த உதவிக்கு பதிலுதவி செய்ய இதோ ஒரு வாய்ப்பு....சொர்ணம், இனி நீ என் வீட்டிலிருக்கலாம்.

சொர்ணம்: (திடுக்கிட்டு) என்ன?

அன்; ஆம். என் தங்கையைப் போல,

சொர்: (தயங்கியவாறே) ஆகட்டும் அண்ணு.

(அழகனின் கார் எதிர்ப்படுகிறது.)

அழ: யாரண்ணு இந்தப் பெண்?

அன்: பாவம் கதியற்றவள்.

அழ; காரில் ஏறிக் கொள்ளுங்களேன். உங்களை வீட்டில் கொண்டு போய் இறக்கி விட்டுப் போகிறேன்.

அன்: வேண்டாம் அழகா. இன்னும் கொஞ்ச தூரம்தானே, நாங்கள் நடந்தே போய் விடுகிருேம்- நீ போ. பாவம் சாவித்திரி தனியாய்க் காத்துக் கொண்டிருப்பாள்,

அழ: சரி அண்ணு. (அழகன் காரை ஓட்டிச் செல்கிருன். அன்பனும் சொர்ணமும் ஊரை நோக்கிச் செல்கின்றனர்.)

(காரில்)

அழ: (தனக்குள்) அண்ணு ஒரு இளம் பெண்ணுடன்! அதுவும் தனிமையில்........ ஒரு வேளை........செச்சே...., இருக்காது என் அண்ணுவா? No! No! No! Nonsense.

[திரை]

காட்சி 5.

இடம்: நஞ்சப்பனின் உல்லாச விடுதி.

காலம்: இரவு 8 மணி.

பாத்திரங்கள்: நஞ்சப்பனின் நண்பர்கள், நஞ்சப்பன், அழகன் முதலானோர்.

(நண்பர்கள் குடித்து வெறித்துக் கூத்தடிக்கின்றனர்.

வீரப்பன்: மது ....ஹஹ் ஹஹ் ஹஹ்ஹா! மதியையும் மனதையும் புனிதமாக்கும் மகா மனோரம்மிய மது. டேய் பொன்னப்பா, போடப்பா இன்னொரு கிளாஸ்.

(பாடுகிருன்.)

'போடப்பா ஒண்ணரை,
பூப்போட்ட கிளாஸிலே.'

பொன்: (மதுவை கிளாஸில் ஊற்றியவாறே) ஏது, நண்பர் நஞ்சப்பனை இன்னும்காணுேமே?

செல்வம்: எங்கேயானும் தரிசனத்துக்குப் போயிருப்பான்.

வீரப்: அது என்னடா அது தரிசனம்?

செல்வம்: ஆத்தோரத்திலே.... குளத்தங்கரையிலே அப்படி இப்படி ஏதாவது அத்தது அலேஞ்சது........

வீரப்: ஓஹோ........

(நஞ்சப்பனின் திடீர்ப் பிரவேசம்)

பொன்: வாப்பா வா! உனக்கு ஆயுசு அறுபது.

வீரப்: ஏன் பாக்கி நாற்பது எங்கேடா போச்சு? ரேஷன் பண்ணிட்டியா?

பொன்: நம்ம நாட்டிலே மனுஷன் அறுபது வருஷம் உயிரோடே இருக்கிறதே குதிரைக் கொம்பாயிருக்கு. தப்பித் தவறி இருந்துட்டா சஷ்டியப்த பூர்த்தி அது இதுன்னு ஜமாய்ச்சுத் தள்ளிடறுங்க என்னமோ எவரஸ்டை எட்டிப் பிடிச்சுட்டது மாதிரி. அதுதான் அப்படிச் சொன்னேன்.

நஞ்: சீ! உனக்கு எப்போ பார்த்தாலும் விளேயாட்டுதான் சமய சந்தர்ப்பமே தெரியாது.

வீரப்: ஏம்பா இப்படி ருத்ர மூர்த்தியாய் இருக்கிருய்? போன இடத்திலே ஒண்ணும் கிடைக்கலியோ?

பொன்: கிடைக்காம என்ன? ஏதாவது பலமாய்க் கிடைச்சிருக்கும்............

நஞ்: சும்மாயிருடா இடியற்...............அந்த சீர்திருத்தச் செம்மல்................

வீரப்: யாரு?

நஞ்: அதுதான் அந்த அன்பானந்தன்.

பொன்: ஓ! பண்ணேயார் மகனு?...........இப்ப விஷயம் ஒரு மாதிரியா புரிஞ்சுது.

நஞ்: அந்த சீர்திருத்த வாதியின் குடும்பத்தைச் சீர்குலேக்க வேண்டும். அதற்கான வழி உடனே வகுத்தாக வேண்டும்.

வீரப்: பூ! இதுதானு பிரமாதம்? நீ ஒன்றுக்கும் கவலேப் படாதே. புரட்டு நமது யுத்த அகராதியை. அலசு நமது சாணக்கிய முறைகளே. 'அடுத்துக் கெடுத்தல்' 'ஆசைகாட்டி மோசம் செய்தல்' 'கொல்லேப்புறமாய் நுழைதல்' 'மறைவில் இருந்து தாக்குதல்' 'எட்டினுல் குடுமியைப் பிடித்தல்' 'எட்டாவிட்டால் காலில் விழுதல்' 'துரோகிகளேத் தத்தெடுத்தல்' 'விபீஷணர்களே' உற்பத்தி செய்தல் இவைகளில் எதைத் தேர்ந்தெடுக்கிருய்?.

(நஞ்சப்பன் காதிற்குள் ஏதோ ஓதுகிருன்)

நஞ்: (துள்ளிக்குதித்து) சபாஷ் வீரப்பா. சரியான யோசனே................டேய் அன்பானந்தா! உன் ஆட்டத்துக்கும், பாட்டத்துக்கும் உடனே ஒரு முடிவு கட்டுகிறேன் பார்!

[திரை]

காட்சி 6.

இடம்: ஆற்றங்கரையை அடுத்த நந்தவனம்.

காலம்: மாலே.

பாத்திரங்கள்: அழகன் சாவித்திரி.

(அழகனும் சாவித்திரியும் இயற்கைக் காட்சிகளே ரஸித்த வண்ணம் ஆனந்தமாய்ப் பொழுது போக்குகின்றனர்)

சாவி: இயற்கையின் எழில் பூத்துக் குலுங்கும் இன்பமயமான காட்சிகள்.... இல்லேயா அத்தான்?

அழ: ஊஹூம்! இயற்கை நங்கை நல்லாளே இப்பொழுது எனக்கு ரஸிக்கத் தோன்றவில்லே கண்ணே.

சாவி: என்ன? உண்மையாகவா?

அழ: ஆம்! அவளேக்காட்டிலும் அழகிய ஆரணங்கு என் அருகில் இருப்பதால்,

சாவி; (கொஞ்சலாக) போங்கள் அத்தான்! உங்கள் குறும்பு இருக்கட்டும், அதோ பாருங்கள்- மலேவாயில் விழுந்து கொண்டிருக்கும் மாலேக் கதிரவனின் மஞ்சள்நிறக் கிரணக் கற்றைகள் மனோ ரம்மியமாயில்லே?

அழ: (உதட்டைப் பிதுக்கியவாறு) இல்லே. மாசற்ற உன் முழுமதி முகத்தில் படர்ந்திருக்கும் மந்தஹாஸத்தின் மகிமையைவிட மகா மட்டம் அது.

சாவி: அழகாய்த் தவழ்ந்தோடும் ஆற்று நீரின் சலசலப்பு செவிகளுக்கு ஆனந்தமாயிருக்கிறதல்லவா?

அழ: (அலட்சியமாக) சிந்தையை சிலிர்க்கச் செய்யும் உன் சிரிப்பொலியை விடவா?

சாவி: மணங்கமழும் மல்லிகை மலர்களின் மாண்பு?

அழ: (சட்டென்று) பளபளக்கும் உன் பல்வரிசை பழித்துவிடும் அவற்றை.

சாவி: நெளிந்தோடும் தென்றல் நெஞ்சை நெகிழச் செய்கிறது அத்தான்.

அழ: (முகத்தை சுளித்துக்கொண்டு) இல்லவே இல்லை. உன் பவள இதழோரங்களில் நெளிந்து மறையும் இள நகையைத்தான் எனக்கு அது நினைவூட்டுகிறது.

சாவி: அதோ மீன்கள் ஆற்று நீரில் துள்ளிக் குதிப்பதைக் கவனித்தீர்களா?

அழ: உன் நீள் விழிகளைக் கண்டுவிட்ட ஆனந்தம் அவற்றிற்கு

சாவி: போதும் அத்தான் பரிகாசம்.

அழ; பரிகாசமில்லை கண்ணே! பத்தினித் தெய்வத்துக்குப் பண் பாடுகிறான் பக்தன். இதோ பார் சாவித்திரி, அருமையான அல்வா அருகில் இருக்க அற்பமான அவலைத் தேடி ஆராவது அலைவானா? மல்கோவா மாம்பழம் மடியில்இருக்க, வீணாக விளாம் பழத்தை விரும்பிச் செல்வானா? மதியின் மகத்தான ஒளியின் முன் மங்கிய விளக்கொளி சோபிக்குமா?

சாவி: ஏது? காதல் ரஸத்தோடு ஹாஸ்ய ரஸத்தையும் கலந்து அள்ளிக் கொட்டுகிறீர்களே.

அழ; சாவித்திரி, திகட்டாத தீஞ்சுவைக்கனி நீ. எல்லையில்லா எழிலோவியம்; அணையாத அன்புச் சுடர்; அழிவிலா அரும் செல்வம்....

சாவி: உம் அப்புறம்?

அழ: என் வாழ்க்கை வானிற் தோன்றிய உதய தாரகை நீ....சாவித்திரி!

சாவி: (மெய்ம்மறந்த வண்ணம்) அத்தான்!

[***திரை***]

காட்சி 7.

இடம்: அழகாபுரி வயல்வெளி.

காலம்: மாலை.

பாத்திரங்கள்: அன்பன், அழகன், பண்ணையாட்கள் முதலானோர்.

(அன்பன் வயல் வேலையை மேற்பார்த்துக் கொண்டு நிற்கிறான். பண்ணையாள் ஒருவன் ஓடி வருகிறான்.)

பண்ணையாள்: எசமான்!

அன்: என்னப்பா?

பண்: நம்ம குப்பக் கவுண்டன் இல்லீங்க?

அன்: ஆமாம்.

பன்: அவன் பாட்டுக்குத் தன் தலைக்குத் தண்ணி கட்டிக்கிட்டு இருந்தான். ஏரியிலேதான் தண்ணி ரொம்ப வடிஞ்சு போச்சுங்களே. இன்னும் பத்து நாளைக்குத் தாக்கு புடிச்சால் பெரிய காரியமுங்க.

அன்; அதுக்கு? வருண ஜபம் பண்ணப் போறியா?

பண்: நீங்க ஒண்ணு எசமான். நமக்கே தண்ணிக்குத் தகராறு. அதிலே இவன் வேறெ கொண்டு போய்ட்டால்?

அன்: அதுக்கு நீ என்னடா பண்ணினே?

பண்: நான் மறிச்சுப் புட்டேனுங்க.

அன்; ஒஹோ மறிச்சுப் புட்டியா?

பண்; ஓ! பின்னே விடுவேனுங்களா?

அன்: மகா பெரிய மனுஷன்டா நீ. சீ முட்டாள். ஏரி எல்லாருக்கும்தானேடா சொந்தம். நமக்கு இருக்கிற பூமிக்கு நாலு காணி தீஞ்சு போய்ட்டால்தான் என்ன, குடியா முழுகிப் போயிடும்? அவனுக்கிருக்கிறது ஒரே காணி. அதுவும் காய்ஞ்சு போய்ட்டால் பாவம் புள்ளை குட்டிக்காரன் கஞ்சிக்கு என்னடா பண்ணுவான்? நமக்காவது கிணறு எஞ்சின் அது இதுன்னு இருக்கு. அவனுக்கு ஏரியை விட்டால் வேறே என்னடா போக்கு இருக்கு. எல்லாப் பெரிய மனுஷங்களாட்டம் என்னையும் நினைச்சுட்டியா என்ன? போடா, உடனே போய் வாய்க்காலைப் புடிச்சிக் கொடு....உம்....ஓடு.

(பண்ணையாள் ஓடுகிறான்)

(மற்றொரு நபர் தயங்கித் தயங்கி அன்பனிடம் வருகிறான்)

அன்: யாரப்பா நீ? இங்கே வா.

வந்தவன்: சாமி தீண்டாதவனுங்க.

அன்: ஏய்.... ஏய்.... என்னவன்?

வந்: வந்து.... வந்து.... திராவிடனுங்க.

அன்: உம். அப்படிச் சொல்லு. இப்போதாவது தெரிஞ்சுதே. முதல்லே என்னமோ சொன்னியே. ஏம்பா உன்னைத் தொட்டுட்டால் என்னதான் பண்ணிடுமாம்? (அவனைத் தொடு

கிருன்) பாவம் உன்னைச் சொல்லி என்ன புண்ணியம்? தீண்டாமையை ஒழிக்கணும்னு தொண்டை கிழியக் கத்துருங்க. பத்திரிகையிலே பத்தி பத்தியா, பக்கம் பக்கமா எழுதித் தள்ளுருங்க. சட்டம் வேறே போட்டுடருங்க. இந்தப் புண்ணியவான்களையே தொட்டுட்டால் தீட்டு, வீட்டுக்குள்ளே காலடி வச்சுட்டால் தோஷம். உம். நடைமுறையிலே எல்லாம் ஏட்டுச் சுரைக்காய்தான். அது சரி, உனக்கு என்னப்பா வேணும்?

வந்: சாமி........

அன்: கோயிலிலே.... 'அய்யா'ன்னு அழகாய்க் கூப்பிடு.

வந்: (குழறியவாறு) சாமி.... அய்யா.... சாமி.... வந்து அய்யா. அஞ்சு ஆறு வருசமா மானங் காஞ்சதிலே, பாடுபட்டும் புண்ணியமில்லாமப் போச்சுங்க. செய்நுத்திச் செலவுக்கும், கஞ்சிக்கு வாங்கின கடனுக்குமே என் முக்கால் காணியும் போயிடுச்சிங்க. சர்க்கார் புரம்போக்கு நிலம் கால் காணியைக் கொத்திக் கொழறி நூறு ரூபாய் வரைக்கும் செலவு பண்ணித் திருத்தி வச்சிருந்தேன். அதையும் யாரோ தியாகியாம்; அவருக்குப் பிடுங்கிக் கொடுத்துட்டாங்க. ஏதும் கூலி நாலிக்குப் பாடு படலாம்னு, அதுக்குக் கூட வழி இல்லிங்க. நம்ப பண்ணையத்திலே ஏதாவது பொழப்பு........

அன்: மண்ணுங்கட்டி!

(வந்தவன் திடுக்கிடுகிருன். பண்ணையாள் மண்ணுங்கட்டி ஓடி வருகிருன்.) இவன் இண்ணையிலே இருந்து நம்ப பண்ணையத்திலே வேலை செய்யட்டும்.

மண்: சரிதானுங்க எசமான்.

(வந்தவன் வேலை செய்யப் போய்விடுகிருன்)

அன்: நாட்டிலே உழைக்க வகை கிடையாது. அப்படியே அபூர்வமாகக் கிடைத்தாலும் அதற்கேற்ற ஊதியம் கிடைப்பதில்லை. செச்சே.... மோசம்....! மோசம்!! (சோணுசலம் வருகிருன்) டேய் சோணுசலம், தம்பி இன்னும் வரலையே.

சோணு: எசமான்! இளையவரு வந்துட்டாருங்க; மோட்ட காரு பொப்பாத்து சத்தம் கேக்குதுங்க.

அன்: பொப்பாத்தா?

(அழகன் கார் ஹார்ன் ஒலிக்கிறது)

சோணு: ஆமாங்க. அதோ பாத்திங்களா? பொப்பாய்ங்! பாய்ங்!! பாய்ங்!!! பொப்பப்பேபு, பேபு, பாய்ங் பாய்ங். (செய்கை காட்டுகிருன்)

அன்: ஓ 'ஹார்ன்' ஐச் சொல்றியா? ஹஹ் ஹஹ் ஹா.

(விழுந்து விழுந்து சிரிக்கிறான்)

(அழகன் கார் வயலோரமாய் வந்து நிற்கிறது. அன்பன் அவனை எதிர்கொண்டழைக்கிறான்)

அன்: வா அழகா? ஏன் இத்தனை தாமதம்? நாலுமணிக்கே வர்றேன்னு சொன்னியே.

அழ: வந்து, வந்து....ஒண்ணுமில்லே அண்ணா. வழியில் கார் கொஞ்சம் மக்கார் பண்ணியது.

அன்: (அர்த்த புஷ்டியுடன்) சரிதான் தெரிகிறது புதுக் காரல்லவா? அப்படித்தான் இருக்கும். (சற்று கேலியாக) சாவித்திரி சௌக்கியம்தானே?

அழ: (லஜ்ஜையுடன்) சௌக்யம்தான் அண்ணா.

அன்: இதோ பார்த்தாயா? இந்த டியஸல் இஞ்சினைப் பட்டணத்திலே இருந்து வரவழைச்சு இப்பதான் ஒருவாரம் ஆகிறது. விவசாயிகளுக்கு இது ஒரு அற்புத வரப்பிரசாதம். நாலு ரூபாய் அடக்கம் ஆகிறது.

பண்ணையாள்: நாலாயிரத்தையும் நாலுமாசத்திலே பெரட்டிடலாமுங்க. 'அவர்'க்கு (hour) (மணி) இரண்டு ரூபாயிண்ணு வாடகைக்கு எறைச்சாலே போறுமுங்களே.

அன்: முட்டாள்! எல்லாப் பெரிய மனுஷங்களாட்டம் என்னையும் ஏழை பாழைங்களைக் கொள்ளையடிக்கச் சொல்றியாக்கும்? உனக்கு நிதி மந்திரி உத்தியோகம் கொடுக்கணும்டா. நல்லா கொத்துக்கு மத்தளம் அடிப்பாய்.

அழ: அண்ணா ஒரு சந்தேகம்.

அன்: என்ன தம்பி அது?

அழ: வெல்லமும், மணிலாவும் ஏகப்பட்ட விலைக்கு விற்கிறதாமே. பத்துகாணி கரும்பும், பத்துகாணி மணிலாவும் போட்டால் என்ன அண்ணா?

பண்ணையாள்: நல்ல ரோசனைங்க. பண்ணையத்து சாப்பாட்டுக்கு வருஷத்துக்கு பத்து காணி நெல் வெள்ளமுங்க. எங்கிட்டே கேட்டால் பாக்கி பூராத்திலேயுமே கரும்பும் மல்லாக் கொட்டையும் போட்டுடலாமுங்க.

அன்பன்: டேய் சும்மா இருடா. அப்புறம் அய்யா மண்ணைத் திம்பாரு! (அழகனிடம்) ஏன் தம்பி நீ படிச்ச பையன், நீயே இப்படிச் சொல்றியே. லாபத்தை மட்டும் பார்த்தால் போதுமா? ஆள்காரங்களுக்கு கூலி கூட தானியமாய்க் கொடுக்

கிறதுதான் நல்லது. அதோடே, மிஞ்சுகிற தானியத்தை ஏழைகளுக்குக் குறைஞ்ச விலேக்கு விற்கணும். அதை விட்டுட்டு ஓட்டிக்கு இரட்டியா லாபம் சம்பாதிக்கிறதுக்காக எல்லாப் பெரிய மனுஷங்களுமே அந்தமாதிரி வியாபாரப் பயிர் செய்துட்டால் அப்புறம் தானிய விலே விஷம் போலத் தானே ஏறி விடுகிறது. பிறகு பஞ்சம் ஏன் வராதுன்னு கேட்கிறேன். சொல்லப் போனல் பஞ்ச காலத்திலே எல்லாம் வியாபாரப் பயிர்களுக்கு ஓரளவு தடை விதிக்கணும் தெரிஞ்சுதா?

அழ: சரிதான் அண்ணு....நாளேயிலிருந்து நானும் வயலுக்கு வருகிறேனே.

அன்: வேண்டாம் அழகா. நீ புதுமாப்பிள்ளே. அவசியமானல் அப்புறம் பார்த்துக் கொள்ளலாம் சரி! சரி!! கருக்கல் ஆகிவிட்டது. சாவித்திரி காத்துக்கொண்டிருப்பாள். நீ போய் வா. (அழகன் விடைபெற்றுச் செல்கிருன்) பத்திரமாய்ப்போ! வரப்பில் வழுக்கி விழுந்துவிடாதே.

(அழகன் போன திசையையே சற்றுநேரம் வெறித்து நோக்கி விட்டுத் திரும்புகிருன் அன்பன்.)

[திரை]

காட்சி 3.

இடம்: அழகாபுரி ரஸ்தா.

காலம்: மாலே.

பாத்திரங்கள் அழகன், நஞ்சப்பன்.

(அழகனின் கார் டயர் பங்ச்சர் ஆகிவிடுகிறது. அழகன் அதைப் பழுது பார்த்துக் கொண்டிருக்கிருன் நஞ்சப்பன் அந்த வழியே நடந்து வருகிருன்)

நஞ்: (அழகனே அணுகி) ஹல்லோ பிரதர்! (what's wrong?) வாட்ஸ் ராங்?

அழ: டயர் பங்ச்சர் ஆகிவிட்டது. Give us a hand please will you?

நஞ். Sure. (ஷுர்) (நஞ்சப்பன் ஒத்தாசை செய்கிருன்.)

அழ: (ரிப்பேர் ஆகி முடிந்ததும்) Thanks a lot மிஸ்டர் நீங்க யாரு? எங்கேபோகணும் சொல்லுங்க. I shall give you a lift.

நஞ்: (விருப்பமில்லாதவன்போல் நடித்து) No Thanks.

அழ: பரவாயில்லே, சும்மா சொல்லுங்க. கொண்டாந்து விட்டுட்டுப் போறேன்.

நஞ்: அப்போ சரி. மோட்டுத்தெரு மூணும் நெம்பர் வீட்டுக்கு விடுங்க.

(கார் புறப்படுகிறது)

(காரில்)

நஞ்: என்னே உங்களுக்குத் தெரிந்திருக்காது. நான் இது வரையிலே 'Bombay' யிலே இருந்தேன் இங்கே வந்து இப்பதான் ஆறு மாசமாச்சு. நான் இந்த ஊருக்கு வந்தப்போ நீங்க 'College' லே இருந்திங்க.

அழ. அப்போ உங்களுக்கு சொந்தக்காரர் யாராவது.......?

நஞ்: ஆமாம், வீரப்பனுக்கு கொஞ்சம் தூரத்து உறவு முறைக்கு மாமா மகன் வேணும்.

அழ: ஓ! ஐ ஸீ!

(**திரை**)

காட்சி 9.

இடம்: நண்பர்களின் உல்லாச விடுதி.

காலம்: மாலே

பாத்திரங்கள்: நஞ்சப்பனின் நண்பர்கள், நஞ்சப்பன் அழகன் முதலானேர்.

(நண்பர்கள் குடித்து வெறித்து இருக்கிருர்கள். நாட்டியமாது ஒருத்தி அவர்கள் முன்னிலேயில் நடனமாடுகிருள்)

முத்தையா: (போதையில்) அதோ என் முன் அற்புத நடம் புரியும் அழகு மயில் (பாடுகிருன்)

'யாரோ? இவள் யாரோ? எந்த ஊரோ? என்ன பேரோ? அறியேன்'

வீரப்பன்: இவங்கதான் நடன கலா ராணி, நிருத்தியச் சக்ரவர்த்தினி மிஸ். கஜலட்சுமி தேவீ.

பொன்: ஆகா! பெயருக்கும் உருவத்துக்கும் மிகவும் பொருத்தம்.

முத்தையா: அவள் மேடையிலா ஆடுகிருள்? அல்ல, அல்ல. என் இதய பீடத்தில் அல்லவா திருநடம் புரிகிருள்? அவளது ஒவ்வொரு அங்க அசைவும் என் இருதயத்தில் இன்ப லாகிரியை எழுப்புகிறதே.

பொன்: நாசமாப் போச்சு! டோஸ் அளவுக்கு மீறிட்டாப் போலே இருக்கே.

(‘காலைத்தூக்கி நின்ருடும்’ என்ற அடிக்கு அபிநயம் பிடிக்கக் காலைத் தூக்கிய கஜலட்சுமி கால் நழுவிக் கீழே விழுகிருள். வீரப்பன் அவளைத் தூக்கி விட்டு வீட்டுக்கு அனுப்பி வைக்கிருன்)

பொன்: நாசமாப் போச்சு! இருந்து இருந்து இந்த சரக்கை எங்கேயப்பா பிடிச்சே? சகிக்கலியே!

வீர: என்னப்பா செய்யறது? விரலுக்குத் தகுந்த வீக்கம். பணத்துக்குத் தக்கபடிதானே பாவை. உன் நொள்ளை பத்து ருபாய்க் காசுக்கு லலிதா பத்மினி வருவாங்களா என்ன? நாமோ ....சேர்ந்ததெல்லாம் சிவலிங்கம் மாதிரி, அத்தனை பேரும் அன்னக் காவடிங்களும் வெங்கம்பட்டி ஜமீன்தார்களும் தானே. இந்த லட்சணத்திலே பேர்களுக்கு மட்டும் குறைச்சல் இல்லை. பொன்னப்பன்., ...தங்கையா,-...........முத்தையா,................ செல்வம்............கோடீஸ்வரன்........பேர்களுக்கும் ஆள்களுக்கும் துளிகூட சம்பந்தம் கிடையாது. என்னமோ சொல்வாங்களே, நல்ல கண்ணுப் பிள்ளைக்குக் கண்ணே தெரியாதாம். ஆரோக்கிய சாமிக்குத் தீராத வயித்து வலியாம். அந்தமாதிரி...............

(கார் ஹார்ன் சப்தம் கேட்கிறது. அழகனும் நஞ்சப்பனும் காரில் இருந்து இறங்குகின்னர்)

நஞ்: (அழகனிடம்) வா அழகா, இதுதான் நமது Recreation Club (இருவரும் உள்ளே பிரவேசிக்கின்றனர்)

அழ: (நஞ்சப்பனின் நண்பர்கள் மது அருந்துவதைக் கண்டு கோபாவேசத் தோடு) இதெல்லாம் என்ன?

பொன்: இதுவா? (பாடுகிருன்) ‘தேடக் கிடைத்திடா தெய்வீக மருந்து’

நஞ்: சீ! சும்மாயிருடா. (பொன்னனை முறைத்து விட்டு அழகனிடம் திரும்பி) அழகா, இதற் கென்ன இத்தனை ஆத்திரப் படுகிறாய்? இது என்ன புலியா? பாம்பா? காப்பி, டீ, கொக்கோ, ஓவல் இந்த 'லிஸ்ட்'லே இது ஒரு டிரிங்க். That's all. அதோடே களைப்புக்கும் கவலைக்கும் கைகண்ட மருந்து.

அழ: ஆமா. இதெல்லாம் உங்களுக்கு எப்படிக் கிடைச்சுது? மது விலக்கு வேறே அமுலில் இருக்கிறதே.

நஞ்: ஆ! அப்படிக்கேளு. சொல்றேன். முன்னாலே எல்லாம், ஊருக்கு ஒரே கடைதான். அதுக்கு லைசென்ஸ் வேறே. இப்போ வீட்டுக்கு வீடு 'Black' லே சரக்கு வந்துடுச்சு- இன்னும் கொஞ்ச நாள் போனால், நம்ம வாயிலே கொண்டாந்து ஊட்டிடுவாங்க! பத்தாக் குறைக்கு பாண்டிச்சேரி வேறே பக்கத்திலேதான் இருக்கு. அங்கே வர்ற Stuff எல்லாம் எங்கே விலையாகுதுன்னு நினைச்சே?

அழ: எவ்வளவோ வருமானம் வர்றதை யெல்லாம் லட்சியம் பண்ணாமே 'Prohibition' ஐ'introduce' பண்ணின தெல்லாம் இதற்குத்தானா?

நஞ்: இப்பதான் என்ன? வருமானம் குறைஞ்சா போச்சுது. மது விலக்குக் குற்றங்களிலே வரும் அபராதப் பணமே போதுமே? இப்போ கள்ளச் சாராயம் காய்ச்சுவது ஒரு கலையாகவே போச்சு நம்ம நாட்டிலே, இந்தத் தொழிலினாலே எத்தனை ஏழை ஜனங்கள் பொழைக்கிறாங்க தெரியுமா?.... நாங்க இந்த குடிசைத் தொழிலை மனப் பூர்வமாய் ஆதரிக்கிறோம். அவ்வளவுதான்........டேய் பொன்னு! பண்ணையாருக்கு ஒரு கிளாஸ் போடுடா.

அழ: ஐயையோ எனக்கா? வேண்டாம்ப்பா. எனக்குப் பழக்கமே இல்லை.

நஞ்: பழக்கப் படுத்திக் கொண்டால் போச்சு.

அழ: நஞ்சப்பா, என்னப்பா இது?

நஞ். That's all right Carry on.

(அழகன் தயங்கியவாறே மது அருந்துகிறான்)

நஞ்: (அழகன் போனதும்) வெற்றி. முதல் வெற்றி, முற்றிலும் வெற்றி. கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்து விட்டது. அவன் குடும்பத்தைக் குடிகெடுக்க சரியான கோடரிக் காம்பு என் கையில் சிக்கி விட்டது.

(ஆரவாரம்)

[*திரை*]

காட்சி 10.

இடம்: ஆற்றங் கரை.

காலம்: மாலை.

பாத்திரங்கள்: செல்லப்பன், சொர்ணம்.

(சொர்ணம் ஆற்றில் தண்ணீர் மொள்ள வருகிருள். அவள் குடம் நழுவி ஆற்றில் மிதந்து செல்கிறது. அச்சமயம் தற்செயலாய் அவ்விடம் வந்த செல்லப்பன் ஆற்றில் நீந்திப் போய் குடத்தை அவளிடம் சேர்ப்பிக்கிருன்)

செல்: (குறும்பாக) கண்களுக்கு அருமையான விருந்து.

சொர்: (நாணத்துடன்) என்ன?

செல்: (சமாளித்துக் கொண்டு) இந்த ஆற்றங் கரைக் காட்சியின் அழகைப் பற்றிச் சொன்னேன்,

சொர்: (எகத்தாளமாக) ஒஹோ அப்படிங்களா? அதுதான் தெரியுதே, ஆள் மூஞ்சியைப் பார்த்தாலே....போக்கிரி.

(செல்லப்பனை ஏறிட்டு நோக்கிய வண்ணம் தயங்கி நிற்கிருள்- இருவர் விழிகளும் ஒன்றை யொன்று கவ்வி காதல் பாஷை பேசுகின்றன. இருவர் உள்ளங்களிலும் காதல் தளிர் விடுகிறது.)

சொர்: (திடுக்கிட்டு) நான் வருகிறேன். அன்பன் அண்ணு தேடுவார்.

செல்: அதற்குள்ளாகவா? அவசரத்தில் வந்த காரியத்தைக் கூட மறந்து விட்டாயே- குடத்தைப் பார். காலி.

சொர்: (அசடு வழிய) ஓ! (நீர் மொள்கிருள்)

செல்: இந்த எழில்மிகு ஏந்திழையை ஏற்கனவே அறிவேன். ஆனல் பெண்ணரசியின் பெயர்தான் ஞாபகம் இல்லை.

சொர்: சொர்ணம்.

செல்: ஆம். சொர்ணம்! சொர்ண விக்ரகத்துக் கேற்ற சொகுசான பெயர். உம்....மறுபடியும் சந்திக்க சந்தர்ப்பம் கிடைக்குமா?

(மௌனம்)

செல்: வருகிற திங்கட் கிழமை பௌர்ணமி. அன்றிரவு முழு மதியின் மோகன ஒளி வீணுய்ப் போவானேன்?.... கொல்லை வெளிக் 'கொட்டாய்'இல் சந்திக்கலாம்.... என்ன?

(மறுபடியும் மௌனம்)

செல்: மௌனம் என்ருல் சம்மதம் என்றுதான் அர்த்தம்.

(மீண்டும் மௌனம்)

(இருவரும் பிரிய மனமின்றிப் பிரிகின்றனர். இந்தக் காட்சியை நஞ்சப்பன் மறைவிலிருந்து பார்த்ததை இருவரும் கவனிக்க வில்லை)

நஞ்: (தனக்குள்) அன்பன் ஆதரவில் சொர்ணம், சொர்ணத்துக்கு செல்லப்பன்மேல் காதல். அடுத்த திங்கட்கிழமை அன்பன் வீட்டில் சந்திப்பு. சரி. சந்தர்ப்பத்தைச் சரியானபடி பயன் படுத்திக் கொள்ள வேண்டும். ஹஹ்ஹஹ்ஹா!

(இடி இடியென்று சிரிக்கிருன்)

[*திரை*]

காட்சி 11.

இடம்: சாலை.

காலம்: மாலை.

பாத்திரங்கள்: அன்பன், அழகன்'

(அழகன் நன்ருய்க் குடித்து விட்டு கால் நடையாக வந்து கொண்டிருக்கிருன். அன்பன் வயலில் இருந்து வரும் வழியில் எதிர்ப் படுகிருன்)

அன்: (பதட்டத்துடன்) தம்பி! அழகா!! ஏனப்பா இந்த அலங்கோலம்? கார் எங்கே?.... ரிப்பேரா?....

அழ; (போதையில்) யாரப்பா நீ....உம்?

அன்: யாரா? இதோ நன்ருய்ப் பார். நான் தான் உன் அண்ணன் அன்பானந்தன். (அழகனை உலுக்கி) தம்பி! தம்பி!!

அழ; போதை சிறிது தெளிந்து திடுக்கிட்டு) ஆ! அண்ணவா? (வெட்கப்பட்டு ஓட எத்தனிக்கிருன்)

அன்: (அழகனைத் தடுத்து நிறுத்தி) தம்பி....நில்! குடிக்கவா பழகி இருக்கிருய்? மக்களை மாக்களாக்கும் மகா கொடிய தப்பா மது, குடிப் பழக்கம் குடி கொண்டு, எத்தனை குபேரர்களைக் குசேலர்களாக்கியிருக்கிறது? எத்தனை குடும்பங்களைக் குலைத்துக் குடி கெடுத்துக் குட்டிச் சுவராக்கிக் குடலெரிய வைத்திருக்கிறது? உடனே அதை விட்டொழித்து விடப்பா.

அழ: (மௌனம்)

அன்: நீ உலகம் அறியாதவன். யாரோ உன்னை வஞ்சித்து விட்டார்கள். அழகா, உன் நண்பர்கள் என்று உறவாடும் நய வஞ்சகர்களின் வலையில் விழுந்து நாசமாகி விடாதே. நாட்டிலே நடமாடுகின்றனர் ஒரு நாசகாலக் கும்பலினர். நெற்றியிலே நீறு. அவர்கள் நெஞ்சிலோ நீசத்தனம். தோற்றத்தில் பசுக்கள். ஆனல் சீற்றத்தில் நாகங்கள். அடுத்துக் கெடுக்கும் அயோக்கியர் அவர்கள். அவர்களது பகல் வேஷத்துக்குப் பலியானவர்கள் பலர். அனைத்தவாறே அடியில் குழி தோண்டுவார்கள். திரை மறைவிலே திட்டம் தீட்டும் தீயவர் அவர்கள்- அவர்களைப் பற்றி மிகவும் எச்சரிக்கையா யிருக்க வேண்டும்.

அழ: (உணர்ச்கிப் பெருக்கோடு) அண்ணு........

அன்: பத்திரமாய்ப் போய் வா... ....இனி இப்படியெல்லாம் செய்யாதே....போ.

(அழகன் தடுமாறியவாறே போகிருன்)

[திரை]

காட்சி 12.

இடம்: அன்பன் கொல்லைவெளி வீட்டின் பின்புற முள்ள தோட்டம்.

காலம்: பௌர்ணமி இரவு.

பாத்திரங்கள்; செல்லப்பன், சொர்ணம், நஞ்சப்பன். அழகன் முதலானோர்.

(செல்லப்பனும், சொர்ணமும் காதல் கேளிக்கைகளில் ஈடு பட்டிருக்கின்றனர்)

செல்: சொர்ணம்! நீ என் காதற் குளத்தில் பூத்த கட்டழகுக் கமலம். வறண்ட என் வாழ்க்கைப் பாலைவனத்தில் குறுக்கிட்ட வற்ருத இன்ப ஊற்று. என் இச்சைக் குகந்த பச்சைக் கிளி.

சொர்: (கேலியாகச் சிரித்தவாறு) பூ, நான் கூடத்தான் நாவல்கள் படித்திருக்கிறேன், சினிமா பார்த்திருக்கிறேன். சொல்லட்டுமா?

செல்: உம்....சொல்.

சொர்: தாங்கள்தான் உணர்ச்சி வெள்ளத்தில் அமிழ்ந்த எனக்கு உறு துணையான தெப்பம். என் காதல் தீபத்தின் தூண்டு கோல், என் மனதுக் கிசைந்த மணாளன். எப்படி?

செல்: சபாஷ் சொர்ணம்! நமது கலியாணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளை விரைவில் செய்து முடிக்கிறேன்.

சொர்: ஏதேனும் இடையூறுகள் ஏற்பட்டால்?

செல்: என் உடல் பொருள், ஆவி அத்தனையும் தத்தம் செய்து உன்னை அடைவேன். இது சத்தியம்.

(செல்லப்பன் கையடித்துக் கொடுக்கிருன். இருவரும் பிரிகின்றனர். நஞ்சப்பனும், அழகனும் சற்றுத் தொலைவில் இருந்து இதை கவனிக்கின்றனர், நஞ்சப்பனின் வஞ்சகத்தால் செல்லப்பனைத் தன் அண்ணன் அன்பன் என்று அழகன் தவறுதலாக எண்ணி விடுகிருன்.)

நஞ்: (அழகனிடம்) பார்த்தாயா உன் அண்ணன் செய்யும் அக்ரமத்தை? உதட்டிலே சீர்திருத்தம், உள்ளத்திலோ கள்ளம். பேருக்கு பிரம்மச்சரியம், கிரியைகளிலோ கிருஷ்ணலீலா.

அழ: (ஆலோசித்த வண்ணம்) நினைத்தேன்....ஆனால்........

நஞ்: ஆனால் என்ன? நினைத்தது நடந்து விட்டது. அதை உன் கண்ணாலேயே பார்த்தும் விட்டாய். உடல், பொருள், ஆவி மூன்றையும் தத்தம் செய்கிறாள்....எப்படி? அவன் உடலையும், ஆவியையும் பற்றி அக்கரையில்லை....ஆனால் 2-வது ஐட்டம் இருக்கிறதே 'பொருள்' அதைப் பற்றிதான் நீ ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும்.

அழ: அண்ணா அப்படிப் பட்டவர் இல்லையே....

நஞ்: இதோ பார் அழகா. எப்பேர்ப்பட்ட நல்ல மனுஷர்களும் சந்தர்ப்ப தோஷத்தினாலே தவறிப் போகிறது சகஜந்தானே. உன் அண்ணன் மாத்திரம் விதி விலக்கா என்ன? அது மட்டுமல்ல. சில பேர் ஆளைப் பார்த்தால் அழகு போலே இருப்பாங்க. வேலையைப் பார்த்தால் வேதனையாய் இருக்கும்.

அழ: எதற்கும் அண்ணாவை நேரில் கண்டித்து ஒரு வார்த்தை கேட்டு விட்டால்?

நஞ்: நீ ஒரு பைத்தியம். தங்கள் தவறுகளை கௌரவமாக ஒப்புக் கொள்கிறவர்கள் யாரும் கிடையாது. உன் அண்ணனிடம் போய்க் கேட்டால் அதனால் அவன் ஆத்திரம்தான் அதிகமாகும்.

அழ: அதற்காக?

நஞ்: முன்னெச்சரிக்கையான ஏற்பாடுகளை உடனே மேற்கொள்ளுவதுதான் சரி-

அழ: ஆமாம். அதுவும் சரிதான். (இருவரும் வீடு திரும்புகின்றனர்)

[திரை]

காட்சி 13

இடம்: ஆற்றங்கரை பங்களா.

காலம்: இரவு.

பாத்திரங்கள்: அழகன், சாவித்திரி, பணிப் பெண் தங்கம்மா.

(சாவித்திரி அழகனின் வருகைக்காக வழி மேல் விழி வைத்து காத்துக் கொண்டிருக்கிறாள். அழகன் பிரவேசம்)

சாவி: ஏன் அத்தான் இன்றைக்கு இத்தனை தாமதம்?

அழ: என் இஷ்டம். எப்பொழுது வேண்டுமானாலும் வரு வேன். அதைக் கேட்க நீ யார்?

சாவி: நான் யாரா? ஏன் அத்தான் என்றைக்கும் இல்லாத படி இப்படி என் மேல் எரிந்து விழுகிறீர்கள்? உங்கள் சுக துக்கங்களில் சம உரிமை கொண்ட உங்கள் மனைவிக்கு இந்த அற்ப சுதந்திரம் கூடவா கிடையாது?

அழ: சம உரிமையும் சர்வ சுதந்திரமும் பெண்கள் ஆண் களுக்குத் தாலி கட்டும் போது பார்த்துக் கொள்ளலாம்.

(தங்கம்மா பிரவேசம்)

தங்: என்னங்க அப்படிச் சொல்றீங்க? அம்மா முழுகாம வேறே இருக்கு நீங்க இன்னமே நேரங் காலம் வீட்டுக்கு வந்து டறதுதான் நல்லதுங்க.

அழ: (கோபம் மறைந்து சந்தோஷம் பொங்க) அப்ப டியா சாவித்திரி? என்னிடம் இது வரை சொல்லவே இல்லையே.

(அழகன் சாவித்திரியின் கன்னத்தில் செல்லமாகக் கிள்ளுகிறான். இதைக் கண்ட தங்கம்மா நாணிக் கோணிக் கொண்டே வெளியேறுகிறாள்)

[திரை]

காட்சி 14.

இடம்: நண்பர்களின் உல்லாஸ விடுதி.

காலம்: மாலை.

பாத்திரங்கள்: அழகனும், நண்பர்களும்.

(அழகன் சிந்தா கிரந்தனாய் அமர்ந்திருக்கிறான்)

நஞ்: அழகா! ஈரத்துணி போட்டுக் கழுத்தறுக்கும் ஈனர் கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள் இந்த நாட்டில். அவர்கள் பட்டியலிலே உன் அண்ணனும் ஒருவன். அவன் வேஷத்தைக் கண்டு வீணாக மோசம் போய்விடாதே.

பொன்: ஆஹா! நூத்திலே ஒரு பேச்சு. அதைத்தானப்பா நானும் உனக்கு அட்வைஸ் பண்ணுவேன். வேஷக்கார ஆஷாட பூதிகளை நம்பி விடாதே.

(பொன்னனை முறைத்து)

நஞ்: டேய் முந்திரிக் கொட்டை, நீ சும்மா இருடா.(அழகனிடம் திரும்பி) தன் ஆசை நாயகி சொர்ணத்துக்கு ஐந்து காணி நஞ்சை நிலம் கொடுத்திருக்கிறான் உன் அண்ணன். உனக்குத் தெரியுமா?

அழ: என்ன? எனக்குத் தெரியாதே!

பொன்; (குறுக்கிட்டு) எப்படித் தெரியும்? தெரிய நியாயமில்லையே....

நஞ்: அது மாத்திர மல்ல. உனக்கு மிகவும் பிரியமான தெற்குத் தெரு தென்னங் கொல்லையில் அவளுக்கென்று ஒரு தனி வீடு கூடக் கட்டிக் கொடுக்கப் போகிறான்.

பொன்; (குறுக்கிட்டு) சரிதான் போ! நல்லா இருக்கே இந்தக் கதை.

அழ: அப்படியா?

நஞ்: ஆமாம். கருணை என்ற பெயரால் காமலீலை நடத்துகிறான் கயவன்.

அழ. பாவி!

நஞ்: இன்னும் போகப் போகப் புரிந்து கொள்வாய் உன் அண்ணன் யாரென்று. அழகா, இதற்கெல்லாம் உடனே ஒரு முடிவு கட்டியாக வேண்டும். களை வளரும் முன் முளையிலேயே கிள்ளி யெறிந்து விட வேண்டும். வெள்ளம் வரும் முன் அணை கோலியாக வேண்டும்

அழ: இதற்கு ஒரு வழி?

நஞ்: ஒரு வழி என்ன? ஒன்பது வழி நான் சொல்கிறேன். பிராண சிநேகிதனுக்கு இந்த அற்ப உதவி கூட செய்ய மாட்டேனா என்ன?

(அழகன் காதுக்குள் ஏதோ ஓதுகிறான்)

அழ: (உற்சாகமாய்) Splendid நஞ்சப்பா! Excellent device உன்னை நான் இதுவரை சரியாகப் புரிந்து கொள்ளவில்லையே.

பொன்: (இடைமறித்து) போகப் போக இன்னும் நன்றாய்ப் புரிந்து கொள்வாய்.

அழ: நான் போய் வருகிறேன்.

(புறப்படுகிருன்)

நஞ்: நான் சொன்னதெல்லாம். நன்ருய் ஞாபகமிருக்கட்டும்,

அழ: O. K.

நஞ்: தாக்ஷண்யம் தன நாசம்.

பொன்: ஆமாம் தனம் நாசம்தான்.

அழ: நான் ஒன்றும் விடப் போவதில்லை.

நஞ்: I wish you success.

அழ: Thank you.

(வெளியேறுகிருன்)

[**திரை**]

காட்சி 15,

காலம்: ஆபத்சகாயம் பிள்ளை வீடு.

இடம்: காலை.

பாத்திரங்கள்: ஆபத்சகாயம் பிள்ளை, அழகன், அன்பன்.

(பண்ணையார் பகவத் கீதை படித்துக் கொண்டிருக்கிருர். அழகன் பிரவேசம். அவன் தலையும் நிலையும் குலைந்து காணப் படுகிருன. மது நாற்றம் அவனிட மிருந்து வீசுகிறது. புகையும் சிகரெட் ஒன்று அவன் வாயில் இருக்கிறது.)

அழ: (ஆவேசமாய்) அப்பா!

ஆபத்: (ஏறிட்டு நோக்கி) யாரது?

அழ: ஏன் தெரியவில்லையோ? உங்கள் மகன் அழகன்தான்.

ஆபத்: ஆபத்சகாயம் பிள்ளை மகனு இந்த அலங்கோலத்தில் இருக்கிருன். சேச்சே, எனக்கு அவமானமாயிருக்கிறதப்பா.... (பெருமூச்சுடன்) ஹூம்....உன் அண்ணன் சொன்னது அத்தனையும் உண்மை தான் போலிருக்கிறது.

அழ: (கோபத்தோடு) ஓ! அதற்குள் கோள் மூட்டி விட்டானு? என் நண்பன் சொன்னது சரிதான். அண்ணன்! ஹூம்! அண்ணனு அவன்? அற்பன்! அதமன்!! அசடன்!!! அயோக்கியன்!!!!

ஆபத்: (குறுக்கிட்டு) அழகா!....

அழ: (தொடர்ந்து) பேரைப் பார். அன்பன்! அன்பு என்பது அணு வளவு கூடக் கிடையாதே அவனிடம்.

ஆபத்: உனக்கென்ன சித்தப் பிரமை பிடித்து விட்டதா என்ன? சதா உன் நலனேயே நாடும் உன் அண்ணனையா தூஷிக்கிருய்? உனக்காகத் தன் சுக போகங்களைத் துறந்த உத்தமனை உன் உடன் பிறந்தவனையா தூற்றுகிருய்? உனக்காக அவன் செய்துள்ள தியாகங்களை நீ சற்று வது சிந்தித்தால் அவனை நிந்திக்க மனம் வருமா? ஆலோசித்துப் பார் அழகா.

அழ: ஆலோசித்துப் பார்த்துத்தான் சொல்கிறேன். ஆதாயம் இல்லாமலா செட்டியார் ஆற்ருேடு போவார்? எல்லாம் காரியமாகத்தான் இருக்கிருன். 'ஓடு மீன் ஓட உறு மீன் வரு மளவும் வாடி இருக்குமாம் கொக்கு' அந்தக் கொக்கைப் போலத்தான் இருக்கிறது உங்கள் மூத்த மகன் போக்கு.

ஆபத்: என்ன சொல்கிருய்? உன் பேச்சு புரியாத நாடக பாணியில் இருக்கிறதே.

அழ: உம்...எப்படிப் புரியும்? எனக்கு எதிராய்ச் சதி செய்து என் பாக சொத்துக்களையும் அபகரிக்கத் திட்டம் தீட்டியிருக்கிருன் அவன். அதற்கு நீங்களும் உடந்தை. இப்பொழுது புரிந்திருக்குமே!

(அன்பன் பிரவேசம். அழகனின் வார்த்தைகளைக் கேட்டுத் திடுக்கிடுகிருன்)

அன்: என்ன வார்த்தை சொல்லத் துணிந்து விட்டாயப்பா?

அழ: ஏன்? உள்ளதைச் சொன்னுல் உடம் பெரிச்சலா? சத்தியத்தைச் சொல்கிறவன் சத்துருவா? இல்லை, கேட்கிறேன்.

அன்: நானு உன் ஆஸ்தியை அபகரிக்க ஆசைப் படுகிறேன்? உடன் பிறந்த உன்னையா நான் வஞ்சிக்க எண்ணுவேன்?

அழ: வேஷம் போட்டு மோசம் செய்வது உன் சூட்சி. அதில் நீ அப்பாவிடம் கோள் மூட்டியதுதான் முதல் காட்சி, தேவையில்லை வேறு சாட்சி.

அன்: என் அருமைச் சகோதரன் அற்பர் சகவாசத்தினுல் அழிந்து போகாமல் விடுவிக்க வழி வகுத்த எனக்கு கோள்காரன் என்ற பட்டமா சூட்டுகிருய்? உன்னைப் பற்றிக் கோள் சொல்வதால் எனக்கு என்னப்பா லாபம்?

அழ: நிறைய இருக்கிறது. அப்பாவுக்கு என் மேல் வெறுப்பு ஏற்படச் செய்வது உன் தீய திட்டத்தின் முதல் கட்டம். அடுத்தது சொத்து பூராவையும் சுருட்டிக் கொள்வது. சரியான சமயம் பார்த்து உனக்கு இடையூருக இருக்கும் என்னைக் கொலை செய்வதுதான் உன் சதியின் முடிவு.

அன்: (திடுக்கிட்டு) அட பாவமே! சகோதர வாஞ்சை யைத் தவிர வேறொன்றுமறியாத என்னைச் சதிகாரன், கொலை காரன் என்றெல்லாமா குற்றம் சுமத்துகிருய்?

அழ: (அலட்சியமாக) சகோதர வாஞ்சையாவது,புடலங் காயாவது? எல்லாம் ஆசை காட்டி மோசம் செய்யும் அயோக் கிய சாகஸம். அதை நம்பி நான் ஏமாந்த காலம் மலை யேறி விட் டது. எனக்கு வேண்டியது என் பங்கு சொத்து. (தகப்ப ளுரிடம் திரும்பி) அப்பா! எனக்கு பாகம் பிரித்துக் கொடுங்கள். நான் வேறெங்காவது போய் விடுகிறேன்.

ஆபத்: என்ன உளறுகிருய்?

அழ: உளற வில்லை. உரிமையைக் கோருகிறேன்.

அன்: அழகா, உனக்கு ஏதாவது குறையிருந்தால் சொல். நிவர்த்திக்கிறேன். ஏன் இப்படி வீணுய்க் கெட்டுப் போகிருய்?

அழ: உன் உத்தேசம் எனக்குத் தெரியும். உபதேசம் தேவையில்லை உன் உதவியையும் நான் இனி விரும்ப வில்லை.

அன்: தம்பி! சொத்தில் எனக்கு பாகமே வேண்டாம். எல்லாவற்றையும் நீயே எடுத்துக் கொள். இதோ இப்பொழுதே எழுதித் தருகிறேன். ஆனல் எங்களை விட்டுப் பிரிந்து போகாதே யபபா.

அழ: இன்று எழுதித் தருவாய். நாளை என்னென்ன சதிகள் செய்வாய் என்று எனக் கெப்படித் தெரியும்? உன்னைப் போல் பிறர் பொருளைச் சூறையாட சூட்சி செய்கிறவன் நான் அல்ல, (தகப்பனுரிடம் திரும்பி) அப்பா, ஆகட்டும் பாகப் பிரிவினை.

ஆபத்: (சற்று ஆத்திரத்தோடு) பாகம்! தர மறுத்தால்?

அழ: (ரௌத்காரமாய்) தர மறுத்தால்! ஹும்! நன்ரு யிருக்கிறதப்பா உங்கள் நய வஞ்சக நாடகம். முழுச் சொத்தையும் மூத்த மகனுக்குக் கொடுத்து விட நீங்கள் செய்துள்ள முடிவு. இதோ இப்பொழுதே நீதிமன்றம் போகிறேன். வழக்காடுவேன். சட்டத்தின் மூலம் சாதித்துக் கொள்வேன் என் கோரிக்கையை.

(போகத் திரும்புகிருன்.)

ஆபத்: (திடுக்கிட்டு)மகனே....நில்....நிதானி....நீதி மன்றம்! சட்டம்!! சட்டத்துக்கும் நீதிக்கும் ஏதப்பா சரியான சம்பந்தம்? ....குற்றம் செய்கிருன் ஒருவன். அவன் குற்றவாளி என்று நிச்சயமாய்த் தெரிகிறது. நீதி அவனைக் குற்றவாளி யாக்குகிறது; ஆனல் சட்டம் சாட்சி சரி இல்லை என்று அவனை விடுதலை செய்கிறது. நிரபராதியை நீதி விடுதலை செய்கிறது. சட்டம் சாட்சியின் பேரால் அவனை தண்டிக்கிறது குற்றவாளி பணம் படைத்தவனு யிருந்தால் நியாய வாதி... இல்லை....இல்லை....சட்ட வாதி ஒருவனை நியமித்து வழக்காடுகிருன், வெற்றியும் பெறுகிருன். ஆனல் ஏழை நிரபராதியின் உண்மை வக்கீலின் குதர்க்க வாதத்தின் முன் சரணுகதி யடைகிறது. பஞ்சைக் கொரு நீதி பணக் காரனுக்கு ஒரு நீதி. இதுதான் இன்றைய சட்டத்தின் எதிரொலி. சட்டம் என் ஆஸ்தியைப் பிரிப்பதற்காக நான் அஞ்சவில்லை.என் அருமை மகனையும் பிரித்து அதோ கதியாக்கி விடுமே! பாகம் பிரித்துத் தர மறுத்தால் நீ எங்களை விட்டுப் போக மாட்டாய் என்று அப்படிச் சொன்னேனே தவிர சூட்சியால் அல்ல மகனே.

அழ: அப்பா, என் கோரிக்கை முடிவானது. அதை யாரும் மாற்ற முடியாது....உம்....ஆகட்டும்....

ஆபத்: (வருத்தம் மேலிட) டேய் ஏழுமலை! ஆறுமுகத்தைக் கூப்பிடு.

(ஆறுமுகம் வருகிருன்.)

ஆபத்: ஆறுமுகம், வக்கீல் தாத்தாச்சாரியைக் கையோடே கூட்டியா.

(ஆறுமுகம் போகிருன்.)

[திரை]

காட்சி 16.

இடம்: நண்பர்களின் உல்லாச விடுதி.

காலம்: மாலை.

பாத்திரங்கள்: நஞ்சப்பன், நண்பர்கள், அழகன் முதலானேர்.

வீரப்பன்: நஞ்சப்பா, நீ அழகன் நெஞ்சிலே போட்ட நஞ்சு மித மிஞ்சி வேலை செய்யருப் போலே இருக்கே.

பொன்னன்: ஆனலும் நானும் பார்த்தநலும் பார்த்தேன். அழகனைப் போல அடி முட்டாளைப் பார்த்ததே யில்லை யப்பா.

வீர: ஆமா! கழுதைக்கு ஆகிருப் போலே வயசு ஆகிறது தான் மிச்சம். உலகமே தெரியல்லியே!

பொன்: என்னமோப்பா, என்ன இருந்தாலும் இப்படி நம்பினவனை மோசம் பன்றது எனக்குப் பிடிக்கலே.

அழ: வாடா என் உத்தம சிகாமணியேன்னேன். நம்பாதவங்களை எப்டியடா பின்னே மோசம் பண்ண முடியும்? நீ நம்ம 'செட்'(set)க்கே, 'பிட்' (fit) இல்லேடா.

(அழகன் பிரவேசம்)

நஞ்: (ஆர்வத்தோடு) விஷயம் காயா? பழமா?

அழ: காய்ப் பழம்.

நஞ்: அப்படின்னு?

அழ: பாகப் பிரிவினைக்கு அப்பா சம்மதிச்சுட்டார்.

நஞ்: ரைட்டோ. கன்கிராச்சுலேஷன்ஸ். அப்புறம் என்ன? இனிமேல் பட்டினப் பிரவேசம்தான் பாக்கி.

அழ: ஆனல்... இன்னும் ஒரு சங்கடம் இருக்கிறது.

நஞ்: என்னப்பா அந்தப் பிரமாத சங்கடம்?

அழ: சாவித்திரியைத் தனியாய் விட்டு விட்டு எப்படிக் கிளம்புறதுன்னுதான் யோசிக்கிறேன்.

நஞ்: (கேலியாய்ச் சிரித்தவாறு) ஹஹ்ஹஹ்ஹா! நாசமாய் போச்சு. புலியை வென்றவன் பூனையை எதிர்க்க பயந்தது போல் அல்லவா இருக்கிறது உன் சம்சார சமாச்சாரம்

அழ: அட அதுக் கில்லே யப்பா. கலியாண மாகி இத்தனை நாளாய் அவள் என்னைப் பிரிஞ்சு இருந்ததே கிடையாது. திடீர்ன்னு நான் கிளம்பினல் அவள் ரொம்ப கவலைப் படுவாள்.

நஞ்: இதற்குத்தான இத்தனை பிரமாதப் படுத்துகிருய்?

அழ: அதோடே அவள் கர்ப்பிணியாய் வேறே இருக்கிருள், இந்த நிலையிலே அவளை எப்படி அனதரவாய் விட்டு விட்டுப் போகிறது? அதுதான் என் மனசை உறுத்திக் கொண்டிருக்கிறது.

நஞ்: (சற்று சிந்தித்து) அழகா, என் மனதையும் ஒரு விஷயம் உறுத்திக் கொண்டுதான் இருக்கிறது.

அழ: என்ன அது?

நஞ்: காலப் போக்கில் நீயே உணர்ந்து கொள்வாய்.

அழ: சரி நேர மாகிறது. நான் வருகிறேன்.

(போகிருன்)

நஞ்: (அழகன் போனதும் தனக்குள்) போட்ட திட்டத்தில் மற்ருெரு முட்டுக் கட்டை.... உம் பார்ப்போம்.

(**திரை**)

காட்சி 17.

இடம்; ஆபத்சகாயம் பிள்ளை வீடு.

காலம்: காலை.

பாத்திரங்கள்: அழகன், அன்பன், ஆபத்சகாயம்பிள்ளை. முதலானோர்.

(பாகப் பிரிவினை தஸ்தாவேஜுகள் தயாராகின்றன.)

ஆபத்: மகனே, எத்தனை எடுத்துச் சொல்லியும் உன் மனதைக் கல்லாக்கிக் கொண்டாயேடா. பாகத்தைத்தான் பிரித்துக் கொண்டாய். இன்னும் எவ்வளவு வேண்டுமானாலும் எடுத்துக் கொள். ஆனல் நீ இங்கேயே இருந்து விடக் கூடாதா?

அழ: இந்த நாட்டுப்புற வாழ்க்கையே எனக்குக் கசந்து விட்டது. நகர வாழ்க்கையை நாடிப் போகிறேன். மேலும் நான் இங்கிருந்தால் என் உயிருக்கு எப்போதும் அபாயம். சதிகாரர் சமயத்தை எதிர் நோக்கிக் கொண் டிருப்பார்கள்.

(அன்பன் பிரவேசம். அழகன் ஜாடையாய்த் தன்னைக் குறிப் பிடுவதை அறிந்து வருந்துகிருன்.)

ஆபத்: அப்பா மகனே, உலகானுபவம் சிறிதும் இல்லாத நீ எப்படி தனித்து வாழப் போகிருயோ? **உலகம் உத்தமரின் உறைவிடைமல்ல. பஞ்சமா பாதகரின் பாசறை. பணம் தான் அதில் உயிர் நாடி. ஆனல் பரிசுத்தமான பாதையில் பயன் படுத்தப் படாவிட்டால் பணம் பாஷாணமாகப் பரிணமித்து விடும். உனக்குப் பல நண்பர்கள் ஏற்படுவர், உன்னைப் பாதுகாக்க அல்ல. உன் பணத்தைப் பறிக்க. பணம் பாழாகி விட்டால், நீ பட்டினியால் பரதவித்தால் கூட பார்த்துப் பரிதாபப் பட மாட்டார்கள் உன் பாங்கர்கள். புத்தியாய் நடந்து கொள்.**

அன்: அழகா, அப்பாவின் அறிவுரைகளைக் கேட்டாயா? அனுபவம் என்னும் ஆழ் கடலில் அரித் தெடுக்கப் பட்ட அரும் முத்துக்கள் அவைகள்.

அழ: போதும் உங்கள் பிரசங்கம் நான் வருகிறேன். (போகத் திரும்புகிறான்)

ஆபத்: கடைசியாக ஒரு வார்த்தை. நீ மனம் மாறி எப்பொழுது திரும்பி வந்தாலும் உன் தகப்பன் வீட்டுக் கதவு உனக்காகத் திறந்தே யிருக்கும். தெய்வம் தான் உன்னைக் காப்பாற்ற வேண்டும்.

(அழகன் வெளியேறுகிறான். பண்ணையார் குலுங்கிக் குலுங்கி அழுகிறார். அன்பன் அழகனைப் பின் தொடருகிறான்)

அன்: அழகா, சற்று நில். என்னை விட்டுப் போகாதேயப்பா. யாருக்காக என் சுக போகங்களையெல்லாம் துறந்து விட்டேனோ அந்தச் சகோதரனே என்னை விட்டுப் போய் விட்டால் இந்த உலகில் இனி எனக்கு என்ன அப்பா இருக்கிது? (அழுகிறான்)

அழ: ஏய் போலி வேஷதாரி உன் அக்கிரமங்களும், அயோக்கியத்தனங்களும் அட்டூழியங்களும் அம்பலத்துக்கு வந்து விட்டன. படிப்பது பஜகோவிந்தம். இடிப்பது பெருமாள் கோவில். இனியும் என்னை ஏமாற்ற முடியாது. போ. உன் கள்ளக் காதலி சொர்ணத்தோடு சுகமாயிரு உனக்கும் எனக்கும் இனி யாதொரு சம்பந்தமு மில்லை.

(அழகன் வேகமாகச் செல்கிறான்.)

அன்: (தனக்குள்) சொர்ணம் என் கள்ளக் காதலியா?........ தம்பி தவறாக நினைத்து விட்டான் போலிருக்கிறது (நின்று விடுகிறான்)

(வேலைக் கார சாமி அழகனுக்கு எதிர்ப் படுகிறான்)

சாமி: சின்ன எசமான்! நீங்க இப்படிப் பெரியவங்க வார்த்தையைத் தட்டிட்டுப் போறது நல்லா இல்லீங்க. அவ்வளவு தாங்க சொல்லுவேன்.

அழ: (கோபத்தோடு) சீ அதிகப்பிரசங்கி! (அழகன் சாமியின் கன்னத்தில் 'பளா' என்று ஒரு அறை விடுகிறான். சாமி கன்னத்தைத் தடவிக் கொண்டே வீட்டுக்குள் செல்கிறான். கார் காற்றாய்ப் பறக்கிறது.)

[திரை]

காட்சி 18.

இடம்; நண்பர்களின் உல்லாச விடுதி.

காலம்: மாலை.

பாத்திரங்கள்: அழகனும், நண்பர்களும்.

(அழகன் மௌனமாய் அமர்ந்திருக்கிருன். அறையில் அமைதி நிலவுகிறது. அதைக் கலைத்து நஞ்சப்பன் தொண்டையைக் கனைத்துக் கொண்டு பேச ஆரம்பிக்கிருன்.)

நஞ்: அழகா! கணவனிடம் கற்புக் கரசி வேஷம் போட்டுக் கொண்டு கண்டவனேடே கள்ளக் காதல் புரியும் கலியுகக் கண்ணகிகளுக்கு கணக் கில்லை யப்பா.

அழ; என்ன திடீரென்று புதிர்ப் போடுகிருய்?

(வீரப்பன் பிரவேசம்)

வீர: அழகா, நீ இங்கேயா இருக்கே? உன் அண்ணனை ஆத்தங் கரை பங்களாவிலே பார்த்தேன்.

அழ: அப்படியா? எப்போ பார்த்தாய்?

வீர: இப்போ நேரே அங்கிருந்துதானே வர்றேன்.

அழ: அவனைத்தான் நான் அப்பொழுதே கை கழுவி விட்டேனே.

வீர: அதன் பிறகும் அவன் அங்கு போக வேண்டிய காரணம்?

நஞ். (இடைமறித்து) இருக்கிறது! அதில்தான் இருக்கிறது ஒரு பயங்கர ரகஸியம்.

வீர: ஆனுல் பகிரங்க மாகிவிட்டது.

அழ: என்ன உளறுகிறீர்கள்?

வீர: ஒன்றும் உளற வில்லை உள்ளதைச் சொன்னேம்.

நஞ்: விபரமாய் விளக்கிச் சொல்கிறேன் கேள். தனிமையில் உன் மனைவி. நீ இங்கே. உன் தமயன் அங்கே. உணர்ச்சியின் வேகம். பருவத்தின் தாகம். பிரம்மச்சாரியின் மோகம். ஸவர்க்க லோகம்.

அழ: (கோபம் பீறிட, நஞ்சப்பன் கன்னத்தி லடித்து) ஷட் அப் யூ ராஸ்கல்! என் மனைவியின் மானத்துக்கா மாசு? என் கண் மணியின் கற்புக்கா களங்கம்? உன்னை என்ன செய்கிறேன் பார். (நஞ்சப்பனைப் பிடித்து உலுக்குகிருன். மற்றவர்கள் விலக்குத் தீர்த்து வைக்கின்றனர். நஞ்சப்பன் கன்னத்தை

'நாசுக்' காகத் தடவி விட்டுக் கொள்கிருன். இதைக் கண்ட பொன்னப்பன் மறுபுறம் திரும்பி வாயைப் பொத்திக் கொண்டு சிரிக்கிருன்.)

நஞ்: (கன்னத்தைத் தடவிக் கொண்டே) ஆத்திரம் மூட்டும் விஷயம்தான். ஆனுல் அத்தனையும் உண்மை. இன்று நேற்று நடப்பதல்ல. உனக்குக் கல்யாணம் ஆன நாள் முதலாய் நடக்கிறது. (வீரப்பனிடம்) டேய் விரப்பா சொல்லேண்டா அண்ணேக்கு நடந்ததை. உன் வாயிலே கொளக் கட்டையா இருக்கு?

வீர: (தயங்கியவாறு) அது வாஸ்தவம் தானப்பா, அண்ணேக்கு ஒரு நாள் உன்னேத் தேடி பங்களாவுக்குப் போனப்போ ....வந்து....... வந்து........அதை எப்படி வெளிப் படையாய்ச் சொல்றது... ....ஆமா....உம்....வந்து....

அழ: (இடைமறித்து கோபம் பொங்க) என்ன? இதெல்லாம் உண்மைதானு? என்னுல் நம்ப முடிய வில்லேயே.

நஞ்: நம்ப முடியாதுதான். ஆனுல் நடந்து விட்டது. உன் கண்ணேயாவது நம்புவியா இல்லேயா? போ. உடனே நீயே போய்ப் பார்.

(அழகன் வேகமாக வெளி யேறுகிருன்)

நஞ்: (அழகன் போனதும்) என் கன்னத்தில் அடித்து விட்டாய்! பதிலுக்கு உன்னேக் கண் கலங்கிக் கதறி யழ வைக்கிறேன் பார். (வீரப்பனிடம்) வீரப்பா, நீ அழகன் பின்னுடி போய் நடக்கிறதை கவனி....ஓடு....

(வீரப்பன் போகிருன்.)

[திரை]

காட்சி 19.

இடம்: அழகன் ஆற்றங் கரை பங்களா.

காலம்: மாலே.

பாத்திரங்கள்: சாவித்திரி, அன்பன், அழகன், முதலானோர்.

(சாவித்திரி வரப் போகும் தன் குழந்தைக்காக ஜெர்ஸி, குல்லாய் முதலியவை தைப்பதில் ஈடு பட்டிருக்கிருள் அன்பன் தயங்கிய வாறே பிரவேசிக்கிருன்.)

சாவித்திரி: (எழுந்து வந்து வணங்கி) வாருங்கள் வாருங்கள், ஏது? அத்தி பூத்தாற் போல் வந்திருக்கிறீர்களே! வழி தெரிஞ்சுதா?

(காபி பலகாரங்கள் கொண்டு வந்து வைக்கிறாள். அன்பன் ஒன்றையும் தொட மன மில்லாமல் மன வருத்தத்தோடு உட்கார்ந் திருக்கிறான்.)

சாவி: ஏன் முக வாட்டமாய் இருக்கிறீர்கள்? உடம்புக்கு ஏதாவது ...?

அன்: உடம்புக்கு ஒன்று மில்லை மனம்தான் சஞ்சலப் படுகிறது.

சாவி: காரணம்?

அன்: (சுற்றும் முற்றும் பார்த்து விட்டு) அழகன் எங்கே அம்மா?

சாவி: காலையில் போனவர்தான். இன்னும் காணவில்லை. ஏன்?

அன்: உனக்கு ஒன்றுமே தெரியாதா?

சாவி: எதைப் பற்றி சொல்கிறீர்கள்?

அன்: உன் புருஷன் பாகம் பிரித்துக் கொண்டு விட்டதைப் பற்றித்தான்.

சாவி: என்னிடம் அவர் ஒன்றும் சொல்லவே இல்லையே. அதற்கு என்ன அவருக்கு அத்தனை அவசரம்?

அன்: அதைப் பற்றி கூட நான் வருந்த வில்லை ஆனால் இந்த ஊரை விட்டே கிளம்ப திட்டம் போட்டிருந்தான் .... ஒரு வேளை........

சாவி: (தலையை அழுத்திப் பிடித்துக் கொண்டு) என்ன? என்னை இந்த நிலையில் விட்டு விட்டா போய் விட்டார்? ஆ........ என் தலை சுற்றுகிறதே. மயக்கமாயிருக்கிறதே. (மயங்கி படுக்கையில் சாய்கிறாள்.)

அன்: தங்கம்மா! தங்கம்மா!! (பதில் இல்லை) இந்த நேரம் பார்த்து எங்கே தொலைஞ்சு போய் விட்டாள்?

(அன்பன் சாவித்திரிக்கு மூர்ச்சை தெளிவிக்க முயலுகிறான். இந்த சந்தர்ப்ப வசமான காட்சியை அப்பொழுது தற்செயலாய் அங்கு வந்த அழகன் கண்டு ரௌத்காரமாகிறான்.)

அன்: (அழகனைப் பார்த்துவிட்டு) அழகா.! சமயத்தில் பார்த்து வந்து விட்டாய்,........

அழ: (ஆத்திரமாக) சீ! அயோக்கிய ராஸ்கல்! அங்கே விட்டு இங்கே விட்டு. கடைசியில் அடி மடியிலே கையை வைத்து விட்டாயே. இந்தக் கள்ளக் காதல் நாடகம் எத்தனை காலமாக நடக்கிறது. நான் இல்லாத போது உனக்கு இங்கு என்னடா வேலை?

அன்: இதென்ன விபரீதம்? உன் சுய புத்தியில் பேசுகிருயா? அலல்து மது உன் மதியை மயக்கி விட்டதா? உன் பயணத்தைத் தடுத்து விட முடியாதா என்ற ஆர்வத்தில் ஓடி வந்தேன் அப்பா கள்ளக் காதல்; ஆனுல். கற்பிக்கும் காரணமோ ஒரு கட்டுக் கதை. 'தம்பி போயிருப்பான், தகுதியான தருணம் என்று ஓடி வந்தேன்' என்று சொல்.

அன்: (துக்கம் தொண்டையை அடைக்க) வாலிபத்தின் பெரும் பகுதியை பிரம்மச்சாரியாகவே கழித்து விட்ட எனக்கு இனிமேல்தானு மோகம்? அதுவும் உடன் பிறந்த உன் மனைவி மீதா?

அழ: பேஷ்! கண் கூடாகக் கண்ட பின்னும் கபட நாடக மாடுகிருன் காமப் பித்தன், தம்பியின் மனைவியைத் தாரமாக்கிய தறுதலை நாயே நடடா வெளியே.

அன்: தம்பி, முன் கோபம் உன் கண்ணை மறைக்கிறது. ஆத்திரம் உன் அறிவை அலைக்கழிக்கிறது. ஆராயாது முடிவு கட்டி விட்டாய்.

அழ: ஹும் தம்பி! ஆஹாஹா! எத்தனை வாத்ஸல்யம்! சகோதர வாஞ்சை, அது இது என்று உளறுகிறயே. உனக்கு சகோதரன் மீது வாஞ்சையா அல்லது சகோதரன் சதியின் மீது காதலா? கபட வேஷதாரி! வெளியே போடா....உம்....!

அன்: அழகா, பொறுமை....நிதானம்.........

அழ: ஹிப்பாக்ரைட் (Hypocrite) தவறை மறைக்க தர்மோபதேசம் செய்கிருன் தகிடு தத்தக் காரன். என்னை அழியாத அவமானத்துக்கு ஆளாக்கியது மன்றி அறிவுரை வேறு செய்கிருன் அற்பன். உன்னை அடித்துக் கொன்ருலும் பாப மில்லை.

(அன்பன் கன்னத்தி லடிக்கிருன்.)

அன்: (கண் கலங்கியவாறு) அடி....உம்........அடி........உன் ஆத்திரம் தீர அடி. உன்னைக் கண் மணி போலக் காத்து வளர்த்த என்னை உன் கை நோக அடி. உன்மேல் கொண்ட அளவிலா அன்பைத் தவிர வேறொரு பாபமும் அறியாத இந்த அபாக்கியனை அடித்து நொறுக்கு. உன் நலமே தன் நலம். உன் சுகமே தன்சுகம், என்று எண்ணி உனக்காகவே உயிர் வாழ்ந்த உன் தமயனை அடித்துக் கொல்லு. ஆம் கொன்றே விடு. இனி நான் யாருக்காக

வாழ வேண்டும்? மனைவிக்காகவா? அல்லது மக்களுக்காகவா? நீதானே என் சுகம், செல்வம், சந்தோஷம், சகலமும். உன்னு லேயே வெறுக்கப் பட்ட நான் இனி எதற்காக உயிரோ டிருக்க வேண்டும்? (அழுகை பீறிட) (உன் வாயால் அன்பு ததும்ப ஒரு முறை 'அண்ணு' என்று அழைத்து அடித்த உன் கரத் தால் அணைத்து விட்டு பிறகு அந்தக் கையாலேயே என்னைக் கொன்று விடு. நான் ஆனந்தமாய்ச் சாகிறேன்.

அழ: சீ பாபாத்மா! செய்வதையும் செய்து விட்டு சாகஸம் வேறு செய்கிருய்? உன்னை 'அண்ணு' என்று அழைப்பதை விட என் நாவைத் துண்டித்துக் கொள்ளலாம் ...உம்...., என் கோபம் எல்லை மீறும் முன் இந்த இடத்தை விட்டு வெளி யேறு. நீ பிறந்த வயிற்றில் நானும் பிறந்து விட்ட தோஷத்துக்காக உன்னை உயி ருடன் விடுகிறேன்.

அன்: தம்பி....!

அழ: Get Out! (அன்பன் கழுத்தில் கை கொடுத்து வெளியே தள்ளுகிருன். 'அழகா அழகா' என்று கதறிக் கொண்டே வெளியேறுகிருன் அன்பன். சாவித்திரி மூர்ச்சை தெளிந்து எழுகிருள்.)

சாவி: (அழகனைக் கண்டு சந்தோஷத்துடன்) ஆ! வந்து விட்டீர்களா!

அழ: ஏன்? நான் வந்து விட்டது உங்கள் இருவரின் இன்ப லோக சஞ்சாரத்துக்கு இடையூருகி விட்டதா?

சாவி: (கண்களைக் கசக்கிக் கொண்டே சுற்றும் முற்றும் மிரள மிரள விழித்து) என்ன சொல்கிறீர்கள்? ஏன் இப்படி எரிந்து விழுகிறீர்கள்?

அழ: சீ மாய்மாலக் கள்ளி! முன்னெச்சரிக்கையாக மூர்ச்சை யாகி விட்டதாகப் பாசாங்கு வேறு. நடந்ததை மறைக்க நாடகம் வேறு. நீ என் மனைவியா? அல்லது என் தமயனின் தாரமா? அல்லது பாஞ்சாலியின் பதிவிரதத்வத்தை அனுஷ்டிக் கிருயா? கலியுகக் கண்ணகி! விபச்சாரி.........

சாவி: (ஆத்திரமாக) ஆ! என்ன சொன்னீர்கள்? யார் விபச்சாரி? கொண்ட கணவனே தெய்வ மெனக் கொண்டு நடக்கும் நானு விபச்சாரி? பதி சேவையே வாழ்க்கையின் இன்ப மென் றெண்ணி வரும் நானு விபச்சாரி உள்ளத்தாலும் கள்ளம் நினையாத நானு விபச்சாரி? அய்யோ? அநியாய உலகமே!

அழ: ஜாலக் காரி! உன் பசப்பு வார்த்தைகளால் என்னை ஏமாற்ற எண்ணுதே கைப் புண்ணுக்கு கண்ணுடியா வேண்டும்?

சாவி: உங்கள் கண்ணும் கருத்தும் வீண் கற்பனைக்கு அடிமை யாகி விட்டன. உங்கள் அண்ணு என் தந்தையைப் போல. அதிலும் உங்கள் மீது அள விலா அன்பு கொண்டவர். உங்களுக்கு துரோகம் செய்ய அவர் மனதாலும் நினைப்பாரா? அல்லது நான்தான் இத்தனை கொடிய பாதகத்தைக் கனவிலும் கருதுவேனு? இத்தனை நாள் என்னுடன் பழகிய உங்களுக்கு இது தெரியாதா? தெரிந்துதான் வீண் பழி சுமத்துகிறீர்களா? அல்லது மடையர்கள் உங்கள் மனதை மாசு படுத்தி விட்டார்களா?

(விசித்து விசித்து அழுகிருள்.)

அழ: நிறுத்து உன் நீலிக் கண்ணீரை. போதும் போதும் நான் உன்னோடு வாழ்ந்த வாழ்வும் அனுபவித்த இன்பமும். உன்னை விட்டுத் தொலைந்து போகக் காலம் வந்து விட்டது.

சாவி; போகிறீர்களா? என்னை விட்டு விட்டா? உங்களைப் பிரிந்து அரைக் கணம் கூட என்னுல் சந்தோஷமா யிருக்க முடியாது அத்தான்.

அழ: ஹூம் அத்தான்! அடுத்த முறை அப்படி அழை யாதே.

சாவி: நான் சொல்வதைக் கேளுங்கள். **உங்கள் இன்ப வெள்ளத்தில் எதிர் நீஞ்ச என் ஒருத்தியால் இயல வில்லை யென்று நீங்கள் எண்ணினுல், இன்னொருத்தியைத் தங்கள் இளையாளாக இதய பூர்வமாய் ஏற்றுக் கொள்கிறேன், அல்லது மனைவி என்ற மகத்தான ஸ்தானத்தை உங்கள் மனதுக்குப் பிடித்த மற்ருெருத்திக்கு மனப்பூர்வமாகத் தத்தம் செய்து விடுகிறேன். ஆனுல் தங்களுக்குப் பணி விடை செய்யும் பாக்கியத்தையாவது எனக்குத் தாருங்கள். ஒரு பணிப் பெண்ணுகவாவது என்னைப் பாவியுங்கள். தயவு செய்யுங்கள். களங்கமற்ற என் கற்புக்கு மட்டும் களங்கம் கற்பிக்காதீர்கள்.**

அழ: (ஏகத்தாளமாக) ச்...........ச்..........என் உத்தம பத்தினியே, பத்தினிக்கு தெய்வமே, தெய்வத்தின் அவதாரமே! உன் நடிப்பு A. 1. சினிமாவில் கண்ணகி யாகவோ, வாசுகி யாகவோ, ஏன் சாவித்திரி யாகவோ கூட நடிக்க பட முதலாளிகள் ஒரு வேளை உன்னை ஒப்பந்தம் செய்து கொள்ளலாம். ஆனுல் வாழ்வில் வழி வழுவிய உன்னை ஏற்றுக் கொள்ள என் மனம் என்றைக்கும் ஒப்பாது.

சாவி: (அழகன் காலில் விழுந்தவாறு) எனக்காக் வேண்டாம். இதோ! என் கர்ப்பத்தில் வளரும் சிசு, உங்கள்

அன்பின் பரிசு, என் அருமைச் செல்வம் அதற்காகவாவது மனம் இரங்குங்கள்.

அழ: (அலட்சியமாக) சிசு, ஹூம்....!அந்தச் சிசு பூமியில் பிறந்து என் வாழ்க்கையில் ஏற்பட்ட பயங்கர அவமானத்தின் அழியாச் சின்னமாக விளங்குவதை விட அது கருவிலேயே மடிவது மேல்.

சாவி: (உடல் பதற) ஆ! என்ன சொன்னீர்கள்! நான் பெண் குலத்தில் பிறந்து விட்ட பெரும் குற்றத்திற்காக எது வேண்டுமானாலும் பேசலாம் என்று எண்ணிப் பேசுகிறீர்கள். ஆனால் நிஷ்களங்கமான என் கருவின் உருவை, வாழ்வின் ஜோதியை, மாசில்லா என் மாணிக்கத்தைப் பழிக்காதீர்கள். அது மன்னிக்க முடியாத மகா பாபம்.

(அழகன் காலைப் பற்றுகிறாள்)

அழ: (கோபாவேசமாக) சீ நாயே! என்னைத் தொடவும் உனக்கு இனி அருகதை இல்லை. இதுவரை நீ செய்து வந்த பதி சேவைக்காக உனக்கு உயிர்ப் பிச்சை அளிக்கிறேன். பிழைத்துப்போ. (சாவித்திரியை எட்டி உதைக்கிறான். அவள் மீண்டும் மூர்ச்சிக்கிறாள். அழகன் 'விடு விடு' வென்று சாமான்களைப் 'பாக்' செய்து கொண்டு வெளியேறுகிறான். அவன் கார் புழுதியைப் பறத்திக் கொண்டு உல்லாச விடுதியை நோக்கிப் பறக்கிறது. இந்தக் காட்சியை மறைவிலிருந்து கவனித்த வீரப்பன் மெல்ல நழுவுகிறான்.)

[திரை]

காட்சி 20.

இடம்: நண்பர்களின் உல்லாஸ விடுதி.

காலம்: இரவு

பாத்திரங்கள்: அழகனும், நண்பர்களும்

(அழகன் தன் தலையைக் கைகளால் தாங்கிய வாறு கவலையுடன் அமர்ந்திருக்கின்றான்.)

நஞ்: (வெற்றிப் பெருமிதத்துடன் அங்கும் இங்கும் உலவியவாறு) அவமானம்! அவமானம்!! அழகன் வாழ்க்கையில் அழியாத அவமானம்!!!

அழ: (குரல் கம்மியவாறு) நஞ்சப்பா, வெந்த புண்ணில் ஏன் வேலிடுகிறாய்?

பொன்னன்: (குறுக்கிட்டு) அழகன் என்னடான்னு மனசு உடைஞ்சு போயிருககிறன். அவனுக்கு ஆறுதல் சொல்றதை விட்டு விட்டு எரியிற நெருப்பிலே பெட்ரோலை விடுறியே!

நஞ்: அவனும் கொஞ்சம் உலகத்தைச் சரியாய்த் தெரிஞ்சு கொள்ளட்டுமேப்பா. 'அண்ணன் அண்ணன்'னு அலைஞ்சானே. இப்போ பார்த்தியா? அடுத்துக் கெடுத்துவிட்டான் ஆஷாட பூதி. அடுத்தவன் மனைவியை அன்னையாகக் கருதுவதை விடுத்து தம்பி யின் தாரத்தையே தனக்கு தாசியாக்கிக் கொண்டான் தத்தாத் திரிப் பயல். வேலியே பயிரை மேய்வதென்றால்....?

(குரலைத் தாழ்த்திக்கொண்டு)

வருந்தாதே அழகா........காலம் கவலையை மாற்றும்.

அழ: என் நெஞ்சில் ஆறாத ரணம். மாறாத வேதனை. வாழ்க் கையே வேம்பாகி விட்டது நண்பா. எனக்கு ஒரு உபகாரம் செய்கிறாயா?

நஞ்: காத்திருக்கிறேன் அழகா.

அழ: ஒரு துளி விஷம் கொடு. அது போதும், மானத்தை இழந்தும் வாழ்வதை விட மரணம் மேல்.

நஞ்: (திடுக்கிட்டு) இதற்கா இப்படி மனம் தளர்ந்து விட்டாய்? நீ சாவதால் மட்டும் உன்மேல் சுமந்த அவமானம் அழியுமா? போதாதற்கு மனைவியை அடக்கி ஆள வகையற்றுத் தற்கொலை செய்து கொண்ட கையாலாகாதவன் என்று உலகம் தூற்றாதா? அதனால் உன் கல்லறைக்குக் கூட நிம்மதி இராதே. சற்று சிந்தித்துப் பார்.

அழ: உண்மைதான். ஆனால், 'மனைவி மாசுபட்டவள் என்று அறிந்தும் வாழ்கிறான் மான மற்றவன்' என்று உயிருள்ளளவும் ஊரார் என்னைப் பழிக்க மாட்டார்களா நண்பா?

நஞ்: (சிறிதுசிந்தித்து) நீ சொல்வதும் ஓரளவு வாஸ்தவம் தான். உலை வாயை மூடலாம் ஊர் வாயை மூட முடியாதுதான். அதற்குத்தான் இந்த ஊரை விட்டே போகிறோமே,

'கொலை செய்வாள் பத்தினி,
உயிர்க் காப்பான் தோழன்'

உன் வாழ்வை வளம் பெறச் செய்ய இதோ நாங்கள் இருக் கிறோம். மனைவியை மறந்து விடு. இந்தக் கர்நாடகக் கட்டு விரியனுக்குப் பதில் நவ நாகரீக நாரீ மணியை நான் உனக்கு ஏற் பாடு செய்கிறேன். உன் வாழ்வின் முற் பகுதியை விட பிற் பகுதி எப்படி இருக்கப் போகிற தென்று உனக்கு இப்பொழுது தெரி

யாது. உன் புது வாழ்க்கையின் முதல் திட்டம், உடனே வேற்றூர் புறப்பாடு. என்ன சொல்கிருய்?

அழ: உன் இஷ்டம் நண்பா. என் நலனில் இத்தனை அக்கரை கொண்ட உன் இஷ்டத்துக்கு மாருக நான் என்ன சொல்லப் போகிறேன்?

நஞ்: சரி, எல்லாரும் தயாராகுங்கள். இன்றிரவு எக்ஸ்பிரஸில் பம்பாய் பயணம்.

(எல்லோரும் பிரயாணத்துக்கு ஆயத்தம் செய்கின்றனர்)

[திரை]

காட்சி 21.

இடம்: அழகாபுரி வயல் வெளி,
காலம்: அதி காலே.
பாத்திரங்கள்: அழகாபுரி விவசாயிகள்,

மூத்து செட்டி: வாங்கோ வெங்கடாசலம் பிள்ளை வாள், ஏது காலங் காத்தாலே இப்படி. ஒரு நாளும் இல்லாத திருநாளா?....

வெங்கடாசலம் பிள்ளை: நாலு காணி அறுப்பு இருக்கு நம்ப படியாள் வடிவேலே ஆள் காரங்களை அழைச்சாரச் சொல்லிட்டு வந்தேன். செட்டியார் வாள் ஏது........?

மூ. செ: நமக்கு என்ன ஆளா, அம்பா? எல்லாம் நான் தானே எழ வெடுத் தாகணும். நீர்தான் இண்ணைக்கு அபூர்வமாய் வந்திருக்கீர். அது சரி. உமக்கு சேதி தெரியுமோ?

வெங்: எதைச் சொல்றீர்?

மூ. செ: கிணற்று தவளைக்கு எப்படி நாட்டு வளப்பம் தெரியும்னேன்.

வெங்: நீர்தான் ஆத்துத் தவளை, விஷயத்தைச் சொல்லுமேன்.

மூ. செ: நம்ம பண்ணையாரோடே இளைய பிள்ளை இருக்காரே.

வெங்: (திடுக்கிட்டு) ஆமாம் அழகப்பிள்ளை. அவருக்கு என்ன?

மூ. செ: அவர் பண்ணையாரோடே, சண்டை போட்டு பாகத்தைப் பிரிச்சுட்டு வடக்கே போய்ட்டாராம்

வெங்: அப்படியா? பண்ணையார் சம்மதிச்சாரோ?

மு செ: அவர்தான் கெஞ்சிக் கூத்தாடிப் பார்த்தாராமே. இளையவரு கேட்டால்தானே? கோர்ட்டு கச்சேரிக்குப் போய் மானத்தை வாங்கிப் புடுவேன்னு ஒரே யடியாய் மெரட்டிருராம். பண்ணையார்தான் மகா மானியாச்சே. சில பெரிய மனுஷங்க ளாட்டமா வக்கில் பாக்கட்டை நிரப்புகிறதிலே எல்லாம் பெருமைப்பட மாட்டாரே. மகன் கூடேயே எதிர் வழக்காடப் போருர்?

வெங்: (பெருமூச்சுடன்) உம் பெத்த மனம் கல்லு, பிள்ளை மனம் பித்து.....

மு. செ: (இடைமறித்து) ஓய்! என்ன சொன்னீர்?

வெங்: (சமாளித்துக்கொண்டு) வந்து........ பெத்த மனம் பித்து, பிள்ளை மனம் கல்லு.

மு, செ: தங்கமான மனுஷனுக்குத் தறுதலைப் பிள்ளை வந்து வாய்ச் சிருக்கு.

வெங்: அதுசரி. மூத்தவர் என்ன சொன்ருராம்? தம்பின்னு உசிராச்சே அவருக்கு. சித்த நேரம் தம்பியைக் காணலேன்னு குதிரை வண்டியைப் போட்டுகிட்டு ஊரையும் வயல் காட்டையும் சுத்து சுத்துன்னு சுத்துவாரே.

மு. செ: (இழுத்தாற்போல்) உம். தாய்க்கு தலைப் பிள்ளை பேக்குப் பிள்ளை. இளையவர் அவரைச் சட்டை பண்ணினுல் தானே! என்னமோ இளையவருக்கு ஏழரை நாட்டான் புடிச்சுட்டான். அவ்வளவுதான்.

வெங்: (ஆட்கள் வந்து விடவே) அப்போ நான் வரட்டுங்களா? அறுப்புக்கு ஆள் காரங்க ளெல்லாம் வந்துட்டாங்க.

(போகிருர்)

[*திரை*]

காட்சி 22.

இடம்: ஆற்றங் கரை படித் துறை.

காலம்: காலை.

பாத்திரங்கள். அழகாபுரி பெண்கள்.

காமாக்ஷி: ஏண்டி கற்பகம், உங்க ஆத்துக் காரர் வந்திருக்கர்ப் போலே இருக்கே.

கற்பகம்: அடடே ராத்திரிதானே வந்தார். அது உன் காதுக்கு அதுக்குள்ளே எப்படி எட்டியது?

காமாக்ஷி: உன் மூஞ்சைப் பார்த்தாலே தெரியுதேடீ.

பர்வதம்: அரஸியலிலே இருந்து அடுப்பங் கரை வரையிலே அத்தனை சமாச்சாரமும் அம்மாமி அண்டை தானேடீ அத்துபடி.

காமாக்ஷி: இன்னொரு நியூஸ் தெரியுமோ?

கற்பகம்: பண்ணையார் இளைய மகன் சமாச்சாரம் தானே? காத்து வாக்கிலே என் காதிலேயும் லேஸா அடி பட்டுது.

சோமு: (குறுக்கிட்டு) ஆனாலும் இளையவருக்கு ஏன் தான் புத்தி இந்த மாதிரி போச்சுதோ? பாவம் அந்தப் பொண்ணு சாவித்திரி, அது குனிஞ்ச தலை நிமிர்ந்து நான் பார்த்ததில்லேடி.

காமாக்ஷி: இருந் திருந்து அது மேலே போய் சந்தேகப் பட்டார் பாரு, அதைன்னு சொல்லணம்.

கற்பகம்: அதிலும் சொந்த அண்ணனோடு தொடுப்புன்னு.

பர்வதம்: இரண்டு பேரும் சல்லாபமாய் இருக்கிறதை நேரில் பார்த்தாராமேடி.

காமாக்ஷி: ஊம் ஹூம்! நீ என்னதான் சொல்லு. நான் நம்பவே மாட்டேன். அந்தப் பொண்ணு சாவித்திரின்னு சாக்ஷாத் சாவித்திரியேதான்.

பர்வதம்: (இடைமறித்து)அதுதான் அந்த 'அரிச்சந்திரன் சாவித்திரி கதை'யிலே வர்ருளே அந்த சாவித்திரியைத்தானே சொல்றே?

காமாக்ஷி: இல்லை. 'நளன் சாவித்திரி கதை'ன்னு சொல்லு. விடிய விடிய ராமாயணம் கேட்டுவிட்டு'சீதைக்கு ராமன் சின்னம்மா'ன்னு சொல்லுவை போலிருக்கு சத்தியவான் இதைக் கேட்டான்னு உன்னோடே சண்டைக்கு வந்துடுவானடி.

பர்வதம்: ஓ ஆமாம்டி 'சத்தியவான்' ன்னு! மறந்துனுட்டேன்.

கற்பகம்: மூத்தவருக்கு வயசு என்ன? அதிலேயும் தம்பிக்காக வேண்டி தான் கலியாணமே செய்துக்கலியே அந்த அப்பாவி. தம்பி மேலே கொள்ளை அன்பு வெச்சிருக்காரே. அவரா இப்படியெல்லாம் செய்வார்?

காமாக்ஷி: (பெருமூச்சுடன்) உம்... எல்லாம் பாழும் விதி பண்ற வேலை.

சோமு: பாவம்! சாவித்திரி முழுகாமே வேறே இருக்கு.

சுந்தரி: என்னமோ எந்தப் புத்துக் குள்ளே எந்தப் பாம்பு இருக்குமோ, யார் கண்டது?

(போகிருர்கள்)

[திரை]

காட்சி 23

இடம்: பம்பாயில் அழகன் பங்களா.

காலம்: இரவு.

பாத்திரங்கள்: அழகனும் நண்பர்களும்.

நஞ்: விஸ்கி....பிராந்தி....வைன்....ஜின்....ரம்.... அத்தனையும் அசல் ஐரோப்பிய சரச்கு. (ஒவ்வொரு பாட்டிலாக எடுத்து வைக்கிருன், எல்லோரும் அருந்துகின்றனர்)

அழ: ஆகாகா! நாட்டுச் சரக்கை அனுபவித்து அலுத்துப் போனேமே. இதல்லவா பிரம்மானந்தமா யிருக்கிறது,

நஞ்: அழகா, உலகமே ஒரு ஆனந்தசாகரம். அதில் நாம் இது வரை மூழ்கி யிருப்ப தெல்லாம் வெகு அற்ப சொற்ப ஆழம். இன்னும் அனுபவிக்க வேண்டியது அளவு கடந்து இருக்கிறது ஆனல்........

அழ: ஆனல் என்ன?

நஞ்: கொஞ்சம் பணம் செலவாகும்.

அழ: பூ இவ்வளவுதான? கவலைப் படாதே. கத்தை நோட்டுகள் தான் கணக் கில்லாமல் இருக்கிறதே என்னிடம்,

நஞ்: உன்னிடம் இருக்கத்தான் செய்கிறது ஆனல்...............

அழ: எடுத்ததற்கும் என்னிடம் வந்து கேட்ப தென்ருல்....

நஞ்: ஆம்.சற்று சங்கோஜமா யிருக்கிறது, அவ்வளவு தான்.

அழ; அதற்கு வழி யில்லாமல் செய்து விட்டேன்.

நஞ்: (திடுக்கிட்டு) அப்படின்ன?

அழ: உன்னை என் அந்தரங்கக் காரிய தரிசியாக நியமித்து விட்டேன்.

நஞ்: (பாசாங்கு செய்தவாறு) ஐயோ....எனக்கு வேண்டா மப்பா இந்த தலைச் சுமை....அப்பாடி........ அதெல்லாம் அப்புறம் ஆபத்து.

அழ: நீ அப்படிச் சொல்லக் கூடாது. கட்டாயம் சம்ம தித்தே ஆக வேண்டும். இந்தா பவர் ஆப் அட்டர்னி. (Power of attourney.)

(நஞ்சப்பன் தயங்குவது போல் நடித்து பவர் பத்தி ரத்தைப் பெற்றுக் கொள்கிறான்.)

அழ: இனிமேல் எனக்கு வேண்டியவற்றை நீ தான் பொறுப்பாய் கவனித்துக் கொள்ள வேண்டும். எனக்குத் தேவை யானதெல்லாம், இன்பம், எல்லையில்லா இன்பம். வாழ்வை வள மாக்கும் வற்றாத இன்பம். ஹஹ்ஹஹ்ஹா.

நஞ்: ஆகா! இனிமே எல்லாம் என் பொறுப்பு. பார்த்துட றேன். ஒரு கை.

[திரை.]

காட்சி 24.

இடம்: அழகாபுரி ஆற்றங் கரை பங்களா.

காலம்: இரவு.

பாத்திரங்கள்: சாவித்திரி, தங்கம்மா.

(சாவித்திரி அழகன் படத்தின் முன் நின்ற வண்ணம் கவலைப் பட்டு கண்ணீர் உகுத்து உருகுகிறாள்.)

சாவி: (தனக்குள்) அத்தான்! என்னை எத்தனையோ அரு மையாய் நேசித்தீர்கள். கடைசியில் இப்படி அனாதரவாய் விட்டு விட்டுப் போய் விட்டீர்களே. அழகில் அப்சரஸ், அன்பில் அன்னை, ஆசையில் மனைவி, சேவையில் தாதி என்றெல்லாம் என் னைக் கேலி செய்து சிரிப்பீர்களே. அந்த மோகன முறுவலைக் காணாமல் ஒரு நாள் கழிவது ஒரு யுகம் போல் இருக்கிறதே. பொன்னான உங்கள் மனதைக் கெடுத்து மதியை மயக்கி விட் டார்களே மடையர்கள். அட துரோகிகளே, நீங்கள் வாழ்வீர்களா?

(கோபம் பொங்க) என் நாயகன் நெஞ்சில் நஞ்சிட்ட நய வஞ்சகர்களே, நீங்கள் நன்ருயிருப்பீர்களா? என் அன்பரை அநியாய மாய்ப் பிரித்து அலைக் கழித்த அயோக்கியர்களே, நீங்கள் அழிந்து போக மாட்டீர்களா? உத்தமரான என் பதியைப் பிரித்து என்னைப் பரதவிக்க வைத்த பாதகர்களே, என்னைப் போல் உங்கள் மனைவிகளும் மருகி அழக் காலம் வராதா? (உணர்ச்சி வேகத்தில் தடுமாறி விழுகிருள். மீண்டும் எழுந்து) உங்களை நோவதில் என்ன பயன்? எல்லாம் என் பாபமாய்த்தான் இருக்க வேண்டும். நான் செய்த பாபம்தான் என்ன? எந்தப் பத்தினியைப் பதியிடமிருந்து பிரித்தேன்? எந்த கர்ப்பிணியைக் கலங்கடித்தேன்? எந்த ஏழையை ஏங்க வைத்தேன்? பின் ஏன் எனக்கு இந்த கதி? இதுதான் ஒரு வேளை விதியா? செய்யாத தவறுக்குக் கிடைக்கும் ஈஸ்வர தண்டனைக்குப் பெயர்தான் விதியா? அப்படி யானுல் அது சதி காரத் தெய்வமா? நிரபராதியைத் தண்டிப்பது தான் தெய்வ நீதியா? ஒரு வேளை தெய்வமே கிடையாதா?

(ஈஸ்வரன் படத்தின் பக்கம் திரும்பி)

அபச்சாரம்! அபச்சாரம்!! ஆழ்ந்த மன வேதனையில் அறி விழந்து பேசி விட்டேன். ஈஸ்வரா, என்னை மன்னித்து விடு. உன்னை விட்டால் என் போன்ற அபலைகளுக்கு ஆர் ஆதரவு? தெய்வத்தை நான் ஏன் நிந்திக்க வேண்டும்? தவறு என்னுடைய தல்லவா? கொண்ட கணவனின் அன்பை இழந்தும் இன்னும் உயிர் வாழ்கிறேனே! இந்த வாழ்வு இனி எதற்காக? ஆம், நான் சாக வேண்டும். சாவின் மடியில்தான் எனக்கு இனி சாந்தி. (வேகமாக ஓடிப் போய் மேஜை டிராயரைத் திறந்து விஷ மருந்தை எடுக்கிருள். மீண்டும் சுய உணர்வு வரவே மருந்தை மேஜைக்குள் வைத்து விட்டு மறுபடியும் குமுறுகிருள்) ஆ! சாவதா? குற்றமற்ற என் குல விளக்கு மல்லவா கூட அணைந்து விடும்? நிரபராதியான என்மேல் சுமந்த நிந்தனையும் நிலைத்து விடுமே. கூடாது நான் சாகக் கூடாது. நான் உத்தமி என்ற உண்மையை உலகம் உறுதியாய் உணரும் வரை சாகக் கூடாது. என் கற்புக்குக் கற்பிக்கப் பட்ட களங்கம் தவறு என்பதை என் கணவன் கண்டு கொள்ளும் வரை நான் கண்டிப்பாய் வாழ வேண்டும். என் கர்ப்பத்தின் கனியைக் கணவன் கையில் ஒப்படைத்து விட்டுக் கவலை யற்றுக் கண் மூட வேண்டும். மாலையிட்ட மணளனின் மடியில் மன நிம்மதியுடன் மடிய வேண்டும்.

(சோர்ந்து படுக்கையில் சாய்கிருள்)

• •

தங்கம்மா: அம்மா, இந்த நிலையிலே நீங்கள் இப்படிக் கவலைப் பட்டால் உடம்பு என்னத்துக்கு ஆகும்?

சாவி: தங்கம்மா, இந்த உடலை நான் யாருக்காகப் பேண வேண்டும்? அதற்கு உடையவரே என்னை விட்டுப் போய் விட்டாரே.

தங்: யாருக்காக இல்லா விட்டாலும் உங்க வயித்திலே வளர்ற சிசுவுக்காகவாவது உடம்பைக் கவனிச்சுக்கணும் அம்மா.

[திரை]

காட்சி 25.

இடம்: பம்பாய் பங்களா.

காலம்: காலை.

பாத்திரங்கள்; அழகனும், நண்பர்களும்.

(நஞ்சப்பன் பிரவேசம்.)

நஞ்: இதோ பார்த்தாயா? (சில புத்தகங்களை அழகனிடம் கொடுக்கிறான்.)

அழ: என்ன, இந்த வாரப் பத்திரிகைகளா? (தலைப்புகளை வாசிக்கிறான்) 'இன்ப லோகப் பயணம்' 'புதுத் தம்பதிகளுக்கு' 'காமக் கலை' 'Sexual Science'............இதெல்லாம் எனக் கெதற் கப்பா? சுவர் இருந்தால் அல்லவா சித்திரம் எழுதுவதற்கு? இருந்த சுவரே இடிந்து விட்டதே!

நஞ்: அதனால் என்ன? இன்னொன்றை இப்பொழுதே எழுப்பி விட்டால் போகிறது.

அழ; (லஜ்ஜையுடன்) நீ ஒண்ணு....

நஞ்: சங்கோஜம் சகஜம்தானே...........அது இருக்கட்டும். First Class dance performance ஒண்ணு நமக்குன்னு ஸ்பெஷலா ஏற்பாடு பண்ணி யிருக்கேன்.

அழ: என்ன? எங்கே? எப்போ?

நஞ்: சாயந்திரம் 5 மணிக்கு.'மிஸ். நாகமணி'ன்னு கேள்விப் பட்டிருக்கிறாயா? அவள் அழகையும் ஆட்டத்தையும்........

வீரப்: (குறுக்கிட்டு) 'காணக் கண் கோடி வேண்டும்' (பாடுகிறான்)

நஞ்: ரொம்பப் பிரமாதமாய் இருக்கும் போ!

அழ: Alright. I am easy.

[***திரை***]

காட்சி 26,

இடம்: அழகாபுரி வயல் வெளி,

காலம்: மாலை.

பாத்திரங்கள்: அன்பன், பண்ணையாட்கள் முதலானோர்.

(அன்பன் இஞ்சினை முடுக்கி விட்டுத் திரும்புகிறான். சற்றுத் தொலைவில் வெறிச் சென்று காணப் பட்ட ஆற்றங் கரை பங்களாவின் தோற்றம் அவனை சிந்தனையில் ஆழ்த்து கிறது. தன் தம்பியோடு சேர்ந்து வாழ்ந்த இளமை நாட் களின் இன்ப நினைவுகள் அவனை வாட்டி வதைக்கின்றன. சென்று போன சம்பவங்களின் ஞாபக அலைகள் ஒவ்வொன் ருய் அவன் சிந்தனையில் மோதுகின்றன. இந்த நிலையில் மெய் மறந்திருந்த அவன். பண்ணை யாட்களின் குரல் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்புகிருன்.)

பண்ணையாள்: எசமான்! எசமான்!!

அன்: ம்ம்........(சிந்தனை கலைந்து) ஏம்ப்பா.

பண்ணை: 1. நெல்லை யெல்லாம் அடிச்சுத் தூத்தி களத் திலே கொண்டு கொட்டி யாச்சுங்க. ஆளுங்களுக்கு கூலி கொடுக்கணுமுங்க.

பண்ணை: 2. எசமானுக்காகத்தான் காத்துகிட்டு இருக்கோ முங்க.

அன்: இதோ வந்துட் டேம்ப்பா.

(போகிருன்.)

பண்ணை. 1. (தாழ்ந்த குரலில்) சின்னவர் போன நாளிலே இருந்து மூத்தவர் எப்படி அசந்து போயிட்டார் பார்த்தியா? முன்னைப் போலே இப்போ முகத்திலே களை இருக்கா பாரு.

பண்ணை: 2. சின்னதுலே இருந்து தூக்கி வளர்த்தாருல்ல. பாவம், இரத்த பாசம் சித்திர வதை பண்ணுது.

[***திரை***]

காட்சி 27.

இடம்: நாக மணியின் நாட்டிய விடுதி.

காலம்: மாலை.

பாத்திரங்கள்: அழகன், நண்பர்கள், நாகமணி முதலானோர்.

(நாட்டியம் நடை பெறுகிறது. அழகனை வசீகரிக்கும் முறையில் நாக மணி ஆடிப் பாடுகிருள்.)

அழ; (நாட்டியம் முடிந்ததும் போதை தலைக்கேற) ஆகாகா! என்ன அழகு! என்ன ஒயில்!! என்ன கெம்பீரம்!!! என்ன தேஜஸ்!!!! நாட்டிய சுந்தரியே, நடனம் போதும். மலர் போன்ற உன் பாதம் நோகும்.

நஞ்: (இடை மறித்து) எக்ஸ்க்யூஸ் மீ அழகா, ஒரு அர்ஜண்ட் என்கேஜ் மெண்ட் நான் போய்ட்டு வர்றேன்.

அழ: போ! போ!! போ!!! (நண்பர்கள் நழுவுகின்றனர்) சிவ பூஜையில் கரடி.

(நாக மணி அழகன் அருகில் வருகிருள்.)

வா. அழ கரசியே வா. எழிலின் எல்லையே, உயிர் பெற்ற ஓவியமே. வற்ருத இன்பச் சுனையே, நடமாடும் பொற் சிலையே. நர்த்தன நளின சிங்கார நங்கையே வா. விரைவில் வா. தயங் காமல் வா.

நாக: (கேலியாக) ஏது? வர்ணனையில் கவிஞர், கலைஞர், கதாசிரியர் எல்லாம் உங்களிடம் பிச்சை வாங்க வேண்டும் போலிருக்கிறதே.

அழ: (போதையில்) அதி ரூப சுந்தரி! உன் அழகிய தோற் றம், அற்புத அலங்காரம், கொஞ்சும் கிள்ளை மொழி இவை யெல்லாம் ஊமையை நாவலனுக்கும். பஞ்சையைப் பாவலனுக் கும். வறிஞனை அறிஞனுக்கும், கொலைஞனைக் கலைஞனுக்கும், கயவனைக் கவிஞனுக்கும் கண்ணே. (நாக மணியின் கையைப் பற்றுகிருன். அவள் அவன் பிடியிலிருந்து தன்னை நாசூக் காக விடுவித்துக் கொள்கிருள்.)

நாக: அடுக்கு மொழியில் ஆவேசமாய்த் தான் அரற்று கிறீர்கள். ஆனல் அர்த்தம் அனர்த்த மாகி விடுகிறது. அறிவும் அடகு போய் விடுகிறது அது போகட்டும். கட்டிய மனைவியை உரிமையுடன் நெருங்குவது போலல்லவா என் னிடம் நடந்து

கொள்கிறீர்கள். நான் என்ன? பரம்பரை நாட்டியக்காரி என்று நினைத்தீர்கள்? குடும்பப் பெண் என்பது ஞாபக மிருக்கட்டும்.

அழ: (ஆலோசித்தவாறு) நாகு... வந்து....வந்து....நீ ஏன் என் மனைவி யாகி விடக் கூடாதுன்னு கேட்கிறேன்?

நாக: (சிந்திப்பது போல் நடித்து) மனைவி யாகவா?

அழ: ஏன்? எனக்கென்ன அழ கில்லையா? அந்தஸ் தில்லையா? ஆண்மை யில்லையா?

நாக: மனைவி?

அழ: (திடுக்கிட்டு) மனைவி....மனைவியும் இருக்கிறாள். ஒரு கண்ட்ரி புருட். (Country Brute)..........

நாக: (இடை மறித்து) பார்த்திங்களா? பார்த்திங்களா?

அழ: (தொடர்ந்து) மனைவி இருக்கிறாள், ஆனால் என் வரையில் அவள் இறந்து விட்டாள். இனி நீதான்-என் தர்ம பத்தினி, இதய ராணி, இன்பக் கேணி, வாழ்வின் தோணி, எல்லாம். என் திரண்ட ஆஸ்திக்கும் இனி நீதான் சர்வாதிகாரிணி.

நாக: இரு தாரத் தடைச் சட்டம்?

அழ: நம்மிடம் நடக்காது நங்கையே.

(நாகமணியை அணைக்கிறான்)

நாக: (அழகனின் ஆலிங்கனத்தில்) அன்பரே, தங்கள் ஆஸ்தியைப் பற்றி அக்கரை இல்லை. தங்கள் அன்பும் ஆதரவுமே எனக்குப் போதும். இனி தாங்கள் தான் என் பதி, தெய்வம், சகலமும்.

அழ: (நிம்மதியாக) அப்பா! இப்பொழுதுதான் என் மனம் நிம்மதி யடைந்தது. உடைந் திருந்த என் உள்ளத்துக்குப் புத்துயிர் ஊட்டி விட்டாய். How about our Wedding darling?

நாக: Sweet heart, கலியாணம் கட்டினால்தான் கணவன் மனைவியா என்ன?

'காதலர் இருவர் கருத்தொரு மித்து
ஆதரவு கொள்வதே இன்பம்.'

நான் ஒரு பேச்சுக்குச் சொன்னால் அதற்குள் என் கழுத்தில் கயிற்றைப் போடப் பார்க்கிறீர்களே.

அழ: சபாஷ் என் சமத்து நாகு! (கன்னத்தில் செல்லமாகத் தட்டி) என் நாகுவின் அழகும், அன்பும், அறிவும், அருங்குணமும் ஒன்றோடொன்று போட்டி யிடுகின்றன. (நாக மணியைத் தழுவுகிறான்.)

நாக: இந்த அன்பு என்றைக்கும் குறையாதே?

அழ: ஆழ் கடல் நீர் வற்றுமா கண்ணே?

(மெய்ம் மறக்கின்றனர்)

(சற்றுப் பொறுத்து)

அழ: இன்றைய இரவு Programme?

நாக: ஈஸ்வரன் கோவிலுக்குப் போய்த் திபாராதனை செய்துவிட்டு வரலாமா?

அழ: ஓ! நீ ஒரு பெரிய ஈஸ்வர பக்தை போல் இருக்கிறதே. இதில் எல்லாம் எனக்கு சிறிதும் நம்பிக்கை கிடையாது.

நாக: உங்கள் அன்பு தெய்வானுக்ரஹத்தால் தானே எனக்குக் கிடைத்தது. அதற்காக ஸ்வாமிக்கு நைவேத்தியம் செய்துவிட்டு வரலாம் என்று நினைத்தேன் (கொஞ்சலாக) ஏன் கோபமா?

அழ: கோபமா! அதுவும் உன் மீதா? என்றைக்கும் இல்லை ஆனால்........

நாக: உங்களுக்கு இஷ்டமில்லா விட்டால் வேண்டாம். இனி தாங்கள்தானே என் ஸ்வாமி. தங்கள் வாக்குதான் எனக்கு இனி வேத வாக்கு.

அழ: நாகு, என் கண்ணே, உத்தம பத்தினிகள் பலர் அவதரித்த இப் புண்ணிய பூமியில் பதித் துரோகம் செய்யும் பரத்தைகளும் (சாவித்திரியை மனதில் நினைத்துக்கொண்டு) இருக்கத்தானே செய்கிறார்கள். (நாகமணி திடுக்கிடுகிறாள்) உம்........ சரி........எதையோ நினைத்தேன் என்னவோ பேசுகிறேன். இன்றைய பொழுது போக்கு 'பாலஸ்' தியேட்டரில் ஆடும் 'பத்தினி' உனக்கேற்ற படம். இல்லையா?

நாக: நல்லாச் சொன்னீங்க.

அழ: என்ன சொல்லுகிறாய்?

நாக: OK. தங்கள் இஷ்டம் என் பாக்கியம்.

(கார் தியேட்டரை நோக்கிச் செல்கிறது.

[திரை]

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 103405
MADRAS

காட்சி 28.

இடம்: அழகாபுரியில் செல்லப்பன் வீடு.

காலம்: மாலை மயங்கும் நேரம்.

பாத்திரங்கள்: செல்லப்பன், சொர்ணம்.

(செல்லப்பன் பாட்டுப் பாடிக் கொண்டே பிரவேசிக்கிருன்.)

செல்: (பாட்டு)

'ஆத்தங் கரை ஓரத்திலே, அந்தி சாயும் நேரத்திலே,
அழகாக வந்தகுட்டி, அந்த குட்டி நம்ம குட்டி'
தலை பின்னிப் பூ முடித்து, தண்ணிக் குடம் கையிலேந்தி,
தளுக்காய் நடந்து வந்த தங்கக் குட்டி நம்ம குட்டி'

சொர்: அடடா! இது என்ன பாட்டா?

செல்: ஏன்? எப்படி யிருக்குதாம் என் பாட்டு?

சொர்: பாட்டு நல்லாத்தான் இருக்கு. ஆனல், கேட்கத்தான் சகிக்கலை. ஏது? ஆள் ஒரே குஷாலா இருக்காப்போலே இருக்கு?

(செல்லப்பனுக்குச் சொர்ணம் சாதம் பறிமாறுகிருள்)

செல்: (பெருமூச்சுடன்) மூத்தவரு புண்ணியத்திலே நாம் குடியும் குடித்தனமுமா நல்லாத்தான் இருக்கோம். பண்ணையார் குடும்பம் போன போக்கைப் பார்த்தியா?....... அது சரி. இது என்ன குழம்பு?

சொர்: முருங்கைக் காய் சாம்பார். ஏன் தெரியலியோ?

செல்: (கிண்டலாக) ஓஹோ! நெனைச்சேன், இது சாம்பாரா இருக்கலாம்ன்னு.

சொர்: முருங்கைக் காய் சாம்பார்ன்னு உங்களுக்கு ரொம்பப் பிடிக்குமேன்னு வாய்க்கு ருசியாய் செஞ்சு வச்சால், கிண்டலா பண்றீங்க? இது நல்லதுக்குக் காலமில்லை.

செல்: அதைத்தானே நானும் சொல்ல வந்தேன். நல்லவங்களுக்குக் கெடுதல் ஒண்ணு பின்னலே ஒண்ணு வந்து கொண்டே இருக்குது. பொல்லாதவங்களுக்குத்தான் இது காலமாயிருக்கு. நாட்டிலே வரவர அக்ரமங்கள் அதிகரிச்சுக் கொண்டே போகுது.

சொர்: காரணம்?

O-2,NKS,
N15

செல். கேட்பார் கேள்வி இல்லே. தட்டிக் கேட்க ஆள் இல்லேன்னு தம்பி சண்டப் பிரசண்டன்தான். தப்பு பண்றவங் களுக்கு சரியானபடி தண்டனை கொடுக்கிற தில்லே.

சொர்: ஏன்? நீங்க நீதிபதியாய்ப் போகிறது தானே?

செல்: ஹூம்! என்னை மட்டும் ஒரு ஜட்ஜ்' ஆக நியமிச் சால், தீட்டுத் தீட்டுன்னு தீட்டி புடுவேன்.

சொர்: என்னத்தை?

செல்: குத்தவாளி ஒவ்வொருத்தனும் நம்ம வீட்டிலே ஒரு நாள், அதாவது மூணு வேளை, கண்டிப்பாய் சாப்பிட்டா கணும்னு. தீர்ப்பு பண்ணிட்டால் அப்புறம் அவனுக ஏன் தலை யெடுக்கிறானுக?

சொர்: ஹூம்க்கும்! இந்தக் குறும்புக்கு மட்டும் குறைச்சல் இல்லே.

[*திரை*]

காட்சி 29.

இடம்: பம்பாய் குதிரைப் பந்தய மைதானம்.
காலம்; மாலே.
பாத்திரங்கள்: அழகன், நஞ்சப்பன், முதலானோர்.

(பந்தயம் முடிந்து வீடு திரும்புகின்றனர்)

நஞ்: (அழகனிடம்) கவலைப் படாதே அழகா. ஆரம்பத் திலே கொஞ்ச பணம் கோட்டை போகத்தான் செய்யும். அப்பு றம் போகப் போக எல்லாம் சரியாய்ப் போயிடும்.

(அழகன் மௌனமாய்க் காரில் ஏறுகிறான்)

நபர் 1: இருந்திருந்து அந்த 'வேகவதி' மேலே போய்ப் பணத்தைக் கட்டினேன் பாரு. என் புத்தியைச் செருப்பாலே 'பட், பட்' ன்னு நல்லா அடிக்கணும்.

நபர் 2: அடடா, இப்பதான் ஞாபகம் வருது. என் செருப்பை 'ரேஸ் கோர்ஸ்' லே மறந்து விட்டு விட்டு வந்துவிட் டேன். செருப் பில்லாமே கஷ்டமாயில்ல இருக்கு இப்போ.

(1 நபர் முறைக்கிறார்)

நபர் 3: குதிரையா அது? நோ, நோ, It is a Typical donkey.

நபர் 1. பேருக்கும் ஓட்டத்துக்கும் துளிக்கூட சம்பந்தம் இல்லேன்னு! நான் மட்டும் அந்த 'Lightning' மேலே பணத்தைக் கட்டியிருந்தேன்னு? அட! அடா!! அடா!!!

நபர் 2: எங்க அத்தைக்கு மட்டும் மீசை மொளச்சி இருந்துதுன்னு? அட! அடா!! அடா!!!

நபர் 4: (கோபாவேசமாக) சட்டம் போடுறுன்களாம் சட்டம்! இந்த குதிரைப் பந்தயத்தை ஒழித்துக் கட்ட ஏன் சட்டம் கொண்டு வரக் கூடாது என்று கேட்கிறேன். குதிரைப் பந்தயம்! குடியைக் கெடுக்கும் குதிரைப் பந்தயம்!! குடலெறிய வைக்கும் குதிரைப் பந்தயம்!!! எத்தனை எரிந்த வயிறுகள்? அறுந்த தாலிகள்?? மறைந்த உயிர்கள்???........

நபர் 1: யாரோ அரசியல் வாதி போலே இருக்கு.

நபர் 2: நீர் ஒண்ணு அவரும் நம்ப கூட்டாளிதான்,

நபர் 4: (1 நபரிடம்) ஏன் சார், ஒரு நாலு அணு இருந்தால் தர்றீங்களா? டிக்கட்டுக்குக் கூட பணம் இல்லே.

நபர் 1: பூ! ஊருக்கு உபதேசம்தானு? நாசமாய்ப் போச்சு.

[திரை]

★

காட்சி 30.

இடம்: செல்லப்பன் வீடு

காலம்: மாலே

பாத்திரங்கள்: செல்லப்பன், சொர்ணம்.

(சொர்ணம் வீட்டு அலுவல்களே கவனித்துக் கொண்டிருக்கிறுள். செல்லப்பன் பிரவேசம்)

செல்: (பரபரப்புடன்) சொர்ணம், சமையல் எல்லாம் சீக்கிரம் ஆகட்டும்.................

சொர்: ஏன் இப்படி பட்டணமே பறிபோனுப்பிலே பறக்கிறீங்க?

செல்: பட்டணம் ஒண்ணும் பறி போகலேடீ, பட்டணத்துக்கு இவர் போருர்.

சொர்: பட்டணத்துக்குப் போறீங்களா? எதுக்கு?

செல்: இந்த இஞ்சின் கொஞ்சம் இடக்கு பண்ணுது. அதுக்கு புதுசா சில சாமான் எல்லாம் வாங்கிப் போட வேண்டியிருக்கு. அதுக்காக மூத்தவரு என்னைப் பட்டணம் போகச் சொல்லி இருக்காரு.

சொர்ணம்: நெசம்மாவா?

செல் இல்லை பொய்யா? இதென்னடி கேள்வி? இந்த மாதிரி அசட்டுக் கேள்வி கேட்கிறது சர்வ சகஜமா இருக்கு. ஒருத்தர் சாப்பிட்டுக் கொண்டு இருப்பார்; அவரைப் பார்க்க வந்தவர் ஓ சாப்பிடுறீக்களா?ன்னு கேட்பார். அட அது தான் போகுது. ஒருத்தர் தடுமாறிக் கீழே விழுந்துட்டார்ன்னு வெச்சுக்கோ, அப்போகூட அதைப் பார்த்தவரு 'அடடா விழுந்திட்டிங் களா?ன்னு விசாரிக்காமல் விட மாட்டார். அந்தமாதிரி, 'நான் பட்டணம் போறே'ன்னு சொன்ன 'நெசம்மாவா'ன்னு நீ அசட்டுக் கேள்வி கேட்கிறே.

சொர்: அதுக்குச் சொல்லலை. நான் பட்டணமே பார்த்த தில்லை. என்னையும் அழைச் சிட்டு போங்களேன்.

செல்: ஏன்? ஒருவாரம் நான் விச்ராந்தியாய் இருக்கிறது உனக்குப் பிடிக்கலையாக்கும்?

சொர்: அத்தான்! அத்தான்!! நல்லாயிருப்பீங்க, தயவு செஞ்சி............

செல்: பணம் பத்தாதே சொர்ணம்.

சொர்: எங்கிட்டே கொஞ்சம் பணம் இருக்கு. ..

செல்: ஆ! அப்படி வா வழிக்கு. அதுதானே பார்த்தேன். சட்டைப் பையிலே போடுகிற பணமெல்லாம் 'திடீர் திடீர்'ன்னு அந்தர்த்தியானம் ஆயிடுதேன்னு. இப்பல்ல புரியுது விஷயம்.

சொர்: அப்படி அரையும் காலுமா சேர்க்கக் கொண்டு தானே இப்ப அவசரத்துக்கு உதவுது? நான் என்ன திருடியா?

செல்: நான் அப்படிச் சொன்னேனு? (தனக்குள்) அவசர மாம் இல்ல அவசரம்; என்ன தலை போற அவசரமோ?

சொர்; அது கெடக்குது. நான் கேட்டது?

செல்; முடியாதுன்னு ஏதாவது எப்பவாவது சொல்லி யிருக்கேனு? அல்லது சொல்லத்தான் முடியுமா? அம்மா ஆர்டருக்குத்தான் அப்பீல் கிடையாதே...........சரி 'சட்டுபுட்டு'ன்னு ஆக வேண்டியதைப் பாரு.

[**திரை**]

✸

காட்சி 31.

இடம்: பம்பாயில் அழகன் பங்களா.

காலம்: மாலை.

பாத்திரங்கள்: அழகன், நஞ்சப்பன், நாகமணி முதலானோர்.

(நாகமணி அறைக்குள் உட்காந் திருக்கிருள். அழகன் பிரவேசம்)

அழ: ஹலோ Sweet heart!

....

ஹலோ Honey!

....

ஹலோ Darling!

நாக: ஆமாம், Sweet heart, Honey, Darling, வார்த்தை ஜாலங்களுக்கு மட்டும் வரையறை இல்லை. ஆனல் காரியத்தில் தான் கையாலாவ தில்லை.

அழ: என்ன நாகு நீயா இப்படிப் பேசுகிருய்?

நாக: பிறகென்ன? வைர நெக்லஸ் கேட்டு நாள் மூணுச்சு.

அழ: ஓ மறந்து விட்டேன்.

நாக: பின்னே மறக்காதா? ஆசை அறுபது நாள், மோகம் முப்பது நாள், அப்புறம்........................

அழ: அப்படி யெல்லாம் ஒன்று மில்லை நாகு. உன்னைப் பொன்னுலேயே இழைத்து விட்ட நான், இப்பொழு தானு தயங்கப் போகிறேன்? எங்கே செக் புஸ்தகம்?

(நஞ்சப்பன் பிரவேசம்)

நஞ்: செக் புஸ்தகம் பத்திரமாய்த்தான் இருக்கிறது. (செக் புஸ்தகத்தை அழகன் மேசையில் வீசி எறிகிருன்) ஆனல் Bankல் Credit தான் Nil balanceலே இருக்கு.

அழ: என்ன நஞ்சப்பா விளையாடுகிருய்? நாகமணி தேவி விஷயத்தில் கூடவா வேடிக்கை?

நஞ்: வேடிக்கை இல்லை விபரீதம்தான்.

அழ: என்ன உளறுகிருய்? உனக்கொன்றும் பைத்தியம் பிடித்து விட வில்லையே.

நஞ்: எனக்கொன்றும் பைத்தியமில்லை. உனக்குத்தான் போறாத காலம்.

அழ: (பதட்டத்துடன்) அரோகரா Bankல் போட்டிருந்த அஞ்சு லட்சம்?

நஞ்: அது அப்பவே அரோகரா!

அழ: கோவிந்தா Bankல் போட்டிருந்தா பத்து லட்சம்?

நஞ்: கோவிந்தா! கோவிந்தா!!

அழ: காலிங்கராயா Bank பணம்?

நஞ்: காலி! அழகா, குந்தித் தின்றால் குன்றும் மாளுமே. இப்படி கண்ணு மண்ணு தெரியாமே பணத்தை வாரி இறைச்சால், எத்தனை காலம் தான் தாளும்? வருவாயோ இல்லை. செலவுக்கோ வரையறை இல்லை. தொழிலைத் துவக்கினேன். உன் துரதிர்ஷ்டம் அதிலும் நஷ்டம். என் கையை வேறே கடிச்சுட்டுது. நான் என்ன செய்யட்டும்?

அழ: அடா பாவி! ஆசை காட்டி மோசம் செய்து விட்டாயே. நல்ல நண்பனென்று நம்பினேன். நயவஞ்சகன் என்று நிரூபித்து விட்டாயே. நம்பினவனை நட்டாற்றில் விட்ட, நாசகாலா! நச்சரவே! துரோகி! துராத்மா! துன்மார்க்கா!

(நஞ்சப்பனுக்குக் கோபம் பொங்குகிறது. அழகன் கன்னத்தில் 'பளார்' என்று ஒரு அறை விடுகிறான். அழகன் கையை ஓங்கவே, மற்றவர்கள் அவன் கையை எட்டிப் பிடித்துக் கொள்கின்றனர். நாகமணி நழுவி விடுகிறாள்)

நஞ்: பிதற்றுகிறான் பேடிப் பயல். மதுவாலும், மையலாலும் மதி கெட்டு மான மழிந்த நீ ஒரு மனிதனா?...... உம்........ அன்று ஒரு நாள் என் கன்னத்திலடித்தாயே, நினைவிருக்கிறதா? இதோ வட்டியும் முதலுமாக வாங்கிக் கொள். (மீண்டும் அழகன் கன்னத்திலடிக்கிறான்)

அழ: சண்டாளா, எந்தக் கையால் என்னிடம் வேண்டியது வாங்கிச் சாப்பிட்டாயோ அதே கையால் என்னை அடிக்கவுமா துணிந்து விட்டாய்? நம்பிக்கைத் துரோகம் செய்த உனக்கு நரகம் தானடா கிடைக்கும்.

நஞ்: பூ! மோட்சமாம். நரகமாம் மூளை கெட்ட முட்டாள்களின் மூட நம்பிக்கை. வேலையற்ற வீணர்கள் உருவாக்கி வைத்த வெறும் புளுகுக் கோர்வை. அர்த்தமற்ற அபத்த களஞ்சியம். தெரிந்து கொள். பணத்தால் இந்தப் பாரையே ஸ்வர்க்கமாக்கலாம். பணமற்றவன் வாழ்வுதான் நரகம்.

அழ: ஹூம்... தெய்வம் தானடா உன்னைத் தண்டிக்க வேண்டும்.

நஞ்: தெய்வம்! அப்படிக் கூட ஒன்று இருக்கிறதா என்ன? இது வரை தெய்வத்தைப் பற்றிக் கனவிலும் கருதாத, சிறிதும் சிந்தியாத நீ. இன்று பஜகோவிந்தம் பாடுவது ஏன்? தெய்வ மென்றால் என்ன? வாழ்க்கையில் ஏமாற்றம் அடைந்தவர்களும், மக்களை ஏமாற்றுகிறவர்களும் வேறு வழி யின்றி உதவிக்கு அழைத்து ஆறுதல் கொள்ளும் கண் காணு, கருத் தறியா. ஒரு கற்பனை உரு. இதை உன் அனுபவத்திலேயே அறிந்து கொண் டிருப்பாயே அந்தக் கடவுள் சாதிக்க முடியாத எதையும் இந்தப் பிரத்தியட்ச தெய்வம் (சட்டைப் பைக்குள் கை விட்டு பணத்தைக் எடுத்துக் காட்டி) பணம் சாதித்து விடும். வேதாந்தம் போதும். வெளி யேறு உடனே.

அழ: வெளி யேறுவதா? இது என் பங்களா...

நஞ்: ஹஹ்ஹஹ்ஹா, உன் பங்களா! உன் பங்களாவும் காரும் உன் கடனுக்குக் கூடக் காணுதே. வெளியே பார். (அழகன் வெளியே பார்க்கிருன்) அவற்றை ஜப்தி செய்து ஏலம் போட வந் திருக்கின்றனர் சர்க்கார் கிங்கரர்கள். நான்தான் அவற்றை ஏலம் எடுக்கப் போகிறேன். இனி அவை என் கார்! என் பங்களா!!

அழ: (திடுக்கிட்டு) என்ன கடனு? ஏலமா? ஓட்டாண்டி யாய் வந்த நீ ஏலம் எடுக்கப் போகிருயா? இப்பொழுது எல்லாம் புரிந்தது. என் ஆஸ்திக்கு உன்னைப் பொறுப்பாய் நியமித்த தற்கு நாளடைவில் எனக்குக் குழி தோண்டி யிருக்கிருய். பணத் தைப் பாழடித்தது மன்றி வேண்டியது கையாடியு மிருக்கிருய்.

நஞ்: ஆம் கையாடினேன்! அப்படித்தான் வைத்துக் கொள். நீ என்ன செய்யப் போகிருய்?

அழ: ஹூம்! என்ன செய்வேனு? கோர்ட்டில் கேஸ் போட்டு உன்னைக் கம்பி எண்ண வைப்பேன்.

நஞ்: ஹஹ்ஹஹ்ஹா! வழக்குத் தொடுப்பாயா? நான் கையாடினேன் உண்மை அதற்கு Witness, Proof, Record ஏதாவது உண்டா உன்னிடம்? அதிகாரிகள் தயவு உண்டா? அல்லது வழக்கை நடத்தப் பணம்தான் உண்டா? நீதியையும் விலை கொடுத்துத்தான் வாங்க வேண்டும் அப்பனே. நீ மிரட்டி ஞல் உன் அப்பன் மிரளலாம். உன் அண்ணன் மசியலாம். ஆனல் இந்த நஞ்சப்பனை மிஞ்ச முடியாது தம்பி.

அழ: (நஞ்சப்பனை நெருங்கிய வண்ணம்) சதிகாரப் பயலே, உன்னை........

நஞ்: (இடை மறித்து) சீ போடா வெளியே. (அழகனின் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளுகிருன். அழகன் தலை சுவரில் மோதி இரத்தம் பீறிடுகிறது. தள்ளாடிய வண்ணம் வெளி யேறுகிருன்)

[**திரை**]

காட்சி 32.

இடம்: ஆபத்சகாயம்பிள்ளை வீடு,

காலம்: இரவு 9-மணி

பாத்திரங்கள்: ஆபத்சகாயம் பிள்ளை, அன்பன், சாமி தங்கம்மா முதலானோர்,

(பண்ணையார் உடல் நலம் குன்றி படுக்கையில் இருக்கிருர். அன்பன் அவர் அருகில் கவலை தோய்ந்த முகத்துடன் அமர்ந் திருக்கிருன்)

ஆபத்து: அழகனைப் பற்றி ஏதாவது தகவல் கிடைத்ததா?

அன்; இல்லையே அப்பா, பட்டணத்திலே தெரிஞ்சவங்க எல்லாருக்கும் எழுதிப் பார்த்து விட்டேன்,

சாமி: (குறுக்கிட்டு) ஏங்க எசமான், பத்திரிகைகளிலே ஒரு விளம்பரம் கொடுத்துப் பார்த்துட்டால்?

அன்: செய்யலாம், ஆனுல் நம்ப குடும்ப விவகாரத்தையெல்லாமா பேப்பரிலே அம்பலப் படுத்துகிறது? அதினுலே நமக்கு வேண்டாதவர் களுக்குத் தானே கொண்டாட்டம்.

சாமி; ஆபத்துக்குப் பாபமில்லிங்க,

அன்: ஆனுல்...!

ஆபத்: ஆனுல் என்னப்பா?

அன்: அழகனே தான் இருக்கிற இடத்தை நமக்குத் தெரியப் படுத்த வில்லை. நம் மேலே அவனுக்கு அத்தனை வெறுப்பு.

பேப்பரிலே நம்ம விளம்பரத்தைப் பார்த்து விட்டு கோபித்துக் கொண்டு எங்கேயாவது கண் காணுத இடத்துக்குப் போய் விட்டால்?

ஆபத்: (பெருமூச்சுடன்) உம்............பாவம் சாவித்திரி, சின்னஞ் சிறிசு. துடியாய்த் துடிக்குது.

(தங்கம்மாள் அலறிப் புடைத்துக் கொண்டு ஓடி வருகிருள்)

தங்: (பரபரப்புடன்) ஐயா, ஐயா, அம்மா போயிட்டாங்க.

அன்: (திடுக்கிட்டு) எங்கே?

தங்: நான் என்னத்தைச் சொல்றதுங்க?

சாமி: (குறுக்கிட்டு) நடந்ததைச் சொல்லி அழு சீக்கிரம்.

தங்: அம்மா படுக்கிற அறைக் குள்ளே போனுங்க. சித்த நேரம் கழிச்சு நான் பாலே எடுத்துக் கிட்டு போனேனுங்க.

ஆபத்: (பீதியுடன்) உம் அப்புறம்?

தங்: படுக்கையிலே பார்த்தா........

சாமி: (குறுக்கிட்டு) உம் பார்த்தா?

தங்: அம்மாவைக் காணலீங்க.

அன்: பங்களா பூராவும் தேடிப் பார்த்தாயா?

தங்: ஓ! சந்து பொந்து விடாமே சலிச்சுப் பார்த்துட்டேனுங்க. எதுக்கும் இருக்கட்டுமேன்னு கிணற்றுக் குள்ளே கூட ஒரு தடவை எட்டிப் பார்த்துட்டு தானுங்க வந்தேன்.

சாமி: அட சட் நீ வேறே.

(விடு விடுவென்று வண்டியைப் பூட்டிக் கொண்டு ஆற்றங்கரை பங்களாவுக்கு அன்பன், சாமி, தங்கம்மா மூவரும் செல்கின்றனர். சாவித்திரியின் படுக்கையில் ஒரு கடிதத்தை அன்பன் கண்டு அதைப் பிரித்துப் படிக்கிருன்

'அவர் இல்லாமல் எனக்கு வாழ்க்கையே கசப்பாகி விட்டது. அவர் போன நாள் முதல் பங்களா எனக்கு சூனியமாய்க் காண்கிறது. பழைய நினைவுகள் என்னை மனமடிவாக்கி வதைக்கின்றன. ஒவ்வொரு நாளையும் ஒரு யுகமாகக் கழித்து வருகிறேன். எப்படியும் அவரைத் தேடிக் கண்டு பிடித்து அவரோடு வாழ்வது, அல்லது சாவது என்ற முடிவுக்கு வந்து விட்டேன். நான் போய் வருகிறேன்.'

'சாவித்திரி'

அன்: (தனக்குள்) போய் வருகிறேன்! போய்வருகிறேன்!!

சாமி: (குறுக்கிட்டு) எங்கே எசமான்?

அன்: சீ! (தனக்குள்) எங்கே போயிருப்பாள்? எதற்கும் செல்லப்பனுக்குத் தெரிவித்தால்...?

சாமி: செய்யலாமுங்க.

(அன்பன் தந்தி பாரம் ஒன்றைப் பூர்த்திசெய்கிருன்)

அன்: டேய், ஓடிப் போய் இதைக் கொடுத் துட்டு வாடா

சாமி: யாரு கிட்டேங்க?

அன்: உங்க தாத்தாகிட்டே! போய் இந்த தந்தியை போஸ்டாபீஸிலே கொடுத்துட்டு வாடான்னு........

(சாமி ஓடுகிருன்)

அன்: (தனக்குள்) பாவம். சாவித்திரியின் மனம் பேதலித்து விட்டது. அதுதான் அவசரமாக இந்த அசட்டு முடிவுக்கு வந்து விட்டாள்..

[திரை]

★

காட்சி 33.

இடம்: சென்னையில் செல்லப்பன், சொர்ணம் தங்கியிருக்கும் வீடு.

காலம்: இரவு 12 மணி

பாத்திரங்கள்: செல்லப்பன், சொர்ணம்.

(செல்லப்பனும் சொர்ணமும், பட்டணத்தைச் சுற்றிப் பார்த்து விட்டுத் திரும்புகின்றனர்.)

செல்: (விட்டுக்குள் நுழைந்த வாறு) உஸ், அப்பாடா, ஒரு மாதிரியா பட்டணத்தைச் சுத்திப் பார்த்துட்டு வர்றதுக்குள்ளே போதும் போதும்னு ஆயிடுது........... என்ன சொர்ணம்? திருப்தி தானே?

சொர்: (அலுப்புடன்) உம்........திருப்தி தான்,

செல்: என்ன ரொம்ப சலிப்பாய்ச் சொல்றியே? அது சரி! பட்டணத்திலே எதெல்லாம் உன் கண்களைக் கவர்ந்தது? சொல் பார்க்கலாம்.

சொர்: சொல்லட்டுமா?

செல்: (விரலை மடக்கிய வண்ணம்) உம்.

சொர்: வந்து....பிச்சைக் காரங்க....பிக் பாக்கட் காரங்க.... அப்புறம்...........

செல்; விழுப்புரம்! சீ........சீ........சீ....விடிய விடிய....

(கதவு தட்டப் படுகிறது.)

சொர் (கதவைத் திறந்து) யாரது? இந்த அத்த ராத்திரி வேளையிலே?

வந்தவர்: எக்ஸ் பிரஸ் தந்திங்க.

செல்: (பரபரப்புடன் தந்தியைப் பிரித்தவாறு) ஐயையோ! என்னமோ ஏதோ தெரியவில்லையே!

(படிக்கிறான்)

'சாவித்திரி-வெளி யேறி விட்டாள்- பட்டணம்- வரக் கூடும்- காலை-ஸ்டேஷனில்-வந்து-பார்'

அன்பானந்தன்.

செல்: (பெரு மூச்சுடன்) இருந்தாலும் ஒரு குடும்பத்திலே இந்த மாதிரி இடி மேலே இடி விழக் கூடாது.

சொர்: பாவம்! அந்தம்மா வேறே நிறை கெர்ப்பிணியாச்சே!

செல்: நீ பட்டணம் வந்ததுக்கு ஏதாவது ஒரு உபகாரமாவது ஆச்சுது. சரி. சரி. சீக்கிரம் படுத்துக்கோ கிழக்கு வெளுக்கும் முன்னாலே எழும்பூர் ஸ்டேஷனுக்குப் போயாகணும்.

(படுக்கைக்குச் செல்கின்றனர்.)

[**திரை**]

காட்சி 34.

இடம்: எழும்பூர் ரயில்வே ஸ்டேஷன்.
காலம்: அதி காலை.
பாத்திரங்கள்: செல்லப்பன், சொர்ணம்.

(செல்லப்பனும் சொர்ணமும் ப்ளாட் பாரத்தில் காத்திருக்கிறார்கள். ஒவ்வொரு ரயிலிலும் வந்த பிரயாணிகள்

கூட்டத்திலும் சாவித்திரியைத் தேடிப் பார்க்கின்றனர், ஆனால் அவளைக் கண்டு பிடிக்க வில்லை.)

செல்: (சலிப்புடன்) இந்த ட்ரெயினில் கூட காணோமே!

சொர்: ஒரு வேளை முதல் வண்டியில் வந்திருக்கலாமோ?

செல்: அதற்காகத்தான் உன்னைச் சீக்கிரமாய்ப் புறப்படச் சொன்னேன்.

சொர்: ஆரம்பிச் சுட்டிங்களா மறு படியும்? மேல்க் கொண்டு ஆக வேண்டி யதைப் பார்க்கிறதை விட்டுவிட்டு ....

(அடுத்த ரயிலையும் பார்த்து விட்டு ஏமாற்றத்துடன் திரும்பு கின்றனர்.)

செல்: (போகும் வழியில்) எப்படியும் சாவித்திரி யம்மாளைக் கண்டு பிடிக்காமே நான் ஊர் திரும்பப் போறதில்லை.

சொர்: பண்ணையார் நமக்குச் செஞ் சிருக்கிற உபகாரத் துக்கு நாம் அது கூடச் செய்யலைன்னு?

[**திரை**]

★

காட்சி 35.

இடம்: பம்பாயில் நஞ்சப்பன் பங்களா.

காலம்: காலை.

பாத்திரங்கள்: அழகன், நஞ்சப்பன், நாக மணி முதலானோர்.

(அழகன் பங்களாவுக்கு வருகிறான். வாசலில் நஞ்சப்பன் எதிர்ப் படுகிறான்.)

நஞ்: மறுபடியும் இங்கு எதற்காக வந்தாய்?

அழ: உன் மூஞ்சியைப் பார்க்க வரவில்லை என் நாகுவைத் தேடி வந்தேன்.

நஞ்: ஹஹ்ஹஹ் ஹா. (இடி இடி யென்று சிரித்து) உன் நாகு? நாகமணி இனி என் மோக மணி! என் போக மணி!

(நாகமணி வருகிறாள்.)

அழ: வா நாகு, நாம் எங்காவது போய் எளிய வாழ்வு நடத்தலாம். உன்னையும் தன்னைப் போல் எண்ணுகிறன் இந்த உன்மத்தன்.

நாகமணி: I am Sorry அழகா...........

அழ: என்ன? வரமாட்டாயா? வஞ்சகி! இத்தனை நாள் பத்தினி வேஷம் போட்டாயே, பசப்புக் காரி. பர்த்தாவுக் காகவா அல்லது பணத்துக்காகவா? பரத்தையே! பழிகாரி! பாபாத்மா!....

நாக: (குறுக்கிட்டு) நிதானமாகப் பேசு. கொண்ட மனைவியை விட்டுக் கண்டவளைப் பெண்டாள வந்த பெரிய மனுஷா, நீ மட்டும் என்ன? வெட்கத்தை விட்டுச் சொல்கிறேன் வெளிப் படையாக. உன்னோடு உறவாடியது. கேவலம் உடல் உணர்ச்சிக் காக அல்ல, பணத்திற் காகவே உனக்குப் பணிந்தேன். பணம் பறந்து விட்டது, இனி நீ பயண மாகலாம்.

அழ: அடி நாணமற்ற நாசகாலியே! நஞ்சுடைய நாகமே! நன்றி கெட்ட நாயே! உடலை விற்று ஊதியம் அடைவதை விட நீ உயிரை விடுவது மேல். உன்னைக் கொன்றாலும் தோஷமில்லை. (நாகமணியை ஆவேசத்துடன் நெருங்குகிறன்)

நஞ்: (அழகனைத் தடுத்து நிறுத்தி) டேய்! அவளைத் தொட இனி நீ யார்? அவள் என் ஆசை நாயகி. உலகத்தைத் தெரிந்து கொண்டாயா? உன் பத்தினியைப் பழித்தாயே! போனால் போகிறது. இந்த நிலையிலாவது உண்மையை உணர்ந்து கொள். அவள் மேல் நாங்கள் சுமத்திய களங்கம் வெறும் கற்பனை. உன்னை அவளிட மிருந்து அப்புறப் படுத்த நாங்கள் வகுத்த வழி. உன் அண்ணனின் அன்புப் பிடியிலிருந்து அகற்ற நாங்கள் நடத்திய நாடகம்.

அழ: என்ன? என் மனைவி மாசற்றவளா?

நஞ்: மசக்கையால் மூர்ச்சை போட்டு விழுந்தவளை உன் அண்ணன் மூர்ச்சை தெளிவித்துக் கொண்டிருந்ததைக் கண்ட நீ, போதையில் மதி யிழந்து விட்டாய். அவ்வளவுதான். மேலும் அன்றொரு நாள் இரவு, சொர்ணத்துடன் நிலவில் குலவியது உன் அண்ணனல்ல...........செல்லப்பன் ...

அழ: ஆ! என் அண்ணா கபட மற்றவரா? அடா பாவிகளே! ஏக்கத்தாலும் ஏமாற்றத்தாலும் என் உடலில் உள்ள ஒவ்வொரு அணுவும் துடிப்பதைப் போல் நீங்களும் துடித்துத் தான் சாவீர்கள்.

நஞ்: பிதற்றியது போதும். போடா வெளியே........ஏய் யாரங்கே?

(காவல்காரன் ஓடிவருகிருன்)

Neck him out! (காவல்காரன் அழகனை வெளியில் தள்ளுகிருன். கடைசி முறையாக தன் பங்களாவை ஏறிட்டு நோக்கிய அழகனின் பார்வையில், மாடியில் நஞ்சப்பனும் நாகமணியும் குலவிக்கொண்டிருக்கும் காட்சி, தெரிகிறது.)

[**திரை.**]

★

காட்சி 36.

இடம்: சென்னை ரஸ்தா.

காலம்: காலே.

பாத்திரங்கள்: சாவித்திரி, நல்லேயா.

(சென்னை ரஸ்தா ஒன்றில் சாவித்திரி தனிமையாகத் தடுமாறி அலேகிருள். நல்லேயா எதிர்ப் படுகிருன்)

நல்: (சாவித்திரியைப் பார்த்து) ஏம்மா! பார்த்தால் லட்சுமிபோலே இருக்கியே, ஏன் இப்படி தனியா நின்னு தடு மாறுகிருய்? யாரம்மா நீ?

சாவி: ஐயா, என் கணவன் என்னேக் கைவிட்டு விட்டு வந்து விட்டார். அவரைத் தேடி அலேயறேன். நான் யாரு எவ் விடம்ன்னு மட்டும் தயவு செய்து கேட்டு என் மனதை மேலும் புண்ணுக்காதீங்க.

நல்: அது சரி, இம்மாம் பெரிய பட்டணத்திலே எங்கேன்னு போய்த் தேடுவாயம்மா? பட்டணம் பொல்லாதது. உன்னேப்போலே சின்னஞ் சிறிசு இப்படி தனியா அலேஞ்சால் ஆபத்து............ ஹூம்! பகவான் எனக்கு புத்திர பாக்கியம் கொடுக்கலே. நீ என் பொண்ணுட்டமா என் வீட்டிலேயே இரு. நான் எனக்குத் தெரிஞ்சவங்க கிட்டே யெல்லாம் சொல்லி; உன் புருஷனேத் தேடச் சொல்றேன்.

(நல்லேயா சாவித்திரியைத் தன் வீட்டில் வைத்து ஆதரித்து வருகிருன்.)

[**திரை**]

★

காட்சி 37

இடம்: பம்பாய் நகரின் வெளிப் புறம்.

காலம்: இரவு.

பாத்திரங்கள்: அழகன்.

(நகருக்குப் புறம்பே ஜன சஞ்சார மற்ற இடத்தில் ஒரு மரத்தடியில் உட்கார்ந்து அழகன் தனக்குள் மன முடைந்து புலம்புகிருன்)

அட சதிகார உலகமே! அடுத்துக் கெடுக்கும் அயோக்கிய சிகாமணிகள் அநேக மாயிரம் பேரைத் தோற்றுவித்த நீ, அமைதி யாய் உறங்கவா செய்கிருய்? அற்பர்களின் அக்ரமத்துக்கு ஆளாகி, அனுதையாய் விடப்பட்ட இந்த அழகனைப் பார்! உடைந்த என் உள்ளத்தின் ஆழத்தில் இருந்து கொதித்துக் கொந்தளித்துக் குமுறி யெழும் பெருமூச்சுகள் உன் காதில் எட்ட வில்லையா? (தான் படுக்கப் போகும் புல் தரையைப் பார்க்கிருன்) பஞ்சணையில் படுத் துறங்கிய இந்தப் பாவி, படுக்கப் பாயுமின்றி பரதவிப்பதைப் பார்! அன்பு மொழிகளில் அமிழ்ந்து ஆனந்த மடைந்து மகிழ்ந்த, அழகன் அதமர்களால் அலைக்கழிக்கப் பட்டு அலங்கோலமாய் அலைவதைப் பார்! (பசி தோன்றுகிறது) பணி யாட்களுக்குப் பசியாறப் பகிர்ந் தளித்த காலம் போக, இன்று நான் பட்டினியால் பதறுவதைப் பார்! பார்க்க மாட்டாயா? எப்படிப் பார்ப்பாய்? நீதான் வஞ்சகர்களின் வாசஸ்தலம், உலுத்தர்களின் உறைவிடம், சண்டாளரின் சதிக்கூட மாயிற்றே! அதை உணராமல் போனது என் தவறுதான்.

(தகப்பனரின் உபதேசம் நினைவுக்கு வருகிறது)

(மகனே, உலகம் உத்தமரின் உறைவிட மல்ல. பஞ்சமா பாதகரின் பாசறை பணம் தான் அதில் உயிர் நாடி. ஆனல் பரிசுத்தமான பாதையில் பயன் படுத்தப் படா விட்டால், பணம் பாஷாணமாகப் பரிணமித்து விடும். உனக்குப் பல நண்பர்கள் ஏற்படுவர், உன்னைப் பாது காக்க அல்ல. உன் பணத்தைப் பறிக்க. பணம் பாழாகி விட்டால், நீ பட்டினி யால் பாதவித்தால் கூட பார்த்துப் பரிதாபப் பட மாட்டார் கள் உன் பாங்கர்கள்)

ஆம்! உண்மை! அத்தனையும் உண்மை! எழுத்துக் கெழுத்து சத்தியம்! பொன் னெழுத்துக்களில் பொறிக் கப்பட வேண்டிய பொற்பு மிகும் போதனை. பரிசுத்தமா யிருந்த என் வாழ்க்கையைப் பாழடித்தது பணம். மது விருந்தி மதி மயங்கி மான மிழக்க வைத்ததும் பணம் தான். பஞ்சமா பாதகங்களையும் செய்யத் தூண்டியதும் பணம் தானே. நீசர்கள் நேசத்தால் என்னை நிலை குலைய வைத்ததும் பணமே தான். தாஸிக்கு தாஸ னுக்கியதும் பண மல்லவா? உயிரினும் மேலாய் உள்ளன்போடு நேசித்த அண்ணுவின் அன்பை உதறி யெறியச் செய்ததும் பணமே தானே.

அண்ணு!

(தமயனின் அறிவுரைகள் ஞாபகத்துக்கு வருகின்றன)

(உன் நண்பர்களென்று உறவாடும் நயவஞ்சகர்களின் வலையில் விழுந்து நாசமாகி விடாதே. நாட்டில் நடமாடு கின்றனர் ஒரு நாசகால கும்பலினர். அவர்கள் பகல் வேஷத்துக்கு பலியானவர்கள் பலர், தோற்றத்தில் பசுக்கள் சீற்றத்தில் நாகங்கள். அணைத்தவாறே அடியில் குழி தோண்டுவார்கள்.)

அண்ணு உங்கள் அறிவுரையை அசட்டை செய்ததற்கு இதோ அனுபவிக்கிறேன். உங்கள் அன்பை அலட்சியம் செய்தேன். அயோக்கியன் என்று பட்டம் சூட்டினேன். கொலை காரன் சதிகாரன் என்றெல்லாம் குற்றம் சுமத்தினேன். கப டற்ற உங்கள் கன்னத்தி லடித்தேன்.

(மறுபடியும் அண்ணனின் வார்த்தைகள் ஞாபகம் வருகின்றன)

('தம்பி உன் வாயால் அன்பு ததும்ப ஒரு முறை 'அண்ணு' வென்றழைத்து அடித்த உன் கரத்தால் அணைத்து விட்டு பிறகு அந்தக் கையாலேயே கொன்று விடு, நான் ஆனந்தமாய்ச் சாகிறேன்')

அண்ணு! அண்ணு!! இல்லை, இல்லை. தங்களை 'அண்ணு' வென்று அழைக்கவும் இந்த அற்பன் அரு கதை அற்றவன். அன்புத் தெய்வமே! தியாக மூர்த்தி!!

(சாவித்திரியின் ஞாபகம் வருகிறது. அவள் வார்த்தை களையும் நினைவு கூருகிருன்)

('உங்களுக்குப் பணி விடை செய்யும் பாக்கியத்தையாவது எனக்குத் தாருங்கள். ஒரு பணிப் பெண்ணாகவாவது பாவியுங்கள். தயவு செய்யுங்கள். களங்கமற்ற என் கற்புக்கு மட்டும் களங்கம் கற்பிக்காதீர்கள்)

சாவித்திரி என் கண்ணே, உன் மென் மலர்க் கரத்தால் அறு சுவை உண்டி அன்பு ததும்ப அளிப்பாயே! இன்று அரை வயிற்று அன்னத்துக்கும் வகையின்றி உன் கணவன் அலறுவதைக் கண்டால் உன் மனம் என்ன பாடு படும்? களங்கமற்ற உன் கட்டழகு என்னைக் களிப்புக் கடலில் ஆழ்த்துமே! இன்று காரிருளில் கவனிப்பாரற்றுக் கண் கலங்கிக் கதறுகிறேனே! இதைக் கண்டால் நீ சகிப்பாயா? மது வருந்தினேன், மதி மயங்கினேன், மனச் சாட்சியை மழுக்கினேன், மடையர்களின் மந்திரோபதேசத்தால், மாசற்ற உன் மானத்தைப் பழித்தேன். கர்ப்பிணியாய் இருந்த உன்னைக் கலங்க விட்டு ஓடி வந்தேன் உன் கர்ப்பத்தின் கனிக்கும் களங்கம் கற்பித்தேன். அதற்கெல்லாம் இந்தத் தண்டனை எனக்குப் போதாது, போதவே போதாது. என்னைச் சித்ரவதை செய்தாலும் போதாது.

[திரை]

காட்சி 38.

இடம்: சென்னை சென்ட்ரல் ரயில்வே ஸ்டேஷன்.

காலம்: காலை.

பாத்திரங்கள்: செல்லப்பன், சொர்ணம், நல்லையா.

(செல்லப்பன் நல்லையாவைப் பார்த்து ஆச்சரியப் படுகிறான். நல்லையாவுக்கும் சொந்தவூர் அழகாபுரிதான்)

செல்: (நல்லையாவைக் கண்டதும்) அடடே நல்லையாவா? நீ இங்கேயா இருக்கே.

நல்: ஆமாங்க, இப்போ இந்த 'டேஸன்'லே தான் 'பாய்ண்ட்ஸ் மேனா' இருக்கேன். பண்ணையார் குடும்ப மெல்லாம் சௌக்யமா யிருக்கில்ல?

செல்: (இழுத்தாற் போல்) உம்....! என்னமோ இருக்கு.

நல்: பண்ணையார், நல்ல மகராசன், அவர் சிபாரிசு பண்ணி தான் இந்த வேலை வாங்கிக் கொடுத்தார். ஆமா, பண்ணையார் வீட்டிலே கலியாணம் காட்சி...... ?

செல்: அந்தக் கண்ருவியை ஏன் கேக்கிறே போ? மூத்தவர் கலியாணமே வேண்டாம்னுட்டார், இளையவருக்குச் சீரும் சிறப்புமா கலியாணத்தைப் பண்ணி வைச்சார் பண்ணையார். கலியாணம் முடிஞ்ச மூணும் மாசமே சின்னவர் வீட்டிலே சண்டை போட்டு கிட்டு எங்கேயோ கிளம்பிப் போய்ட்டார். அந்த வருத்தம் தாங்க மாட்டாமே அந்த அம்மாவும் போயிட்டுது.

நல்: எங்கே?

செல்: யாருக்குத் தெரியும்? அவங்களைத் தேடித்தான் நாங்கள் தினசரி இப்படி ஒவ்வொரு ஸ்டேஷனுக்கும் வந்து அலைஞ்சுட்டுப் போறோம்.

நல்: (ஆலோசித்து) அப்படியா சமாச்சாரம்? நேத்து நான் 'டூட்டி'யிலே இருந்து திரும்பிப் போறச்சே ஒரு பொண்ணு தன்னந் தனியா நின்னு தடுமாறிக்கிணு இருந்துது.

சொர்: (குறுக்கிட்டு) செவப்பா நல்ல லட்சணமா........

நல்: ஆமா. நிறை பிள்ளைத் தாச்சிகூட.

சொர்: ஆமாமா. அவங்களேதான், இப்போ எங்கே இருக்காங்க?

நல்: என் வீட்டிலேதான்,

செல்: (துள்ளிக்குதித்து) அப்படின்னு இட்லி நழுவி சட்ணியிலே விழுந்த மாதிரி ஆச்சு. சொர்ணம் புறப்படு உடனே!

[காட்சி மாற்றம்]

(மூவரும் நல்லையா வீட்டுக்குப் போகிறார்கள். சாவித்திரியை அடையாளம் கண்டு கொள்கிறார்கள்)

செல்: (நல்லையாவைத் தனிமையில் அழைத்து) சொர்ணத்தை சாவித்திரிக்குத் துணையாய் விட்டுட்டுப் போறேன். ஆனால் சொர்ணம் யார்ன்னு இப்போ அதுக்குத் தெரிய வேண்டாம், என்ன தெரிஞ்சுதா நல்லையா?

நல்: ஆகட்டும். அதுதான் சரி.

செல்: (சொர்ணத்திடம்) சொர்ணம், சாவித்திரியை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கோ. நான் விஷயத்தை மூத்தவ ரண்டை போய்ச் சொல்லி பணத்துக்கு ஏற்பாடு செய்கிறேன்.

(போகிறான்)

[திரை]

காட்சி 39.

இடம்: பம்பாய்.

காலம்: மாலை.

பாத்திரங்கள், அழகன் சுந்தரம் பிள்ளை சுசீலா.

(அழகன் வீதிவழியாக வெறிப் பிடித்தவன் போல் நடந்து செல்கிறான். அந்த வழியாக வந்த கார் ஒன்றினால் மோதப்பட்டு மூர்ச்சிக்கிறான் உடனே அந்தக் காரிலேயே எடுத்துச் செல்லப் படுகிறான், அழகன் கண் விழித்த போது எதிரே ஒரு அழகிய நங்கை உட்கார்ந் திருப்பதைப் பார்க்கிறான்)

அழ: (முனகியவாறு) அம்மா! அப்பா!! வலி தாங்க முடியலியே (சுசீலாவைப் பார்த்து விட்டு ஆச்சரியத்துடன்) ஆ! நான் எங்கிருக்கிறேன்?

சுசீலா: அப்படியே படுத் திருங்கள். உடம்பை அலட்டிக் கொள்ளாதீர்கள். (போர்வையைப் போர்த்தி விட்டு) நான் காரை சற்று அஜாக்கிரதையாக ஓட்டி வந்ததால் உங்கள் மேல் மோதி விட்டது. மன்னிக்க வேண்டும்.

அழ: நீங்கள் யாரம்மா? உங்கள் பேச்சிலும் செய்கையிலும் தென் னிந்தியரின் பெருந் தன்மை பிரதிபலிக்கிறதே!

சுசீ: ஆமாம், நாங்கள் தமிழர்தான். எங்கப்பா இங்கே வந்து பிஸினஸ் பண்றார். ஆமாம் நீங்கள் யார்?

அழ: நானா?......இந்த நிலையிலே நான் ஒரு அனாதைதான். ....வயிறு வளர்க்க வடக்கே வந்தேன், விதி என்னை இப்படி சதி செய்து விட்டது.

சுசீ: கவலைப் படாதீர்கள். நீங்கள் பூரண குண மாகும் வரை இங்கேயே இருக்கலாம்.

அழ: உங்க அப்பா அம்மா எங்கே அம்மா?

சாவி: அம்மா காலமாய்ட்டாங்க, அப்பா ஆபீஸ்லே இருந்து இன்னும் வரலை. அப்பா கொஞ்சம் கண்டிப்பானவர் என்ருல் கூட தங்மான மனசு,

(சுந்தரம்பிள்ளை கார் சத்தம் கேட்கிறது)

சுசீ- அதோ அப்பா கூட வந்துட்டார்.

(சுந்தரம் பிள்ளை பிரவேசிக்கிருர்)

சுசீ: ஏம்மா! கொஞ்சம் Careful ஆக Drive பண்ணிக் கொண்டு வரக் கூடாதோ? வழியிலே வரதப் பிள்ளை விஷயத்தைச் சொன்ருர். அந்த ஆளுக்கு ஏதோ ஒண்ணு ஆச்சின்ரு என்ன ஆகிறது?

சுசீ: அடி ஒண்ணும் அப்படி அதிகம் இல்லை யப்பா, சீக்கி ரம் குண மாயிடும்.

(சுந்தரம் பிள்ளை அழகன் படுக்கை யருகில் வந்து அவனைக் குனிந்து பார்த்து விட்டு தன் அறைக்கு செல்கிருர் சுசீலாவும் அவரைப் பின் தொடர்ந்து செல்கிருள்.)

சுந்: ஏதோ நம்ப நல்ல காலம், போலீஸ், கோர்ட், அது, இதுங்கிற தொந்தரவு இல்லாமே போச்சு.....

(கணக்கப் பிள்ளை பிரவேசம்)

கணக்கப்பிள்ளை; (குறுக்கிட்டு) அப்படின்ரு கூட சமா ளிச்சுடலாமுங்க. கோபால் ராமனுதன் கேஸ் என்ன ஆயி டுச்சு? புகைஞ்சு போயிடலிங்களா?

சுந்: சும்மாயிருடா, மகா மேதாவி இவரு.

சுசீ; அப்பா அதிலே ஒரு விசேஷம் இல்ல...

சுந்: என்ன அம்மா அது?

சுசீ. அவரும் தெற்கத்திஆள்தானும், நம்ம ஜாதிக் காரரும் கூட, நல்லா படிச்சவராம். வேலை தேடி பம்பாய் வந்தாராம். ஆனுல் வேலை ஒண்ணும் கிடைக்கலையாம்

கணக்கப்பிள்ளை: (குறுக்கிட்டு) பார்க்கிறதுக்கும் நல்ல லட்சண மாகத்தான் இருக்கார்.

சுந்; அவன் யாரா யிருந்தால் நமக் கென்னம்மா? உன் காரிலே அடிபட்ட தோஷத்துக்கு அவனை குணமாக்கி அனுப்ப

வேண்டியது நம்ம கடமை. அப்புறம் அவன் யாரோ? நாம் யாரோ?

சுசி: அப்படி யிருந்தாலும் அவர் நம்மளவர் இல்லையா அப்பா? சில பேர் தங்க சொந்த ஜாதிக் காரர்களுக்கு எப்படி எப் படி யெல்லாமோ ஒத்தாசை பண்ருங்களே யப்பா.

சுந்: ஹூம்! நம்மளவர். உங்க மாமனு மச்சானு? நமக்கும் அந்த இன உணர்ச்சிக்கும் சரிப் பட்டு வராதம்மா.

[***திரை***]

காட்சி 40.

இடம்: பட்டணத்தில் ஒரு ஆஸ்பத்திரி.

காலம்: காலை.

பாத்திரங்கள்: டாக்டர்கள், நர்ஸுகள், நோயாளிகள், சாவித்திரி முதலானோர்.

(ஆஸ்பத்திரிக்கு நோயாளிகள் வந்த வண்ணமிருக் கின்றனர் அவர்களை கவனிக்க ஒரு ஆண் டாக்டரும் பெண் டாக்டரும் எதிரெதிரே அமர்ந்திருக் கின்றனர். இருவரும் ஆனந்தமாய் அளவளாவிக் கொண் டிருக்கின்றனர். தம்பதி கள் ஒரு குழந்தையுடன் வருகின்றனர். அந்தப் பெண் குழந்தையை எடுத்துக் கொண்டு பெண்களுக்கான பக்கத் திற்கு போகிருர்கள்.)

பெண்: (லேடி டாக்டரிடம்) குழந்தைக்கு மூணு நாளா ஒரே ஜுரம். கண்ணே முழிக்கலிங்க.

(லேடி டாக்டர் அந்தப் பெண்ணை முறைத்து விட்டு சீட்டில் வேகமாக எழுதுகிருள்.)

பெண்: (துக்கம் மேலிட) இதுக்கு முந்தின குழந்தைக்கு இப்படித்தான் இருந்து, அது இறந்து போச்சுதுங்க. எனக்கு ரொம்ப பயமா யிருக்குதுங்க. கொஞ்சம் பிள்ளையைச் சோதிச்சுப் பார்த்து மருந்து கொடுங்க. நல்லா இருப்பீங்க.

ஆண் டாக்டர்: அதெல்லாம் நீ ஒன்றும் எங்களுக்குச் சொல்ல வேண்டிய தில்லை.

(சீட்டைப் பெற்றுக் கொண்டு போய் மருந்து வாங்குகிருள்)

நர்ஸ்: இந்த மாத்திரையைத் தூள் பண்ணி தேனிலே குழைச்சி மூணு வேளை கொடுங்க. சரியாய்ப் போயிடும்.

(பெண் போகிருள்)

பெண்: (தன் கணவனிடம்) எனக்கென்னமோ இந்த மருந்திலே நம்பிக்கையில்லே. பிள்ளையை டாக்டர் அம்மா தொட்டு கூட பார்க்கலியே.

ஆண்; (சற்றுயோசித்து) அப்படின்ளு குழந்தையை இப்படிக் கொடு. நான் ஆண்கள் பக்கம் போய் அந்த டாக்டரிடம் காட்டி விட்டு வருகிறேன்.

(டாக்டர் கொடுத்த சீட்டைப் பெற்றுக் கொண்டு போய் மருந்து வாங்குகிருன்)

கம்பவுண்டர்: (புட்டியில் மருந்தை ஊற்றிக் கொடுத்து) இதை நாலுவேளை சாப்பாட்டுக்கு அப்புறம் உள்ளுக்கு சாப்பிடுங்க- தீர்ந்து போயிடும் (ஒரு பொட்டலத்தைக் கொடுத்து) இந்தாங்க இந்தக் களிம்பை வீக்கத்திலே போட்டு வென்னீர் வைத்து ஒத்தடம் கொடுத்திங்கன்ளு போதும்; போயிடும்.

ஆண்: (மருந்துகளை வாங்கிக் கொண்டு தனக்குள்) என்ன? நான் சாப்பிடணுமா! வீக்கமா? நல்லா இருக்கு இவங்க மருந்து கொடுக்கிற லட்சணம்.

(இரண்டு சீட்டுகளையும் பார்வை யிடுகிருன். வெவ்வேறு வியாதியும் மருந்தும் குறிப்பிடப பட்டிருக் கின்றன)

ஆண்: (மனைவியிடம் வெறுப்பாக) ஹூம்! கடமை உணர்ச்சி யற்ற கபோதிகள். பச்சை மதலையின் உயிருடன் அல்லவா விளையாடுகிருர்கள்! சர்க்காரில் இவர்களுக்கு எதற்குத்தான் சம்பளம் தருகிருர்களோ? டாக்டர் வேலைக்கு படித்து பட்டம் வாங்கினல் மட்டும் போதுமா? நல்ல பண்பு வேண்டாமோ? சரி சரி. நமக்கு இந்த இரண்டு மருந்துமே வேண்டாம். (மருந்துகளைக் கீழே கொட்டிவிட்டு) வா போகலாம். அப்புறம் ஆண்டவிட்ட வழி.

(போகிருர்கள்.)

(நல்லையாவும் சொர்ணமும் சாவித்திரியை அழைத்துக் கொண்டு ஆஸ்பத்திரிக்கு வருகின்றனர். நர்ஸ் சாவித்திரியைப் பிரசவ வார்டுக்கு அழைத்துப் போகிருள்.)

[திரை]

காட்சி 41.

இடம்: பண்ணையார் வீடு.

காலம்: காலை.

பாத்திரங்கள்: ஆபத்சகாயம் பிள்ளை, அன்பன், சாமி, செல்லப்பன் முதலானோர்.

(பண்ணையார் அழகன் பிரிவாற்ருமையால் மன முடைந்து படுத்த படுக்கையா யிருக்கிருர். அன்பன் பிரவே சிக்கிருன்)

ஆபத்: அன்பா, இங்கே வாப்பா. (அன்பன் பண்ணையார் அருகில் வருகிருன்) இனிமேல் நான் ரொம்ப நாளைக்கு உயி ரோடே இருக்க மாட்டேன். ஆனல் சாகிறதற்கு முன்னல் அழ கனை ஒரு தடவை யாவது இந்தப் பாழும் கண்ணுலே பார்த்துட் டால், அப்புறம் நிம்மதியாயப் போயிடுவேன்.

(சாமி பிரவேசம்)

சாமி: (உள்ளே பிரவேசித்தவாறே) உம்.... போங்க! போங்க!!

அன்: என்னடா அது?

சாமி: யாரோ பரதேசிப் பசங்க வெளியே நின்று கூப்பாடு போடருன்க .. (உத்ஸாகமாய்) எசமான்....சின்ன எசமான் பம்பாயிலே இருக் காருங்களாம்,

அன்: உனக் கெப்படிடா தெரியும்?

சாமி: வீரப்பன் வீட்டுக்காரிக்குக் கடுதாசி எழுதி யிருக்கான்

அன்: விலாசம் விசாரிச்சியோ?

சாமி: தனக்கு தெரியாதுன்னுட்டுது.

அன்: அப்படின்ன நான், உடனே புறப்பட்டுப் போய் அழகனை எப்படியாவது தேடிக் கண்டு பிடிச்சுக் கொண்டு வந்து விடுகிறேன்.

ஆபத்: என்ன நீயும் போகிருயா? எனக்கு இந்தத் தள்ளாத வயசிலே திடீர்ன்னு ஏதாவது ஒண்ணு ஆச்சின்ன கொள்ளி வைக் கிறதுக்கு ஒருத்தன் கூட இல்லையே,

சாமி: நீங்க ஒண்ணுக்கும் பயப்படாதிங்க எசமான். அந்த மாதிரி ஒண்ணும் ஆகாது. நான் இருக்கேன் பார்த்துக் கொள்றேன்.

ஆபத்: அது சரி. சாவித்திரி?

(அன்பன் ஆலோசிக்கிறன்)

(செல்லப்பன் பிரவேசம்)

அன்: (ஆவலோடு) செல்லப்பா, சாவித்திரியைப் பார்த்தாயா?

செல்: ஓ! நம்ம நல்லையா வீட்டிலேதான் இருக்குதுங்க. ஒத்தாசைக்கு சொர்ணத்தையும் விட்டுட்டு வந்திருக்கேன்.

அன்: (நிம்மதியாக) ரொம்ப நல்லதாய்ப் போச்சு. அப்போ நான் இன்றைக்கே பம்பாய் புறப்படுகிறேன். (சாமியிடம்) டேய் சாமி, சாமான்களை யெல்லாம் உடனே 'பாக்' பண்ணு.

சாமி: ஆகட்டுமுங்க

(போகிறன்)

ஆபத்: உங்க தாய்மாமன் கூட பம்பாயிலேதான் இருக்கார்.

அன்: யாரு சுந்தரம் பிள்ளை மாமாவா?

ஆபத்: ஆமா அவர் போயும் 'அன்ன' 'இன்ன'ன்னு இருபது வருஷமாச்சு. எங்க இரண்டு பேருக்கும் கொஞ்சம் மனஸ்தாபம், அவர் போனதிலே இருந்து ஒரு லட்டர் கூடக் கிடையாது.

அன்: அப்படின்ன, முதல்லே மாமா வீட்டைக் கண்டு பிடிச்சுட்டால் அப்புறம் அழகனைக் கண்டு பிடிக்கிறது ஒண்ணும் கஷ்டமில்லே.

(சாமி பிரயாணத்துக்கு வேண்டிய வற்றைத் தயார் செய்து கொண்டு வைக்கிறன்)

சாமி: (அன்பனிடம்) ஏங்க எசமான், பொம்பாயிலே எல்லாரும் இந்த 'லடபுட' லம்பாடி பாஷையிலேதான் பேசுவாங்களா?

அன்: லம்பாடி பாஷையா?

சாமி: அது தாங்க இந்தியோ? மந்தியோ?

அன்: இல்லே. தமிழர்களும் நிறைய இருக்கிறர்கள். (செல்லப்பனிடம்) செல்லப்பா, அம்பாவை ஜாக்கிரதையாய் கவனித்துக் கொள். பண்ணையத்தையும் பார்த்துக் கொள்.

செல்: சரிங்க.

அன்: அப்பா' நான் போகிறேன்.

(போகிருன்)

சாமி: 'போய் வர்றேன்'ன்னு சொல்லப் படாதுங்களா.

[திரை]

காட்சி 42.

இடம்: பம்பாயில் சுந்தரம் பிள்ளை பங்களாவின் [பின் புற முள்ள பூங்கா.

காலம்: மாலை.

பாத்திரங்கள்: அழகன், சுசீலா, சுந்தரம் பிள்ளை, அன்பன் முதலானோர்.

(அழகன், பூங்காவின் மத்தியி லுள்ள நீரூற்றுக் கருகில் சிந்தா கிரந்தனுய் அமர்ந் திருக்கிருன்)

அழ: (தனக்குள்) சுசீலா! தங்கமான பெண்! பாலை வனத்தில் பசுஞ் சோலை! அவள் உதவியினுல் உடனே ஊர் போய்ச் சேர்ந்து விட்டால்?

(சுசீலா வருகிருள்)

சுசி: என்ன? எந்தக் கோட்டையைப் பிடிக்க உத்தேசமோ?

அழ: கோட்டை ஒன்றையும் பிடிக்க வில்லை கோட்டை கட்டுகிறேன் சுசிலா.

சுசி: மனக் கோட்டைதானே? அதில் எனக்கும் இடம் உண்டல்லவா?

அழ: உனக்கு இல்லாமலா? நீதானே அதில் கதா நாயகி. சுசீலா, என்னை இத்தனை அக்கரையுடன் ஆதரித்த உனக்கு நான் என்ன கைம் மாறு செய்யப் போகிறேன்?

சுசி: உங்கள் அன்புதான் எனக்கு வேண்டும்.

அழ: அன்பு அளவுக்கு அதிகமாகத்தான் இருக்கிறது. இந்த அனுதையின் அன்பினுல் உனக்கு ஆகக் கூடியது? வேண்டுமானுல் தங்கை யில்லாத குறைக்கு உன்னை என் தங்கை யாகவே பாவித்துக் கொள்கிறேன்.

சுசீ: நீங்கள் ஒன்றும் என்னைத் தங்கையாகப் பாவிக்க வேண்டிய தில்லை. அண்ணன் இல்லையென்று நான் ஒன்றும் குறைப் பட்டுக் கொள்ள வில்லையே.

அழ: சரி. தங்கையென் றழைக்கத் தகுதி யற்றவன் என்ருல் ஆபத்தில் காப்பாற்றிய தெய்வமென்று வேண்டுமானுல் வழி படுகிறேன்.

சுசீ: பரிகாசமா பண்ணுகிறீர்கள்? தங்கையென் றழைக்க உங்களுக்குத் தகுதியில்லை. தெய்வமென்று அழைக்கப்பட எனக்கு அருகதை இல்லை.

அழ: வேறெப்படித்தான் அழைப்பது? (குறும்பாக) பாட்டியென்ரு?

சுசீ: குறும்பைப் பார், குறும்பை! சற்று நிதானமாய் சிந்தித்துப் பாருங்கள்.

அழ: எனக் கொன்றும் தோன்ற வில்லையே.

சுசீ: நீங்கள் ஆண் பிள்ளைதானே?

அழ: ஆமாம்.

சுசீ: நான்?

அழ: பெண் பிள்ளை.

சுசீ: அப்படி யானுல்?

அழ: புரிய வில்லையே.

சுசீ: சரி நானே சொல்கிறேன்.

அழ: எங்கே?

சுசீ: கா....த....லி,....

அழ: (திடுக்கிட்டு) ஆ! என்னம்மா இது?

சுசீ: காதல்! ஏன் உங்களுக்கு என்னைப் பிடிக்க வில்லையா?

அழ: தெளி தேன் கசக்குமா என்ன?

சுசீ: பின் ஏன் தயக்கம்?

அழ: முடவனுக்குக் கொம்புத் தேன் கிட்டுமா? உன்னைக் காதலியாக அடையும் அதிர்ஷ்டம் அழகனுக்கு இல்லை சுசீலா.

சுசீ: உங்கள் அபூர்வ அழகும் அன்புமே போதும்.

அழ: ஆனால் அப்பா?

சுசீ: அவர் இதுவரை என் இஷ்டத்துக்கு இடையூறாக நின்றது கிடையாது.

அழ: ஆனால்....

சுசீ: மறுபடியும் என்ன ஆனால்?

அழ: நான் ஏற்கனவே மண மானவன்.

சுசீ: (திடுக்கிட்டு) என்ன? அதை ஏன் நீங்கள் ஆரம்பத்திலேயே என்னிடம் சொல்லவில்லை? உங்கள் மீது எனக்கு ஏற்பட்ட காதலை முளையிலேயே கிள்ளி யெறிந் திருப்பேனே.

அழ: இந்த அனாதையிடம் நீ இதுவரை காட்டி வந்த அன்பைக் காதலென்று கருதவில்லை. இரக்கமென்று தான் எண்ணி வந்தேன். ஆபத்தில் உதவி செய்த உன்னை என் ஆயுள் பரியந்தம் மறக்க மாட்டேன். பூரண குணம் அடைந்து விட்டேன். இனி போய் வருகிறேன்.

(போகத் திரும்புகிறான்)

சுசீ: (மறித்து) போவதா? என்னை விட்டு விட்டா? நிர்மலமான என் நெஞ்சில் நீங்கள் நிரந்தரமாய் நிலைத்து விட்டீர்கள். நீங்கள் நீங்கினால் நான் ஏங்கி வீங்கிச் சாக வேண்டியதுதான்.

(தேம்புகிறாள்)

அழ: (வருத்தமாக தனக்குள்) இதென்ன தர்ம சங்கடம்?

சுசீ: (தேம்பியவாறே) இதோ பாருங்கள். உணர்ச்சி வசமான என் உள்ளத்தில் உங்கள் உருவம்தான் உண்டு. இனி உயிருள்ளளவும் வேறு யாருக்கும் அதில் உரிமை இல்லை. என் உயிர் நிலைப்பதும் நீங்குவதும் உங்கள் கையில்தான் இருக்கிறது.

(அழகன் கையைப் பற்றுகிறாள்)

அழ: உம்....(யோசிக்கிறான்)

சுசீ: என்ன யோசிக்கிறீர்கள்? அமிர்தத்தை அங்கீகரிக்க அத்தனை ஆலோசனையா? உங்கள் வாழ்க்கையில், உங்கள் மனைவியுடன் நானும் இடம் பெறக் கூடாதா? என்னை ஏற்றுக் கொள்ளுங்கள். இல்லா விட்டால் உங்கள் கையாலேயே என்னைக் கொன்று விடுங்கள்.

(அழகன் காலில் விழுந்து விசித்து விசித்து அழுகிறாள்)

(அழகனுக்கு சாவித்திரியின் வார்த்தைகள் நினைவுக்கு வருகின்றன)

'உங்கள் இன்ப வெள்ளத்தில் எதிர் நீஞ்ச என் ஒருத்தியால் இயலவில்லை என்று நீங்கள் எண்ணினால், இன்னொருத்தியைத் தங்கள் இளையாளாக இதய பூர்வமாய் ஏற்றுக் கொள்கிறேன்.'

அழ: கண்ணே சுசீலா, எழுந்திரு. (அவளைத் தூக்கி நிறுத்தி) என் மனைவி சாவித்திரி நான் உன்னையும் ஏற்றுக் கொள்வதற்கு எவ்விதத் தடையும் சொல்ல மாட்டாள். இனி நீங்கள் இருவரும் என் இரு கண்கள். அவள் அனுமதியைப் பெற்று உன்னை அடைகிறேன்.

சுசீ: (நிம்மதியடைந்தவளாய்) அப்பாடா! இப்போதான் எனக்குப் போன உயிர் திரும்ப வந்தது.

(இருவரும் கனவுலகில் சஞ்சரிக்கின்றனர்)

[*திரை*]

காட்சி 43.

இடம்: நல்லையா வீடு.

காலம்: இரவு.

பாத்திரங்கள்: சாவித்திரி, சொர்ணம், நல்லையா.

(குழந்தை தொட்டிலில் அழுது கொண்டிருக்கிறது. சாவித்திரி அவனைக் கையிலெடுத்து அழுகையை அமர்த்துகிருள்)

சாவி: (குழந்தையிடம்) அழாதேப்பா! அழாதே! எதுக்கடா கண்ணு அழுகிருய்? 'சஞ்சலம் நிறைஞ்ச இந்த உலகத்திலே துன்பம் அனுபவிக்க ஒரு ஜீவனாய் ஏன் பிறந்தோம்'ன்னு அழுகிருயா? அம்மா கவலையைத் தீர்க்க முடியல்லியேன்னு அழுகிருயா? உன் பிறப்பைப் பற்றி பழிப்பாங்களேன்னு பயந்து அழுகிருயா? அல்லது அப்பா வந்து அரவணைக்கலியேன்னு அழுகிருயா? (நிலாவைச் சுட்டிக் காட்டி) அதோ பார்! அம்புலி! சொல்லு. அம்புலி, அம்புலி, வா. வா! அப்பாவை அழைச்சிட்டு வா வா.......அப்பா சீக்கிரம் வருவார், சின்னப் பையனைச் சிரிக்க வைப்பார். பழம்

வாங்கிட்டு வருவார். பட்டு சொக்காய் வாங்கிட்டு வருவார், லட்டு மிட்டாய் கொண்டு வருவார். நீ அழாதேப்பா அழாதே.

(அழகன் வார்த்தைகள் ஞாபகம் வருகின்றன)

'அந்தச் சிசு பூமியில் பிறந்து என் வாழ்க்கையில் ஏற்பட்ட பயங்கர அவமானத்தின் அழியாச் சின்னமாக விளங்குவதை விட, அது கருவிலேயே மடிவது மேல்'

ஆ! ஐயையோ! என்ன கொடுமையான வார்த்தைகள்! கண்ணே நீ மகா அபாக்கியசாலியடா....

(தேம்பித் தேம்பி யழுகிருள்)

சொர்: 'குழந்தைக் கென்னம்மா தெரியும்? அவன்தான் அவங்க அப்பாவையே உறிச்சு வெச்சுப் பொறந்திருக்கானே. அவர் வந்து அவனே ஒரு தடவை பார்த்தாருன்னு 'நான் பெத்த மகனே வாடா' அப்படின்னு அள்ளி அணேச்சுக்கிட மாட்டாரா?

சாவி: சொர்ணம், அவர் போயும் அதோ இதோன்னு ஒரு வருஷத்திற்கு மேலே ஆயிடலேயா. இது வரைக்கும் பெண் சாதி பிள்ளேயைத் தேடி வராதவர் இனிமேல் தானு ஓடி வந்துடப் போருர்?

சொர்: நீங்க ஒண்ணுக்கும் கவலேப் படாதீங்கம்மா. இந்த கட்டாலே போற பசங்க, அவர் பணத்தைச் சன்னம் சன்னமாய்க் கரைச்சுப் புடுவானுக. பணம் தீர்ந்துதோ பயலுக பறந்துடுவானுக. அப்புறம் என்ன? யார் பொல்லாதவங்க, யார் நல்லவங்கன்னு தெரிஞ்சிக்குவார். பெண்டாட்டி புள்ளே நெனப்பு வரும். தானு ஓடியாந்துடுவார். நீங்க வேணும்னு பாருங்க. இந்த சொர்ணம் சொன்னல் சொன்னதுதான்.

சாவி: நீ என்ன சொன்னுலும் என் மனசு ஆறுதடையலியே சொர்ணம்.

(நல்லேயா பிரவேசம்.)

நல்: ஏம்மா இப்படி நீ கவலேப் பட்டுக்கிணே இருந்தால், உன் புருஷன் வந்துடுவாரா? நானும் அவர் போட்டோவைக் கையிலே வச்சு கிட்டு ரயிலிலே வர்றவங்க போறவங்க ஒருத்தர் பாக்கி விடாமே அத்தனே பேரையும் துருவித் துருவிப் பார்த்துகிட்டுதான் வர்றேன். எதுக்கும் காலமும் நேரமும் வர வேண்டாமோ?

சாவி: (கண்களேத் துடைத்துக் கொண்டு) என்னேயும் ஒரு நாள் உங்களோடே ஸ்டேஷனுக்கு அழைச்சுட்டுப் போறீங்களா ?

நல்: (சற்று ஆலோசித்து) சரி. உன் ஆசையைத்தான் நான் கெடுப்பானேன்? இப்போ சந்தோஷம்தானே? சிரி பார்க்கலாம். உன்னோ சிரிச்ச முகமும் சீதேவியுமாய் ஒரு தடவை கூட நான் பார்க்கலே. எங்கே சிரி உம்.... சிரி.

(சாவித்திரி முறுவலிக்கிருள்)

[திரை]

காட்சி 44.

இடம்: பம்பாயில் நஞ்சப்பன் பங்களா.
காலம்: காலே.
பாத்திரங்கள்: நஞ்சப்பன், நாக மணி.

(நஞ்சப்பன், அழகனின் பெட்டியைத் துருவி ஆராய்கிருன். அழகன் சாவித்திரி கலியாண போட்டோ அவன் கண்ணில் படுகிறது)

நஞ்: (சாவித்திரியின் படத்தைப் பார்த்து விட்டு தனக்குள்) இதுதான் சாவித்திரியா? ஆகாகா! பருவம் தந்த பகட்டான மேனி. பருக முடியாதவனுக்குக் கிடைத்த பக்குவமான பழ ரசம்.... வாழ்வில் ஒரு முறையாவது ருசித்தே ஆக வேண்டும்.

(நாக மணி பிரவேசம். நஞ்சப்பன் படத்தை சட்டைப் பைக்குள் மறைத்துக் கொள்கிருன்)

நஞ்: நாகு, நான் அவசரமாய் Madras வரைக்கும் போய் வர வேண்டி யிருக்கிறது?

நாக: ஏது திடீர்ப் பயணம்? நான் தெரிஞ்சு கொள்ளலாமோ?

நஞ்: என்ன நாகு இப்படிக் கேட்கிருய்? தாய் அறியாத சூலா? பிஸினஸ் விஷயமாய் ரொம்ப அர்ஜெண்டாய்ப் போகணும். புது சரக்கு ஒண்ணு பிடிக்க வேண்டி யிருக்கிறது. ஒன் வீக்'லே return பண்ணிட்டறேன், நான் வரட்டுமா?

நாக: வேண்டாம்னு நின்னுடப் போறீங்களா?

(நஞ்சப்பன் அசட்டுச் சிரிப்பு சிரித்துக் கொண்டே போகிருன்)

நாக: (தனக்குள்) புதுச் சரக்காம் புதுச் சரக்கு! எந்தப் புதுச் சரக்கோ?

[திரை]

காட்சி 45.

இடம்: பம்பாயில் சுந்தரம் பிள்ளை பங்களா.

காலம்: மாலை.

பாத்திரங்கள்: சுசீலா, அழகன், சுந்தரம் பிள்ளை அன்பன்,

(பூங்காவில் சுசீலாவும் அழகனும் அளவளாவுவதை தற்செயலாய் அங்கு வந்த சுந்தரம பிள்ளை கண்டு ரௌத்காரமாகிருர்)

சுந்: (கோபாவேசமாய்) சீ நன்றிகெட்ட நாயே! உன்னை இத்தனை நாள் அன்புடன் ஆதரித்ததற்கு, கடைசியில் என் மானத்தையே வாங்கத் துணிந்து விட்டாயேடா நாயைக் குளிப்பாட்டி நடுவீட்டில் வைத்தாலும் நாய் புத்தி எங்கேயடா போய் விடும்? களங்கமில்லாத கன்னியரோடு காதல் நாடகமாடி அகப்பட்டதைச் சுருட்டி கிட்டு ஓடுகிற அயோக்கியப் பசங்க உன்னை மாதிரி எத்தனை பேர் அலையறீங்க? இன்னும் ஒரு நிமிஷம் இங்கே நின்னே! உன்னைத் தொ.... தொலச்சிடுவேன். ஏய்! இந்த அற்ப நாயை அடிச்சு வெரட்டுங்கடா.

(வேலையாட்கள் அழகனை அடித்து வெளியேற்றுகின்றனர்)

சுசீ: அப்பா, அப்பா அவர் மேல் ஒன்றும் தப்பில்லையப்பா. தவறு என்னுடையதுதான்.

சுந்: உனக்கு அந்தப் பஞ்சைப் பரதேசிப் பயலோடு என்னம்மா விளையாட்டு?

சுசீ: அவர் ரொம்ப நல்லவரப்பா.

சுந்: அவரு! அது யாரு அவரு? அந்தப் 'பயல்'ன்னு சொல்லு. இந்த மாதிரி வயசுப் பொண்டுகளை வஞ்சித்து வந்த

வரைக்கும் வாயிலே போட்டுட்டு ஓடிப் பேசுகிற எத்துவாளிப் பசங்க ஏராளமாய் இருக்காங்கம்மா. உனக்கு என்ன தெரியும்? நீ சின்னஞ் சிறிசு.

சுசீ: அவர் ஒண்ணும் அப்படிப் பட்டவ ரில்லே யப்பா.

சுந்: எல்லாம் உன் நன்மைக்குத் தானே யம்மா சொல்றேன்? உனக்கும் பருவம் வந்தாச்சு. காலா காலத்திலே ஒரு கலியாணத்தைப் பண்ணி வச்சுடறதுதான் நல்லது. அதுக்காகத் தான் அந்தக் கோடீஸ்வரன் கோபால கிருஷ்ண பிள்ளை மகன் கோதண்ட பாணியை ஏற்பாடு பண்ணிகிட்டு இருக்கேன்.

சுசீ: ஏனப்பா பணம் பணம்ன்னு அடிச்சுக்கிறீங்க? நமக்கு இருக்கிற ஆஸ்தியே அஞ்சு தலை முறைக்கு ஆகி வருமே யப்பா. குணம் பெரிசா? அல்லது பணம்தான் பெரிசாப்பா?

சுந்: அதுக்கு? 'அந்த அற்பப் பயலை எனக்குக் கட்டி வை'ங்கிறியா?

சுசீ: அப்பா, என் இஷ்டத்துக்கு எதிராய் நீங்க இதுவரை நடந்த தில்லே. ஆனல் வாழ்க்கையின் முக்கிய கட்டத்தில்தான் என் மனசுக்கு மாரு நடக்கப் பார்க்கிறீங்க.

சுந்: உன்னை ஆயுள் பூராவும் கண் கலங்காமே வச்சுக்கிற துக்கு அவன் கிட்டே என்னம்மா இருக்கு?

சுசீ: எவ்வளவோ ஏழைகளாய் இருந்தால்கூட ஆனந்த மாய் இருக்கிற தம்பதிகளை என் கண்ணுலேயே பார்த்திருக்கிறே னப்பா. பிடிக்காத புருஷனேடே புழுங்கி வாழ்கிறதை விட மன சுக்குப் பிடிச்ச மணுளனேடே மன நிம்மதியாய் வாழ்கிறது நல்ல தில்லையா அப்பா?

சுந்: அப்படியானுல் உன் முடிவுதான் என்ன அம்மா?

சுசீ: அப்பா, நான் இந்த கதைகள், சினிமாக்களிலே வருகிறாப் போலே வெளிப் படையாகவே சொல்லி விடுகிறேன். நான் கலியாணம் செஞ்சு கொண்டால் அழகரைத்தான் பண்ணுவேன். இல்லை யென்ருல் கன்னியாகவே காலத்தைக் கழிப்பேன்.

(கதவு தட்டப் படும் சப்தம் கேட்கிறது)

சுந்: யாரது? உள்ளே வரலாமே!

(அன்பன் பிரவேசம்)

அன்: வணக்கம்.

சுந்: நமஸ்காரம். யாரப்பா நீ? உன்னை என்னமோ.... எங்கேயோ....எப்பவோ....பார்த்ததுபோல இருக்கு. ஆனால் ஞாபகந்தான் வர மாட்டேங்குது.

அன்: பார்த்திருப்பீங்க. நான் அழகாபுரி பண்ணையார் மகன்.

சுந்: (சந்தோஷமாக) அடடே! மச்சான் ஆபத்சகாயம் பிள்ளை மகனா? வாப்பா வா. உட்கார். உன்னைப் பார்த்தும் கிட்டத்தட்ட வருஷம் இருபதாகுதுல்ல. நான் பம்பாய்க்கு வரச்சே, உனக்கு ஏறினால் பதினஞ்சு பதினறு வயசு இருக்கும். இப்போ பெரிய மனுஷனல்ல ஆயிட்டே. ஆள் அடையாளமே தெரியல்லையே. உன் பேரு கூட அமலனே ஆனந்தனே?

(சுசீலா காபி பலகாரம் கொண்டு வந்து வைக்கிருள்)

அன்: என் பெயர் அன்பானந்தன் மாமா.

சுந்: ஆமாமா, மச்சானுக்கு இன்னொரு பயகூட இருந்தானே. படுசுட்டி. பாவம். பொறந்த வுடனேயே பெத்த தாயை முழுங்கிட்டான். அக்கா செத்ததிலே யிருந்து நீதானே அவனை வளர்த்த தெல்லாம். அதுசரி, அப்பா சௌக்யமா யிருக்காரா?

அன்: தம்பி பாகம் பிரிச்சுட்டுப் போனதிலே இருந்து அப்பா படுத்த படுக்கையா யிட்டார் மாமா.

சுந்: அட பாவமே. உன் தம்பி எங்கே போய்ட்டான்?

அன்: பம்பாய்க்கு வந்து விட்டதாகத்தான் கேள்வி. அவனைப் பார்த்து கூட்டிக்கிட்டு போகலாம்னுதான் வந்திருக்கிறேன்.

சுந்: அப்படியா சமாச்சாரம்? அவன் இங்கே வந்து எவ்வளவு நாளாச்சி?

அன்: ஏறக் குறைய ஒண்ணரை வருஷ மிருக்கும்.

சுந்: (அலட்சியமாக) ஹூம்! எங்கே போயிடுவான்? இங்கே எங்கேயாவது தான் சுத்திகிட்டு அலைவான். கொண்டு வந்த பணத்தை அப்படியும் இப்படியுமா ஆட்டம் போட்டுத் தீர்த்துட்டான்னா, தானா வந்து சேர்ந்துடப் போறான்....அது சரி அவன் பேரு?

அன்: அழகன்............

சுந்: சுசீ: (ஏககாலத்தில் திடுக்கிட்டு) அழகனா?

அன்: ஆமாம்.

சுசீ: அப்பா ஒருவேளை அவரா யிருப்பாரோ?

அன்: (ஆவலோடு) யாரைச் சொல்றீங்க?

சுந்: கொஞ்ச நாளைக்கு முன்னுலே ஒரு புள்ளையாண்டான் நம்ப காரிலே அடி பட்டு விட்டான். அவனை நம்ம வீட்டிலேதான் இத்தனை நாள் வச்சிருந்து குணப் படுத்தி அனுப்பிச்சோம். இப்ப தான் போறுன். தான் ஒரு 'அனுதை'ன்னும் தன் பேரு 'அழகன்' னும் சொன்னுன். ஒரு வேளை அவன் நம்ம அழகனு யிருக்குமோ?

அன்: அப்படியா? (சட்டைப் பைக்குள் கையை விட்டு அழகன் போட்டோவை எடுத்துக் காட்டி) இதோ அவன் போட்டோ.

சுசீ: (மகிழ்ச்சியுடன்) ஆம். அவரேதான்.

சுந்: அவன்தான் அன்பா.

அன்: எந்தப் பக்கமாகப் போனுன்?

சுந்: டேய் சோணுசலம்! (சோணுசலம் வருகிறுன்) அழகன் எந்தப் பக்கமாடா போனுன்?

சோணு: கேட் 'gate' வரைக்கும் கொண்டு போய் விட்டுட்டு வந்தேனுங்க. அதுக் கப்புறம் எப்படி போனுன்னு தெரியலீங்க. நீங்க ஒண்ணும் பயப்படாதீங்க. இனிமே இந்தப் பக்கம் தலை வச்சு கூட படுக்க மாட்டானுங்க.

அன்: (எழுந்து) நான் வருகிறேன் மாமா.

சுந்: எங்கே யப்பா போகிறுய்?

அன்: அழகனைத் தேடி.

சுசீ: காபி.....

அன்: வேண்டாம் அம்மா.

சுந்: காரை யெடுத்துக் கொண்டு போயேன்! (சோணுசலத்திடம்) எங்கேடா டிரைவர்?

சோணு: அவருதான் ஆபீஸர் வீட்டுக்கு இரவல் சவாரிக்குக் காரை எடுத்துக்கிட்டு போய்ட்டாருங்களே.

சுந்: அடப் பாவி. இவனுக அட்டகாசமில்ல பெரிசாய்ப் போச்சு. நம்ம அவசரத்துக்குக் கார் உபயோகப் படுகிறதில்லை. இதைவிட காரையே வித்துத் தொலைச்சிடலாம் போலே இருக்கு.

(அங்குமிங்கும் ஆவேசமாய் உலவுகிறுர்)

அன்: பரவாயில்லே மாமா. நான் நடந்தே போகிறேன். அவசியமானல் 'டாக்ஸி' வைத்துக் கொள்கிறேன்.

(போகிருன்)

(வாசலில் நின்றபடி)

மாமா, அழகன் தற்செயலாய் ஒரு வேளே திரும்பி வந்தால் அப்பா சாகப் பொழைக்கக் கிடக்கிருர் என்று சொல்லி அவனே உடனே ஊருக்கு அனுப்பி வையுங்கள்.

சோணு: அவர் ஏங்க இனிமே இங்கே திரும்பி வரப் போருர்?

சுந்: Nonsense. சும்மாயிருடா. (அன்பனிடம்) அப்புறம் நீ?

அன்: எனக்காக அவன் காத்திருக்க வேண்டாம்.

(அன்பன் போகிருன்)

சுந்: (அன்பன் போனதும் சுசீலாவிடம்) நீ அதிர்ஷ்ட சாலிதானம்மா.

சுசீ: (கொஞ்சலாக) போங்கப்பா.

[திரை]

(அன்பனல் அழகனேக் கண்டு பிடிக்க முடியவில்லே. அழகன் வேறு வழியாய்ப் பிரிந்து போய் விடுகிருன். அன்பன் அவனே மீண்டும் தேடி யலேகிருன்)

காட்சி 46.

இடம்: சென்னே செண்ட்ரல் ரயில்வே ஸ்டேஷன்.

காலம்: காலே.

பாத்திரங்கள்: நல்லேயா, சாவித்திரி, சொர்ணம்.

(சாவித்திரி, நல்லேயா, சொர்ணம் மூவரும் ப்ளாட் பாரத்துக்குள் நின்று வருவோர் போவோர் எல்லோரையும் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். வண்டி வந்து நிற்கிறது. நஞ்சப்பன் வண்டிக் குள்ளிருந்த படியே சாவித்திரியைப் பார்த்து விடுகிருன்)

நஞ்: (தனக்குள்) யார் சாவித்திரியா? தேடிப்போன மூலிகை காலில் கிடந்து பிரளுகிறது. தெய்வம் நம் பங்கில்தான் இருக்கிறது. தெய்வம் இல்லே யென்று யார் சொன்னது?

(சாவித்திரியை அணுகுகிருன்)

(சாவித்திரி குழந்தையுடன் தனிமையில் நிற்கிருள். நல்லையாவும் சொர்ணமும் மறு கோடியில் வருவோர் போவோரைப் பார்வையிட்டு வருகின்றனர்)

நஞ்: நீங்க அழகானந்தம் பிள்ளை சம்சாரம் தானே?

சாவி: (வியப்புடன்) ஆமாம்.

நஞ்: அவர் உங்களைக் கையோடே கூட்டியாரச் சொல்லி இந்த லட்டரைக் கொடுத்து என்னை அனுப்பிச் சிருக்கிருர். உங்கள் கலியாண போட்டோவைக் கூட கொடுத் தனுப்பி யிருக்கிருர்.

(போலி லட்டரையும் போட்டோவையும் சாவித்திரி யிடம் கொடுக்கிருன்)

சாவி: (ஆனந்தம் பொங்க) யார் எங்க அத்தானு? அவர்... அவர் செளக்யமா யிருக்காரா?

நஞ்: அதை யேன் கேட்கிறீங்க போங்க? உங்களை நினைச்சி நினைச்சி உருகிக் கொண்டுதான் இருக்கிருர். அந்த ஏக்கத்திலேயே பாவம் மனுஷன் படுத்த படுக்கையாய்ப் போய்ட்டார். இல் லேன்னு அவரே வந்திருக்க மாட்டாரா?

சாவி: (வருத்தமாக) ஐயையோ! நான் அவரை உடனே பார்க்கணுமே. அவர் இப்போ எங்கே யிருக்கிருர்?

நஞ்: பம்பாயிலே.

சாவி: (திடுக்கிட்டு) பம்பாயிலேயா? அப்படின்னு இருங்க. நான் எங்க நல்லையா பிள்ளை கிட்டே ஒரு வார்த்தை சொல்லிட்டு வந்துடறேன்.

நஞ்: ஊம்ஹூம்! தாமதிக்க நேரமில்லை. Train புறப்படப் போகுது. உங்களைத் தேடி அழகா புரியிலே போய்ப் பார்த்துட்டு இப்பதான் வர்றேன். அதோ அந்த வண்டியிலே தான் பம்பாய்க் குத் திரும்பிப் போறேன்.

சாவி: இப்போ என்ன செய்யறது?

நஞ்: (சாமர்த்தியமாக) வேணும்னு ஒண்ணு செய்ங்க. விலாசத்தைத் தந்துட்டுப் போறேன். நீங்க அடுத்த வண்டிக்கு வாங்க.

சாவி: அப்புறம் நீங்க?

நஞ்: நான் இந்த வண்டியிலேயே போயிடணும். நாளைக்கு நான் ஆபீஸிலே இருந்தாகணுமே!

சாவி: அய்யய்யோ! அப்புறம் அத்தான் கோபிச்சுக் கொள்வாரே.

நஞ்: அப்படின்னு உடனே புறப்படுங்க. உம். உம், நாழி யாச்சி... வண்டியிலே ஏறிக் கொள்ளுங்க. மணி யடிச்சாச்சு.

(சாவித்திரி ரயிலில் ஏறிக் கொள்கிருள். வண்டி புறப் படுகிறது. நல்லையர்வும் சொர்ணமும் திரும்பி வந்து பார்க் கையில் சாவித்திரியையும் குழந்தையையும் காணுமல் திடுக் கிடுகின்றனர்)

நல்: இந்த மாதிரி ஆகும்ன்னு தெரிஞ்சிருந்தால் சாவித்திரியைக் கூட்டிக்கினு வந்திருக்க மாட்டேனே. (தலையிலடித்துக் கொள் கிருன், தனக்குள்) ஹூம்! அறிவைக் கடன் கொடுத்துட்டேன், ...கடன் கொடுக்கிறதாவது? அறிவு இருந்தால் இல்ல?

சொர்; (கவலையோடு) ஊருக்குப் போய், என் வீட்டுக் காரருக்கு என்னுல் பதில் சொல்லி முடியாதே! தினசரி என் உசிரை வாங்கி விட்டுடுவாரே! ஐயையோ!

(விம்முகிருள்)

[திரை]

காட்சி 47.

இடம்: பம்பாய் வீதி.

காலம்: மாலை.

பாத்திரங்கள்: அழகன், ஹோட்டல் முதலாளி முதலானோர்.

(அழகன் வேலை தேடி வீதி வீதியாய் அலைகிருன்)

அழ: (தனக்குள்) கார்மேகத்தில் கண நேர மின்னல்! இருண்டு போன என் வாழ்வில் இமைப் பொழுது இன்பம்! ஆ! சிலா!! ... ஹூம்! இன்னும் என்னென்ன எனக்குக் காத்திருக் கிறதோ தெரியலையே! (தம்பதிகள் தங்கள் குழந்தையுடன் கொஞ்சிக் குலவிக் கொண்டிருப்பதைப் பார்க்கிருன். தன்

குழந்தையை மானசீகமாகக் கற்பனை செய்து கொண்டு) எங்கள் அன்பின் உருவே! அருமைச் செல்வமே! உன்னைக் கையி லேந்தி மகிழ இந்தப் பாவிக்குக் கொடுத்து வைக்க வில்லையே. ஐயையோ நான் மகா பாபி! (சுற்று முற்றும் பார்த்த வாறு) பம்பாய்! குபேர புரி!! மாட மாளிகைகள்! கூட கோபு ரங்கள்! ஆலைகளின் அற்புதத் திரு விளையாடல்கள்! இவை களுக்குத் தங்கத் தமிழ் நாடு தந்த பணம் எவ்வளவோ? (பசி தோன்றுகிறது) பசி வேறு காதடைக்கிறதே! (ஆனந்த பவன் ஹோட்டல் தென்படுகிறது. அங்கே செல்கிருன்)

அழ: (ஹோட்டல் முதலாளியிடம்) ஐயா பசி காத டைக்குதுங்க, மூணு நாளாய் முழுப் பட்டினிங்க.

ஹோட்டல் முதலாளி: அட! ஆளைப் பார்த்தா கிண்டா கர்ணன் மாதிரி இருக்கே. வந்து பிச்சை கேட்கிறியே! உனக்கு வெட்கமா யில்லை?

அழ பிச்சை கேட்க வரலீங்க.

ஹோ-மு: பின்னே எதுக்கு வந்தாயாம்? விருந்து சாப்பிடவா?

அழ: நெத்தி வேர்வை நிலத்திலே விழ உழைக்கத் தயா ராய்த் தானுங்க இருக்கேன். ஆனால் வேலை ஒண்ணும் கிடைக்க லீங்க. இந்தப் பட்டணத்லைதச் சுத்தி சுத்தி கால் தேஞ்சதுதான் மிச்சமுங்க.

ஹோ-மு: உம்.... காலம் இருக்கிற இருப்பிலே பட்டதா ரிங்களெல்லாம் பியூன் வேலைக்கு ததிங்கிணதோம் போடுருங்க. ஆனால் அது கூட அவங்களுக்கு கிடைக்கிற தில்லை. இந்த லட் சணத்திலே உனக்கு அவ்வளவு சீக்கிரத்திலே வேலை கிடைச் சுடுதா என்ன?

அழ: நீங்கதான் எப்படியாவது ஒரு வேலை கொடுத்துக் காப்பாத்தணுமுங்க.

ஹோ மு: ஏது! 'ஏண்டா கலியாணம் பண்ணிக் கொள்ள லை'ன்னு கேட்டால், 'நீ தான் சித்தே பெண்டாட்டியாய் இரேன்'னு சொல்லுவை போலிருக்கே. எங்கிட்ட என்ன வேலை யப்பா இருக்கு?

அழ: நீங்க அப்படிச் சொல்லக் கூடாதுங்க. நீங்க தலை யால் இட்ட வேலையை காலால் செய்வேனுங்க.... மன்னிச்சுக் குங்க..... நீங்க காலால் இட்ட வேலையைத் தலையாலே செய்யக் காத்துக்கிட்டு இருக்கேனுங்க. நீங்க மனசு வச்சாப் போதுமுங்க. எதுவும் நடக்குமுங்க. நீங்க இஷ்டப் பட்டு கொடுத்ததை வாங் கிக்கிறேனுங்க.

ஹோ மு: (சற்று ஆலோசித்து) உம் நீ யாரு? எந்தஊரு? என்ன உன் பேரு?

அழ: எம் பேரு அழவப்பனுங்க. தெக்குச் சீமையிலே யிருந்து வகுறு வளர்க்கலாமுன்னு வடக்கே வந்தேனுங்க.

ஹோ மு; ஹூம்! வடக்கே இருந்து தெற்கே போறவ னுங்க ளெல்லாம் குபேரனுய்ப் போயிடருங்க. தெற்கே இருந்து வடக்கே வர்றவங்களெல்லாம் இப்படி ஆண்டியாய் அலையருங்க! 'வடநாட்டுக் காரங்க தென்னுட்டுக் காரங்களைச் சுரண்டுருங்க' அப்படிங்கிற ஈ. வே. ரா, வாதத்தை நானும் ஓரளவு ஒத்துக் கொள்ளத்தான் வேண்டி யிருக்கு சரி, சரி ஏதோ, நீ தெற்கத்தி யான் என்கிறதினுலே ஏதாவது வேலே போட்டுத் தர்றேன்.

அழ: (சந்தோஷத்துடன்) சரிங்க.

ஹோ மு: வேலேயை ஒழுங்காய்ச் செய்யணம். இல்லியோ, உடனே சீட்டைக் கிழிச்சுடுவேன். ஆமா. ஜாக்ரதை.

அழ: நல்லதுங்க.

(அழகனுக்கு இலே யெடுத்தல், மேசை துடைத்து சுத்தம் செய்தல். தட்டுக் கழுவுதல். கறி காய் நறுக்குதல் முதலான வேலேகள் தரப் படுகின்றன)

[**திரை**]

காட்சி 48.

இடம்: பம்பாயில் நஞ்சப்பனின் அந்தரங்கவிடுதி.

காலம்: இரவு.

பாத்திரங்கள், நஞ்சப்பன், சாவித்திரி.

(நஞ்சப்பன் சாவித்திரியைக் குழந்தையுடன் தனிமை யான ஒரு இடத்தில் நய வஞ்சகமாக சிறைப் படுத்தியிருக் கிருன் சாவித்திரி அழகன் வருகையை ஆவலுடன் எதிர் பார்த்துக் கொண் டிருக்கிருள்)

(நஞ்சப்பன் கதவைத்திறந்து உள்ளே வருகிருன்)

சாவி: (ஆவலுடன் எழுந்து ஓடி வந்து) அத்தான்! (அழ கன் வராததைக் கண்டு திடுக்கிட்டு) அண்ணு, அவர் எங்கே? வர வில்லேயா?

நஞ்: (பேய்ச்சிரிப்புச் சிரித்தவாறு) நரியின் வளையில் நண்டு! அத்தானு? இனி அவன் ஏன் இங்கே வரப்போகிறுன்? அவன் போய் ரொம்ப நாளாச்சே. இனி நான்தான் உன் அத்தான்!

சாவி; (துக்கமும் ஆத்திரமும் ஒருங்கே பொங்க) அட துரோகி! நீ தானு எங்கள் நல் வாழ்வை நாச மாக்கிய நயவஞ்சகன்? எங்கள் குடும்பத்தைக் குலைத்த குடிகேடன்? என் கணவனைக் கலங் கடித்தது மின்றி என் கற்பையும் களங்கப் படுத்தப் பார்க்கிருய் துக்கத்தால் துடித்துத் துவண்டு போன என்னை உன் துஷ்டத் தனத்தால் மேலுமா துன்புறுத்த நினைக்கிருய்? உன்னுல் என் உயிரை வேண்டுமானுல் எடுத்துக் கொள்ள முடியும், ஆனுல் என் உடலைக் களங்கப் படுத்தி விடலாம் என்று மனப்பால் குடியாதே!

நஞ். ஹஹ்ஹஹ்ஹா! கூண்டுப் புலி குமுறுகிறது! நீ என் பிடியிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம் என்று எண்ணுதே. இந்த நஞ்சப்பன் வைத்த குறி நழுவியது என்றைக்கும் இல்லை. இதோ பார் சாவித்திரி. உன் நன்மைக்காகவே சொல்கிறேன். உயிரை இழப்பதால் என்ன லாபம்? மனிதன் பிறக்கிருன், வாழ்கிருன். முடிவில் மடிகிருன். மரணத்துக்குப் பிறகு மற்ெருன்றும் இல்லை, இருக்கும் வரை இன்பத்தை எல்லை மீறி அனுபவிக்க வேண்டும். பின் இறக்க வேண்டும். வாலிபம்தான் வாழ்வின் வசந்தம். இன்பம் நுகர ஏற்ற தருணம். இதை விட்டு விட்டு கற்பாம் கற்பு! அது என்ன கருப்பா? சிவப்பா?

சாவி: சீ! மனச் சாட்சியை மழுக்கி விட்ட மதோன்மத்தா! மந்திரோபதேசமா செய்கிருய்? உன்னைப் போல் நாலுபேர் இருந்தால் போதும். நாடே நாச மாகி விடும்.

நஞ்: (ஆவேசத்தோடு) ஹூம்! மயிலே, மயிலே இறகு போடு என்ருல் போடுமா? பலாத்காரம் ....அப்புறம் தானே பணிந்து விடுகிருய்....

(சாவித்திரியைக் காம வெறியோடு நெருங்குகிருன். சாவித்திரி திமிருகிருள். குழந்தை இடி பட்டு 'ஓ' என்று ஓல மிடுகிறது.)

சாவி: அட பாவி! ஈரம் என்பது உன் நெஞ்சில் இம்மியளவும் இல்லையா? பச்சைக் குழந்தையிடம் கூடவா உனக்குப் பரிதாபம் இல்லை?

நஞ்: (குழந்தையைப் பிடுங்கிக் கொண்டு) பச்சைக் குழந்தையிடம் உனக்குத்தான் பாசமில்லை. இதோ பார்! என்

இச்சைக்கும் இன்பத்திற்கும் உன் இணக்கம். இன்றேல் பச்சைப் பாலகனின் பலி. இரண்டில் எதைத் தெரிந்து கொள்கிறாய்?

சாவி: கொலை பாதகா, பத்து மாதம் சுமந்து படாத பாடு பட்டு பெற்று, பாலூட்டிச் சீராட்டி வளர்த்த பச்சிளம் பாலகனையா பலி கேட்கிறாய்? எங்கள் ஆசையின் அழகிய உருவை அழிக்க நினையாதே. அன்பின் தீபத்தை அணைத்து விடாதே. வேண்டாமப்பா இந்த பஞ்சமா பாதகம்.

நஞ்: சரி வேண்டாம். இந்தா உன் குழந்தை. எடுத்துக் கொள். (குழந்தையைக் கொடுக்கிறான். சாவித்திரி ஆவலோடு பெற்றுக் கொள்கிறாள்) ஆனால்........ ஒரு முறை என் மோகம் தீர என்னை முத்தம் செய். யௌவனத்தின் எழில் மங்காத உன் சிங்கார இன்பப் பூங்காவில் ஒரே ஒரு முறை நுழைய எனக்கு அனுமதி தா. அது போதும்.

சாவி: (திடுக்கிட்டு) காம வெறியில் கண்ணிழந்த கயவா, பெண்ணுக்குக் கண் போன்ற கற்பையா கவர்ந்து விடக் கருதுகிறாய்?

நஞ்: ஹூம்! வீண் புலம்பலை நான் விரும்பவில்லை உடனே ஒரு முடிவுக்கு வா. நமது 'இன்ப லோகப் பயணம்' அல்லது 'பாலகனின் பர லோக யாத்திரை'.... எதை விரும்புகிறாய்?

சாவி: பெண்மைக்கும் தாய்மைக்குமிடையே பெருத்த போர் மூட்டுகிறான் பேயன். நான் ஒரு முடிவுக்கு வந்து விட்டேன்.

நஞ்: (ஆவலுடன்) என்ன? முடிவுக்கு வந்து விட்டாயா?

சாவி: ஆம் வந்து விட்டேன்.

நஞ்: வா. (சாவித்திரி அருகில் மீண்டும் நெருங்குகிறான்.)

சாவி: இதோ (சாவித்திரி குழந்தையுடன் அருகில் வந்து) என் மதிப்பிலா மாணிக்கம். (தேம்பிய வாறு) என் கற்பைக் காப்பாற்றிக் கொள்ள என் கண் மணியைக் உனக்குக் காணிக்கை யாகக் கொடுத்து விட்டேன். என் ஆசைச் செல்வனை உன் அக்ரமத்துக்கு பலியாக அளித்து விட்டேன். என் தங்க விக்ரஹத்தை உனக்குத் தாரை வார்த்து விட்டேன். தாயின் மானம் மாசு படுவதைத் தவிர்க்கத் தன்னுயிரைத் தத்தம் செய்த தனயனின் வீர வரலாறு நாட்டுச் சரித்திரத்தில் பொன்னெழுத்துக்களில் பொறிக்கப் படட்டும்! உம் கொண்டு போ!

நஞ்: (ஏமாற்றத்தோடு) என்ன?

சாவி: ஆம்! உன் காம வெள்ளத்தில் என் கற்பைக் கறைப் படுத்திக் கொள்வதை விட மாசற்ற என் மகனை மகத்தான தியாகம் செய்து விட முடிவு செய்து விட்டேன். (நஞ்சப்பன் குழந்தையைப் பிடுங்குகிருன்) போடா கண்ணு போ! நீ போகும் இடத்துக்கு சீக்கிரம் நானும் வந்து விடுகிறேன்.)

(சாவித்திரி மூர்ச்சித்து விழுகிருள். நஞ்சப்பன் குழந்தையுடன் வெளியே வருகிருன். வீரப்பன் வெளியே காத்துக்கொண் டிருக்கிருன்.)

வீர: விஷயம் என்ன பழம்தானே?

நஞ்: தானே பழுக்கா விட்டால் தடி கொண் டடித்தாவது கனிய வைக்க வேண்டும்.

வீர: (குழந்தையைப் பார்த்து விட்டு) இது என்ன?

நஞ்: கனியை ருசிக்க இயலாமல் இடையே இருக்கும் முள் வேலி. இதைக் கொண்டு போய்........ (வீரப்பன் காதுக்குள் ஏதோ ஓதுகிருன். வீரப்பன் திடுக்கிடுகிருன்.)

வீர: உம். கொண்டு போ சீக்கிரம்!

(வீரப்பன் குழந்தையுடன் போகிருன்.)

[திரை]

காட்சி 49.

இடம்: ஆனந்த பவன் ஹோட்டல்.

காலம்: மாலை.

பாத்திரங்கள்: அழகன், நாகமணி, நஞ்சப்பன் முதலானோர்.

[ஹோட்டலில் ஆட்கள் வந்து போன வண்ண மிருக்கிருர்கள்.)

சர்வர்: (தடித்த மனிதர் ஒருவரைப் பார்த்து). சரி போண்டா?

தடியர்: (முறைத்த வண்ணம்) ஆமா.

ஒருவர்: அப்பப்பா என்ன வெயில்! என்ன உஷ்ணம்!! சேச் சேச்சே........உஸ்........அப்பாடா.........

சர்வர்: உங்களுக்கு என்ன சார் வேணும்?

ஷியார்: 'சூடா' இரண்டு மசால் தோசை, 'ஹாட்'டா ஒரு கப் காப்பி.

மற்றொருவர்: இந்தாப்பா சர்வர், நீ காப்பி கொண்டு வரும் போது என்னை எழுப்பப்பா.

(மேசை மீது தலையை வைத்துப் படுத்துக்கொள்கிருர்.)

மற்றொருவர்: (உள்ளே பிரவேசித்த வண்ணம், சர்வர் ஒருவனிடம்) எனக்கு ஒரு அறை வேணுமப்பா.

சர்வர்: அறையா?

ஷியார்: ஆமாம்.

சர்வர்: (கையிலிருந்த சூடான காப்பி தம்ளரைக் கீழே வைத்து விட்டு கைகளை ஊதி விட்ட வண்ணம்) என்னங்க எங்கிட்டே வந்து அறை கேட்கிறீங்களே!

ஷியார்: ஆமாம்ப்பா, தங்குகிறதற்கு ஒரு அறை வேணுமப்பா.

சர்வர்: அதைத் தானுங்க நானும் சொல்றேன். முதலாளி கிட்டே போய்க் கேளுங்க....

மற்றொருவர்: ஏங்க, சாப்பாடு நல்லா இருக்கும் இல்ல?

சர்வர்: ஓ! நல்லா சாப்பாடு கொடுக்கிறேன் வாங்க.

(அழகன் ஹோட்டலில் தன் வேலையைச் செய்து கொண்டிருக்கிருன்.)

(நஞ்சப்பன் நாகமணி பிரவேசம்.)

நஞ்: (அழகனைப் பார்த்து விட்டு நாகமணியிடம் ரகசியமாக) பார்த்தாயா அந்தப் பயல் அழகன் போன கெதியை?

(அழகன் அந்தப் பக்கமாய் வருகிருன்)

நஞ்: (கிண்டலாக)

'குடை நிழலில் இருந்து குஞ்சரம் ஊர்ந்தோரும்
நடை மெலிந்தோரூர் நண்ணினும் நண்ணுவர்.'

நாக: (கேலியாக) ஐடியா! ஐடியா! எவ்வளவு ப்ராக்டிக்கல் (Practical) ஆக இருககுது பார்த்தீங்களா?

'ஆற்றங்கரை மரமும் அரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே'

நஞ்: செண்ட் பெர்சண்ட் ட்ருத் (cent percent trnth) அதைத் தான் இப்போ நம் கண் ணெதிரேயே பார்க்கிறோமே!

(அழகன், தன்னை இருவரும் பகடி செய்வதை உணர்ந்து வருந்துகிறான்.)

நஞ்: (அழகனைப் பார்த்து) டேய் இடியற்! இந்த டேபிளை ஏன்டா சரியாய்க் கிளீன் பண்ணலே?

நாக: நிற்கிறான் பாருங்கள் தண்டச் சோத்து தடிராமன் மாதிரி.

நஞ்: இந்த மாதிரி சோம்பேறிப் பசங்களை யெல்லாம் முதலாளி கிட்டே சொல்லி முதுகுத் தோலை உறிக்கச் சொல்லணும்.

(அழகனுக்கு ஆத்திரம் எல்லை மீறுகிறது)

அழ: (இருவரையும் பார்த்து ஆத்திரமாய்) அட பாவிகளே! என்னை இந்த நிலைக்கு ஆளாக்கியது மல்லாமல் பரிகாசமா செய்கிறீர்கள்? உங்களை என்ன செய்கிறேன் பாருங்கள்!

(அழகன் அருகில் இருந்த நாற்காலியைத் தூக்கி அவர்களை அடிக்க ஓங்குகிறான். மற்றவர்கள் அவனை எட்டிப் பிடித்துக் கொள்கின்றனர். நஞ்சப்பன் முதலாளியிடம் சென்று முறையிடுகிறான்.)

ஹோ. மு: நீங்க தயவு செஞ்சு இதை யெல்லாம் மனசிலே வச்சுக்கப் படாது. அந்தப் பயலை நான் கூப்பிட்டுக் கண்டிக்கிறேன். (கோபத்துடன் 'கால்பெல்லை' அடிக்கிறார். அது உடைந்து விழுகிறது. சிப்பந்தி ஒருவன் ஓடி வருகிறான்) டேய் அந்தப் பயல் அழகப்பனைக் கூப்பிடு.

(அழகன் தயங்கிய வாறே வருகிறான்)

ஏன்டா, இப்படி வர்றவங்க போறவங்க ளண்டையெல்லாம் சண்டை போட்டு விரட்டி யடிச்சால் வியாபாரம் எப்படி நடக்கும்னேன்? அப்புறம் ஹோட்டலைத் தூக்கித் தலைமேலே வச்சுண்டு நான் எங்கேயானும் ஓட வேண்டியது தான். இல்லேன்னு உன்னுட்டம் எச்சில் இலை யெடுத்துப் பிழைக்க வேண்டி

யது தான். ஏன்டா உன்னை எச்சில் இலையை எடுக்கச் சொல்லி இருந்துதா? இல்லே! 'சாப்பிட்ட வங்க இத்தனை பேர்ன்னு' கணக்கு பார்க்கச் சொல்லி யிருந்துதா? வர்றவங்களோடே உனக்கு என்னடா பேச்சு? (நஞ்சப்பனைப் பார்த்து) நீங்க வருத்தப் படாதீங்கோ சார், (சற்று யோசித்து) அது சரி. கொஞ்ச நாளைக்கு முன்னுடி ஒரு மைனர் 'டிப், டாப்' ஆக வருவாரே, அவரை எங்கே கொஞ்ச நாளாய்க் காணோம்?

நஞ்: (அழகனை ஓரக் கண்ணால் பார்த்த வாறே) அந்தப் பரிதாபத்தை ஏன் கேட்கிறீங்க? திடீர்ன்னு ஒரு நாள் Heart failure ஆகி பகவான் திருவடி நீழலில் சேர்ந்து விட்டார். (அழகனை ஜாடையாய்ப் பார்த்த வாறு கள்ளக் கண்ணீர் உகுக்கிறான். அழகன் முகத்தில் கோபம் கொப்புளிக்கிறது.)

ஹோ-மு: (கத்தை நோட்டுகளை எண்ணியவாறே) வருத்தப் படாதீங்க ஸார். உலகத்திலே எப்போ மனுஷன்னு பிறந்தாச்சோ, அப்போ மரணம் இருக்கவே இருக்கு. 'காயமே இது பொய்யடா, வெறும் காற்றடைந்த பையடா' 'ஆறிலும் சாவு! நூறிலும் சாவு!!' 'இன்றைக் கிருப்பாரை நாளைக் கிருப்பார் என் றெண்ணவோ இடமில்லை' (ஒருவர் பில் கொண்டு வருகிறார்) ஏம்ப்பா நாலே யரையணாவா நாலே முக்காலணாவா இவருக்கு?...(தொடர்ந்து) இந்த உலகமே ஒரு நாடகம்தானே சார். ஏதோ சந்தர்ப்ப வசத்தினாலே இப்போ நாம் இரண்டு பேரும் பேசிண்டு இருக்கோம். நாளைக்கு நீங்க எங்கேயோ? நான் எங்கேயோ? போன இடம் புல்லு முளைச்சுப் போனாலும் போயிடும்.

நஞ்: வாஸ்தவம்! வாஸ்தவம்!!

ஹோ-மு: (அழகனிடம்) டேய் பத்மாஷ்! ஏன்டா நின்னுண்டு இருக்கே? இனிமே இந்த மாதிரி கலாட்டா பண்ணினே? ஜாக்கிரதா! அப்புறம்.... நான் வந்து.... ஆமா.... அவ்வளவு தான்....

நஞ்: (கேலியாக) Chapter Close.... அப்புறம் இவரு, திருவோடெடுத்து தெரு வோடு போய் 'சங்கரா சிவ சங்கரா சிவ சங்கரா!.......

(நஞ்சப்பன் கட கடவென்று சிரிக்கிறான்)

[திரை]

காட்சி 50.

இடம்: சாவித்திரி சிறைப் பட்டிருக்கும் வீடு.

காலம்: இரவு 7 மணி.

பாத்திரங்கள்: நஞ்சப்பன், பொன்னப்பன், சாவித்திரி.

(குழந்தையின் பிரிவுக்குப் பின் சாவித்திரிக்கு சித்தப் பிரமை உண்டாகி விடுகிறது)

(நஞ்சப்பன் பிரவேசம்)

சாவி: (சித்தப் பிரமையில் சிரித்துக் கொண்டே) வந்துட்டீங்களா....? வாங்க! வாங்க....!! என் ராஜா வாங்க....! என் துரையே வாங்க....!

நஞ்: (அருகில் வந்தவாறு) சபாஷ்! நினைத்தேன், உன் மனம் மாறி விடு மென்று.

சாவி: (நஞ்சப்பனை ஏறிட்டுப் பார்த்துவிட்டு) நீ யாரடா? என் குழந்தை எங்கே? எங்கேயடா என் செல்வம்? சொல்லு! சொல்லல்லே. உன்னை அப்படியே சகக்கி, கழுத்தை நெறிச்சு, கண்டம் துண்டமா வெட்டி....

(பொன்னப்பன் பிரவேசம்)

நஞ்: ஐயையோ பைத்தியம் போலே இருக்கே!

பொன்: பைத்தியம் போல் இருக்கிற தென்ன? பைத்தியமேதான்.

(நஞ்சப்பன் வேகமாக வெளியேறுகிறான்)

பொன்: (தனக்குள்) இந்த மனுஷனுக்கு ' இருதயம்' ன்னு ஒண்ணு இருக்காது போலிருக்கே!

(போகிறான்)

[திரை]

காட்சி 51.

இடம்: ஆனந்த பவன் ஹோட்டல்.

காலம்: இரவு.

பாத்திரங்கள்: அன்பன்.

(அழகனைத் தேடியலைந்த அன்பன் தற்செயலாய் ஆனந்த பவனுக்கு வருகிருன். சற்றுத் தொலைவிலிருந்தவாறே அழகனை அடையாளம் கண்டு கொள்கிருன். சகோதர பாசம் அவனை உந்தித் தள்ளுகிறது. ஆனல் அவன் அந்தராத்மா அவனுக்கு அறிவுறுத்த ஆரம்பிக்கிறது.)

அந்தராத்மா: அன்பா! எங்கு செல்கிருய்? அவசரப்படாமல் ஆலோசித்துச் செய். உன் சகோதரன் உன் மீது கடுங் கோபத்திலிருக்கிருன். உன் கன்னத்திலடித்ததை மறந்து விட்டாயா?

அன்: கன்னத்திலடித்தான், ஆனல் நான் கள்ளமற்றவன்.

அந்த: அது அவனுக்கல்லவா தெரிந்திருக்க வேண்டும்?

அன்: தன் சந்தேகம் சரியல்ல என்று தெரிந்து கொண்டிருக்க மாட்டானு?

அந்: அதற்குள் அவன் அதை உணர்ந்திருக்க நியாயம்?

அன்: இந்த நிலை அவன் தவறை அறிவுறுத்தியிருக்குமே!

அந்: நீயா இப்படிப் பேசுகிருய்? நிலை குலைந்தாலும் மானமிழக்க விரும்பாத பரம்பரை வழி வந்தவன். அவன் கொண்ட சந்தேகம் தவறு என்று அவன் தெரிந்து கொள்ளும் வரை அவனை அணுகினல் ஆபத்துதான்.

அன்: ஆபத்தா? அதற்கு அஞ்சினல் ஆகுமா?

அந்: அட பைத்தியமே! தனக்கு அவமானம் தேடித் தந்தவன் தன் அலங்கோல நிலையை அறிந்து கொண்டு விட்டானே என்று எண்ணி உன்னைக் காண விரும்பாது வேறெங்காவது ஓடி விட்டால்? அல்லது ஒரு வேளை மன முடைந்து தற்கொலை செய்து கொண்டு விட்டால்....? முதலுக்கே மோசமாய்ப் போகுமே! நீ எடுத்துக் கொண்ட அத்தனை பிரயாசையும் வியர்த்தமாகி விடுமே!

அன்: அப்படி யானல்....?

அந்: முதலில் அவன் மனதை அறிய வேண்டும்.

அன்: அதற்கு வழி?

அந்: மாறு வேஷம்.

அன்; ஆம். சரியான ஏற்பாடு.

(அன்பன் மாறு வேஷ மணிந்து 'கருணகரன்' என்று தன் பெயரைப் பதிவு செய்து கொண்டு 'ஆனந்த பவனி'ல் அறை ஒன்று வாடகைக்கு எடுத்துத் தங்குகிருன்)

[திரை]

காட்சி 52.

இடம்: போலீஸ் ஸ்டேஷன்.

காலம்: அதிகாலை.

பாத்திரங்கள்: சப்-இன்ஸ்பெக்டர், கான்ஸ்டபிள்கள் முதலானோர்.

(சப் இன்ஸ்பெக்டர் கேஸ் கட்டுகளைப் பார்வையிட்டுக் கொண்டிருக்கிருர்)

சப்-இன்ஸ்: ஏய் முன்னூத்தி ரெண்டு!

(P C, 302 கான்ஸ்டேபிள் காத்தவராயன் உறங்கி வழிந்து கொண் டிருக்கிருன்)

ச. இ: டேய் பரங்கிக் காய்!

(P. C. 302 திடுக்கிட்டு விழித்து ஓடி வந்து சல்யூட் அடிக்கிருன்)

P. C. 302: ஏங்க எசமான்?

ச. இ: அந்த கேஸ் கட்டை எடுத்துட்டு வா?

P. C. 302: எதுங்க? அந்த 'மருடரு' கேஸுங்களா?

ச. இ. உன்னைத் தாண்டா murder பண்ணனும். நம்பரைப் பாரு, முன்னூத்தி ரெண்டு. ஏண்டா, 'இந்தியன் பீனல் கோட்' செக்ஷன் '302' என்னன்னு தெரியுமா?

P. C. 302: ஓ! திருட்டு.......

ச. இ: (கிண்டலாக) ஹூம்க்கும்! அதுதானே கேட்டேன்? பினல் கோட் ஐயே கொலை பண்ண ஆரம்பிச் சுட்டியா? உருப் பட்டுது போ! உனக்கு எந்த 'fool' டா போலீஸ் உத்தியோகம் கொடுத்தது?

P. C. 302: (சிறிது யோசித்து)... வந்து...... உங்க மாமா தானுங்க....அவர் இங்கே 'சூப்பிரெண்டு துரை' யாய் இருக்கச்சே தானுங்க என்னை இதிலே நொழச்சார்....மவராசன் நல்லா யிருக்கணுமுங்க....

ச. இ: (இடைமறித்து கோபத்தோடு) சீ! போடா denkey! போய் அந்த களவு கேஸ் கட்டு இருக்கே... அதுதான்.... வந்து....

(கான்ஸ்டபிள் விழிக்கிருன்)

ச. இ: ஏன்டா ஆடு திருடின கள்ளன் மாதிரி முழிக்கிறே? அதுதான்.... செயின் களவு போயிடுச்சுன்னு கம்ளெயிண்டு வந்துதே....

P. C. 302: ஓ! ஆமாங்க. (கேஸ் கட்டை எடுத்துக் கொடுத்து) திருடனை 'சடார்'ன்னு அரெஸ்ட் பண்ணி 'லாக் அப்' லே வச்சிருக்கேனுங்க.

ச. இ: டேய் கூஸ், வர வர நீ கேஸ்களிலே யெல்லாம் ரொம்ப முஸ்தீபா யிட்டேடா?

P. C. 302: (மகிழ்ச்சி பொங்க) என்னமோ எசமான். நமக்கு 'டுட்டி'ன்னு 'டுட்டி'தான். இந்த வாட்டியாவது எப்படியும் ஏட்டு 'லிஸ்ட்'டிலே சிபாரிசு பண்ணுனீங்கன்னு ....

ச. இ: அப்புறம் ஊரிலே ஒருத்தன் பாக்கியில்லாமே அத்தனை பேரையும் 'அரெஸ்ட்' பண்ணிக் கொண்டாந்துடுவே. ஏன்டா செயின் தான் பெட்டியிலே இருக்குன்னு அந்த மனுஷன் சொல்றுரே, நீ திருடனை எங்கேயிருந்து பிடிச்சே? 'சடார்'ன்னு அரெஸ்ட் பண்ருராம், 'திடீர்'ன்னு அரெஸ்ட் பண்ணுமே. மதி கெட்ட மண்டுகம். போடா. போய்த் தொறந்து அவனை ஓட்டி விடு ....ஓடு.

(காத்தவராயன் போகிருன்)

P.C. 302: (தனக்குள் பெரு மூச்சுவிட்ட வண்ணம்)....உம் பரங்கிக்காய், Donkey, கூஸ், மண்டுகம், செச்சே! மனுஷன்னு கூட மதிக்கிறதில்லை போலே இருக்கு. உம்.... போக் கத்தவனுக்குப் போலீஸ் வேலை........! அரைக் காசு உத்தியோகம்ன்னுலும் அர

சாங்க உத்தியோகம் வேணும்னு அடிச்சுக் கிருங்க. இங்க நாம படுற அவஸ்தை ஆருக்குத் தெரியுது? அத்தனையும் அடிமைத் தனம். ராப் பகலாய் உழைக்கிறதிலே மட்டும் குறைச்ச லில்லே.

(டெலிபோன் மணி, 'கண கண' வென்று ஒலிக்கிறது)

ச. இ: (போனை எடுத்து) என்ன?........கொலையா?........ ஆனந்தபவன் ஹோட்டலிலேயா........? இதோ வந்துவிட்டேன்.

(சப் இன்ஸ்பெக்டர் கான்ஸ்டபிள்கள் சகிதம் ஸ்தலத்துக்கு விரைகிருர்).

[திரை]

காட்சி 53.

இடம்: நீதி மன்றம்.

காலம்: காலை.

பாத்திரங்கள்: அழகன், அன்பன், நீதிபதி, சாட்சிகள், வழக்கறிஞர்கள் முதலானோர்.

(அழகன் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப் பட்டிருக் கிருன். அன்பன் மாறு வேஷத்தில் இருந்து நடவடிக்கைகளை கவனிக்கிருன்)

(பப்ளிக் பிராஸிக்யூட்டர் வழக்கை அலசுகிருர்)

பப். பிரா: மைலார்டு, அண்ட், ஜெண்டில் மென் ஆப் தி ஜூரி!....கொலை!....கொடிய கொலை!!....கோரக் கொலை!!!....ஆனந்த பவன் முதலாளி அனந்த கிருஷ்ணய்யர் சம்பவ தினத்தன்று அதி காலை சற்றேறக் குறைய ஐந்து மணிக்குத்தமது அந்தரங்க அறை யில், பச்ச ரத்தத்தில் பயங்கரமாகப் படுகொலை செய்யப் பட்டார். P. W. 1. பிரேதப் பரிசோதனை நடத்திய டாக்டர் ரங்கா ராவ்....

கோர்ட் சிப்பந்தி: (கூப்பிடுகிருன்) டாக்டர் ரங்கா ராவ்! (குழறியவாறு) ராக்டர் டங்கா ராவ்!

டாக்டர் ரங்காராவ்; அது கொலைதான். தற்கொலையா யிருக்க நியாய மில்லை, அதற்கு அவசியமும் இல்லை, ஆதாரமு மில்லை; இறந்து போனவர் வாயில் துணி அடைக்கப் பட்டிருந்தது.

எதிர் பாராமல் தாக்கப் பட்டதால் அவர் கைகள் இரண்டும் பக்கவாட்டில் பரந்து கிடந்தன.

பப். பிரா டாக்டரது 'போஸ்ட் மார்ட்டம்' சர்ட்டிபிகேட் இதோ. எக்ஸிபிட் P. 1. (சர்ட்டிபிக்கேட்டை கோர்ட்டில் ஆஜர்ப் படுத்துகிறார்) ஆகவே இது கொலை தான். இ. பி. கோ 302 வது செக்ஷனின் கீழ் தண்டிக்கப் பட வேண்டிய பயங்கர பாதகம். இனி, இக் கொடூர குற்றத்தைச் செய்தது யார்? இது தான் நம்முன் நிற்கும் பிரச்னை. கைப் புண்ணுக்குக் கண்ணாடி தேவையில்லை. கையும் மெய்யுமாய்ப் பிடி பட்ட குற்றவாளியைத் தண்டிக்கத் தயக்கம் வேண்டியதில்லை. சில கொலை கேஸ்களைப் போல் இதில் சிக்கல் இல்லை, சிரமுமில்லை. சிந்தனைசிறிது போதும். ஆனால் சட்டத்துக்கும் சம்பிரதாயத்துக்கும் கட்டுப் பட்டு, இந்த வழக்கிற்கான சம்பவங்களையும் சந்தர்ப்பங்களையும் சாட்சியங் களையும் உங்களுக்கு விளக்குகிறேன்.

(கோர்ட் கலைந்து போஜன இடை வேளைக்குப் பிறகு மீண்டும் கூடுகிறது)

பப். பிரா: (மற்ற சாட்சிகளையும் விசாரித்தான பிறகு) ஏனைய சாட்சிகளின் வாக்கு மூலங்களையும் கேட்டீர்கள்! அவர் கள் அடையாளம் காட்டிய கேஸ் சம்மந்தமான தடயங்களும் கோர்ட்டில் தாக்கல் செய்யப் பட்டு விட்டன.

........'சம்பவம் நடந்த தினத் தன்று அதிகாலை ஐந்து மணிக்கு கூண்டில் நிற்கும் இந்த இளைஞனுக்கு அப்படி என்ன அவசர வேலை? அதுவும் கையில் கத்தியுடன்! கத்தியி லிருந்த ரேகைகள் பதிவு செய்யப் பட்டிருக்கின்றன. ரேகைப்பதிவுப் படத்திலுள்ள ரேகைகள் அழகப்பனின் வலது கை ரேகைகளுடன் ஒத்து வரு கின்றன. (ரேகைப் பதிவுப் படத்தை எல்லோருக்கும் காட்டு கிறார்) கத்தியில் ரத்தம் தோய்ந் திருக்கிறது. (கத்தியை எல் லோரும் பார்வை யிடுகின்றனர்) அழகப்பனைப் பின் தொடர்ந்த மற்றொரு ஹோட்டல் சிப்பந்தி 'கொலை கொலை' என்று கூச்ச லிடவே அவன் கையும் மெய்யுமாய்ப் பிடி பட்டான். அழகப்பன் பிடி படும் போது இருந்த காட்சி இதுதான். ஹோட்டல் முத லாளி நாற்காலியின் முன் அலங்கோலமாக முகங் குப்புற விழுந்து கிடந்தார், அவர் வாயில் துணி. அவரைச் சுற்றிலும் இரத்த வெள்ளம். அழகப்பன் கையி லிருந்த கத்தியில் இரத்தம் தோய்ந்திருந்தது. முதலாளியின் மேஜை டிராயர் திறந்து கிடந் தது. சில ரூபாய் நோட்டுகள் ஆங்காங்கு சிதறிக் கிடந்தன. அழ கப்பன் அவர் உடலைப் பற்றிய வண்ணம் அருகில் வெறிப் பிடித் தவன் போல் மிரள மிரள விழித்த வண்ணம் அமர்ந் திருந்தான்.

அவன் உடலிலும் உடையிலும் ஆங்காங்கு இரத்தக் கறை பிடித்திருந்தது. அவன் சட்டைப் பைக்குள்ளிருந்து இரண்டு நூறு ரூபாய் நோட்டுகள் கைப் பற்றப் பட்டிருக்கின்றன. அழகப்பன் முதலாளியைக் கொலை செய்ய வேண்டிய 'நோக்கம்' (Motive) இருக்கிறது. வேண்டியது இருக்கிறது அனுதையாய் அலைந்த அழகப்பனை சில நாட்களுக்கு முன் தமது ஹோட்டலில் வேலைக்கு அமர்த்தி யிருந்தார் முதலாளி. சம்பவ தினத்திற்கு முந்தின நாள் மாலை, ஹோட்டலுக்கு சிற்றுண்டி அருந்த வந்த தம்பதிகளுடன் அழகப்பன் தகராறு செய்வதைக் கண்ட முதலாளி, அவனைக் கூப்பிட்டுக் கண்டித் திருக்கிறார். மேலும் அன்றிரவு விற்பனைக்காக வைக்கப் பட்டிருந்த பலகாரத்தைத் திருடித் தின்றதாக அவனை பலமாகத் திட்டியதுடன் நன்ருய் அடித்து மிருக்கிறார். எல்லா வற்றிற்கும் மேலாக பண ஆசை இந்த பயங்கர பாவத்தைச் செய்யத் தூண்டி யிருக்கிறது. வாழைப் பழத்தை விழையாத குரங் கில்லை. பணத்தை விரும்பாத மனிதன் கிடையாது. (கோர்ட்டில் பலத்த சிரிப்பு) குற்றம் சாட்டப் பட்டவன் குற்றத்தை மறுக்கிறான். மறைக்கிறான். ஆனல் சம்பவங்களையும், சாட்சியங்களையும் அலசி ஆராய்ந்ததில், அழகப்பன்தான் இந்தக் கொலையைச் செய்தான் என்பது நிர்ச்சந்தேகமாய் நிரூபிக்கப் பட்டு விட்டது.

அரிது! அரிது! மானிடர் ஆதல் அரிது. அத்தனை அரிதான மானிடப் பிறவியை அழிப்பது, மன்னிக்க முடியாத மா பெரும் குற்றம். அத்தகைய கொடிய குற்றம் செய்பவர்கள் சமூகத்தின் பயங்கர விரோதிகள். அவர்களை விடுவிப்பதோ விடுவிக்க முயல்வதோ மக்களுக்குச் செய்யப் படும் மகத்தான துரோக மாகும். ஆகவே இவனுக்குத் தகுந்த தண்டனை விதிக்குமாறு கேட்டுக் கொண்டு என் வாதத்தை முடித்துக் கொள்கிறேன்.

(வியர்க்க விறு விறுக்க அமர்கிறார். வியர்வையை வழித்தெறிகிறார். அது கோர்ட் சிப்பந்தி மேல் படுகிறது. அவன் முறைக்கிறான்)

நீதிபதி: குற்றம் சாட்டப் பட்டவன் ஏழையா யிருப்பதால் அவனுக்காக வாதாட, வக்கீல் வராகசாமி அய்யர் சர்க்காரால் நியமிக்கப் பட்டிருக்கிறார்.

(வராகசாமி அய்யர் ஆசனத்தை விட்டு எழுந்து அமர்கிறார்)

டிபென்ஸ் தரப்பு வாதம் வருகிற பதின்மூன்றும் தேதி.

(பெருத்த சந்தடியினூடே கோர்ட் கலைகிறது. மாறு வேஷத்திலிருக்கும் அன்பன் தம்பியைப் பரிதாபமாய்ப் பார்த்தவாறு சிந்தாகிரந்தனைய் வெளி யேறுகிறன்)

[திரை]

காட்சி 54.

இடம்: சுந்தரம் பிள்ளை பங்களா.

காலம்: காலை.

பாத்திரங்கள்: சுந்தரம் பிள்ளை சுசீலா.

சுசீ: அப்பா! அத்தான், போனவரைப் பற்றி ஒரு தகவலுமே தெரியலையேப்பா. அவரைப் பார்க்காமே என்னாலே இருக்க முடியலையே.

சுந்; என்னை என்னம்மா செய்யச் சொல்றே? பொறுத் ததே பொறுத்தே. இன்னும் கொஞ்சம் பொறுத்துக்கோ. தம்பி யைத் தேடி அண்ணன் போனான்.....

சோணு: அவரும் அப்படியே போயிடுருரோ என்னவோ?

சுந்: சீ அபசகுனம்! நான் மட்டும் கொஞ்சம் அவசரப் படாமே இருந்திருந்தா?

சோணு: எல்லாம் அப்பவே முடிஞ்சு போயிருக்கும். நடந்ததை நினைச்சு என்ன எசமான் புண்ணியம். போனதை நினைக்கிறவங்க, புத்தி........

[திரை]

காட்சி 55.

இடம்: பம்பாய் வீதி.

காலம்: மாலை.

பாத்திரங்கள்: அன்பன், நஞ்சப்பன், முதலானோர்.

(அன்பன் வீதி வழியாகப் போய்க் கொண்டிருக்கிறன் நஞ்சப்பனும், நாகமணியும் எதிரே காரில் வருகின்றனர்,

நஞ்சப்பன் அன்பனைக் கூர்ந்து கவனித்து அடையாளம் கண்டு கொள்கிருன். அன்பனிடம் வந்ததும் காரை நிறுத்திக் கொள்கிருன்)

நஞ்; (அன்பனிடம்) எக்ஸ்க்யூஸ் மி மிஸ்டர். உங்களைப் பார்த்தால் தமிழர் போலத் தெரிகிறதே!

அன்: (நஞ்சப்பனைத் தெரிந்து கொண்டு) ஆமாம்.

நஞ்: நீங்கள் பம்பாய்க்குப் புதிசு போலே இருக்கு.

அன்: ஆமாம்.

நஞ்: 'மாதுங்கா' வுக்குத்தானே போக வேண்டும்?

அன்: ஆமாம்.

நஞ்: அப்படியென்றல் காரில் ஏறிக் கொள்ளுங்கள். நாங்களும் அங்குதான் போகிருேம்.

அன்: இல்லை. நான் பஸ்ஸிலியே போய் விடுகிறேன்.

நஞ்: பரவாயில்லை நீங்கள் ஒன்றும் வித்தியாஸமாய் நினைக்க வேண்டாம். அந்நிய நாட்டில் வந்திருக்கும் நாமெல்லாம் சகோதரர் போல தமிழர்களுக்கு எங்களால் இயன்ற உதவியைச் செய்வதில் ஒரு தனி ஆனந்தம் காண்கிருேம்.

அன்: (சற்று ஆலோசித்து தனக்குள்) இவன் இருப்பிடத்தைத் தெரிந்து கொள்வதும் நல்லதுதான்.

(காரில் ஏறிக்கொள்கிருன்)

(காட்சி மாற்றம்) நஞ்சப்பன் பங்களா.

நஞ்: (காரை நிறுத்தி) வாருங்கள் இதுதான் நம் பங்களா

(உள்ளே பிரவேசிக்கின்றனர்)

நஞ்: ஹஹ்ஹஹ்ஹா! சிலந்தியின் வலையில் மற்ருெரு பூச்சி!!! டேய் அன்பானந்தா! தண்ணீரில் கூட தடம் கண்டு பிடித்திடுவானே இந்த நஞ்சப்பன். என்னையா ஏய்க்க நினைத்தாய்? (வீரப்பனை அழைத்து) விருந்தாளி யாருன்னு பார்த்தீங்களா? நம்ம அன்பானந்தம் பிள்ளை வந்திருங்கள் சும்மா பார்த்துகிட்டு நிற்கிறீங்களேடா, உம் சரியான சாப்பாடு கொடுங்க....

(அன்பனைக் கட்டி வைத்து அடித்து நொறுக்குகின்றனர். பிறகு அவனை ஒரு அறைக்குள் தள்ளி பூட்டி விடுகிறான் நஞ்சப்பன்)

நஞ்; (பொன்னப்பனிடம்) டேய்! ஆசாமியை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்க. ஆள் வெளியேறி விட்டால் ஆபத்து.

(நள்ளிரவில்)

அன்; (ஜன்னல் வழியாகத் தாழ்ந்த குரலில்) பொன்னப்பா? இது என்னப்பா? நீ இங்கேயா இருக்கே?

பொன்; என்ன செய்யறதுங்க? வகுத்துப் பொழப்புக்கு வேறே வழி? இன்லேன்னு இந்த மனசாட்சியத்த மனுஷனோடே இருக்கிறதுக்கு மனசு வருங்களா? வர வர இவன் போகிற போக்குக் எனக்குக் கொஞ்சம் கூடப் பிடிக்கலீங்க.

அன்; நீ இங்கே, கொம்மாளம் போடுகிறாய், உன் குடும்பம் என்னடான்னு ஊரிலே கஞ்சிக்குத் தாளம் போடுது.

பொன்: அப்படிங்களா? என் பசங்க எப்படி யிருக்கானுக? நல்லா யிருக்கானுங்களா?

அன்: அதை ஏன் கேக்கிறே போ? உன் சம்சாரம் அன்னைக்கு ஒரு நாள் சாப்பாட்டுக்கில்லே பிள்ளை குட்டியெல்லாம் பட்டினின்னு வந்து கூப்பாடு போட்டு அழுதாள். மனசு கேட்குதா? பண்ணையத்திலே இருந்துதான் கலம் நெல் கொடுத்தனுப்பிச்சேன்.

பொன்; நீங்க நல்லா இருக்கணுமுங்க.

அன்; இந்த அறைக்குள்ளேயா?

பொன்; இதோ வந்துட்டேனுங்க. என் உசிரே போய்ட்டாலும் சரி.

(கதவைத் திறந்து அன்பனைக் கட்டவிழ்த்து விடுகிறான். இருவரும் மெல்ல நழுவி வெளியேறி விடுகின்றனர். பொன்னப்பன் சாவித்திரி சிறைப்பட்டிருக்கும் இடத்துக்கு அன்பனை அழைத்துக் கொண்டு போகிறான். இருவரும் சாவித்திரியை விடுவித்து கூட்டிக்கொண்டு போகிறார்கள்)

[திரை]

காட்சி 56

இடம்: நஞ்சப்பன் பங்களா,

காலம்: அதிகாலை.

பாத்திரங்கள்: நஞ்சப்பன், நாக மணி.

(இருவரும் அன்பனை அடைத்திருந்த அறை காலியாகக் கிடப்பதைக் கண்டு திடுக்கிடுகிருர்கள்.)

நஞ்: (கோபமாக) மோசம் பண்ணிட்டானே இந்த பொறுக்கிப் பயல் பொன்னப்பன்!

நாக: அஞ்சாம் படை வீர சிகாமணிகள் எல்லாக் கூட்டத்திலேயும் இருப்பானுக போலிருக்கு.

[திரை]

காட்சி 57.

இடம்: ஆனந்த பவனில் அன்பன் தங்கி யிருக்கும் அறை.

காலம்: காலை.

பாத்திரங்கள்: அன்பன், சாவித்திரி, பொன்னப்பன்.

(சாவித்திரி சித்தப் பிரமையில் புலம்பிக் கொண்டிருக்கிருள்)

பொன்: அந்தப் படு பாவி நஞ்சப்பன், 'நீ என் இஷ்டத்துக்கு இணங்கிறியா? அல்லது குழந்தையைக் கொல்லட்டுமா?' ன்னு கேட்டான்.

அன்: யாரிடம்? உன்னிடமா?

பொன்: இல்லீங்க. சாவித்திரி அம்மாகிட்டே.

அன்: அயோக்கிய சிகாமணி, அப்படியா சொன்னுன்? அப்புறம்?

பொன்: இந்த அம்மா, 'குழந்தையை வேணும்னு எடுத்துக்கோ. என் கிட்டே மாத்திரம் நெருங்காதேன்' னுட்டாங்க. குழந்தை போனதிலே இருந்து இந்த மாதிரி ஆய்ட்டாங்க.

அன்: 'உத்தம பத்தினி' என்பதற்கு உலகுக்கோர் உதாரணம் சாவித்திரி.

பொன்: ஏங்க, இந்த நஞ்சப்பனைப் பிடிச்சி போலீசிலே ஒப்படைச்சா என்னங்க?

அன்: செய்யலாம். ஆனால் இன்னும் ஒரே ஒரு சிக்கல் இருக்கிறது. அதுவும் தீர்ந்துவிட்டால்....

பொன்: என்னங்க அது?

அன்: அதெல்லாம் அப்புறம் தெரியும்.

(தெருவில் ஒருவன் செய்தி பேப்பர் விற்றுக் கொண்டு போகிறான்)

போய் ஒரு பேப்பர் வாங்கிக் கொண்டு வா.

(பொன்னப்பன் பேப்பர் வாங்கி வருகிறான்)

அன்: (பேப்பரைப் படிக்கிறான்)

'ஹோட்டல் முதலாளி கொலை வழக்கு'

'பிராஸிக்யூஷன் தரப்பு வாதங்கள் முடிவடைந்தன'

டிபென்ஸ் விசாரணை 13ம் தேதி ஒத்தி வைப்பு.

போலீஸ் விளம்பரம்

'சில தினங்களுக்கு முன் நகருக்குப் புறம்பேயுள்ள வெளியில், ஓர் அனாதைக் குழந்தை கண்டுபிடிக்கப்பட்டு, தற்சமயம் போலீஸார் கண்காணிப்பில் இருந்து வருகிறது. அதற்கு உரிமை உள்ளவர்கள் தக்க ருசுவுடன் இலாக்கா சர்க்கிள் இன்ஸ்பெக்டருக்கு விண்ணப்பித்துக் கொள்ள வேண்டியது.'

அன்: பொன்னப்பா. ஒரு வேளை அந்தக் குழந்தை....?

பொன்: நம்ம கொழந்தையாத்தான் இருக்கணுமுங்க.

அன்: நீ அதைப் பார்த்திருக்கிறியா?

பொன்: ஓ! நெத்தியிலே ஒரு காயவடு இருக்குமுங்க, இடது கைப் பெரு விரலிலே ஒரு பெரிய மச்சம் கூட இருக்குமுங்க. இளையவரை அப்படியே உறிச்சு வைச்சாப் போல இருக்குமுங்க.

அன்: அப்படின்னு வா ஸ்டேஷனுக்குப் போகலாம்.

(போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் குழந்தையைப் பெற்றுக் கொண்டுதிரும்புகின்றனர். சாவித்திரி குழந்தையைக் கண்டதும் சுய உணர்வு அடைகிருள். அருமை மகனை உச்சி முகர்ந்து உள்ளம் பூரித்துப் புளகாங்கிதம அடைந்து போகிருள்)

சாவி: அவரைப் பார்த்திங்களா?

அன்: (சற்று ஆலோசித்து) அவன் இப்பொழுது இருக்கிற இடம் எனக்கு ஒன்றும் சரியாய்த் தெரிய வில்லை யம்மா ஆனல் கூடிய சீக்கிரம் அவன் வந்து விடுவான்.

சாவி: அப்படியா?

அன்: நீ குழந்தையை எடுத்துக் கொண்டு பொன்னப்பனேடு உடனே ஊர் போய்ச் சேர்ந்து விடம்மா?

சாவி: அவர் இல்லாமலா?

அன்: நீ இனியும் இங்கு தாமதிப்பது சரியல்ல, அப்புறம் ஆபத்து அதிகமாகி விடும்.

சாவி: இத்தனை கஷ்டப் பட்டும் கூட ஒரு முறையாவது அவர் முகத்தைப் பார்க்காமலா திரும்புவது?

அன்: உன் நன்மைக் காகத்தா னம்மா சொல்கிறேன். உன் புருஷனை உன்னிடம் சேர்ப்பிக்க வேண்டியது என் பொறுப்பு. சரிதானே?

அன்: (பொன்னனைத் தனிமையில் அழைத்து) பொன்னப்பா, சாவித்திரியைப் பத்திரமாக அழைத்துக் கொண்டு போ. இந்தா செலவுக்குப் பணம். (பணம் கொடுக்கிருன்) ஆனல் அழகனைப் பற்றி ஒரு வார்த்தை கூட அவளிடம் உளறிவிடாதே! ஜாக்ரதை.

(அன்பன் அவர்களை ரயிலேற்றி விட்டுத் திரும்புகிருன்)

[*திரை*]

காட்சி 58.

இடம்: நீதி மன்றம்.

காலம்: காலை.

பாத்திரங்கள்: நீதிபதி, வக்கீல்கள், அழகன். அன்பன்,

நீதிபதி: அடுத்தது ஹோட்டல் முதலாளி கொலை கேஸ்.

(அழகன் கூண்டில் கொண்டு வந்து நிறுத்தப் படுகிருன்)

(சப்-இன்ஸ்பெக்டரும் கான்ஸ்டபிள் காத்தவராயனும் பிரவேசிக் கின்றனர்)

கான்ஸ்: (சப்-இன்ஸ் பெக்டரிடம் தாழ்ந்த குரலில்) ஏங்க எசமான்! இண்ணைக்குத் தானுங்களே அந்தக் கொலை கேஸ் ஈரங்கி?

சப்-இன்ஸ்: ஈரங்கியாம் ஈரங்கி! பீரங்கி இல்லாமே! 'Hearing' அப்படி என்கிற இங்கிலீஷ் வார்த்தையை ஏன்டா இப்படி நீ வேறே கொலை பண்றே? சரி சரி சத்தங் காட்டாமே வா.

நீதிபதி: (அழகனிடம்) டிபன்ஸ் தரப்பு சாட்சி?

அழ: என் மனச்சாட்சியும், தெய்வமும்தான் நான் நிரபராதி என்பதற்கு சாட்சிகள்.

பப்-பிரா: (எழுந்து) அம்பலத்துக்கு வர முடியாத சாட்சிகள்.

நீதி: மனித சாட்சிகள்?

அழ: இல்லை.

நீதி: சரி. டிபென்ஸ் கவுன்ஸல் தமது வாதத்தைத் தொடங்கலாம்.

(வக்கீல் வராகசாமி அய்யர் எழுந்து நின்று அழகன் சார்பில் வாதாடுகிருர்)

வரா: மை லார்டு, அண்டு ஜெண்டில் மென் ஆப் தி ஜூரி!

கூண்டில் நிற்கும் இளைஞன்தான் இந்தக் கொலையைச் செய்ததாக வாதாடுகிருர் என் கற்றறிந்த நண்பர், கண்ணுரக் கண்டதும் பொய், காதாரக் கேட்டதும் பொய், தீர விசாரித் தறிவதே மெய். கண்ணுல் கண்டதாகச் சிலர் சொல்வதைக்

கொண்டு மாத்திரம் தண்டனை விதித்து விடுவதானல், விசாரித்தறிய நீதி மன்றம் தேவை யில்லை. வழக்கும் வேண்டியதில்லை. வாதாட வக்கில்களும், கையாள சட்டமும் அவசிய மில்லை. இறந்து போனவர் குத்தப் பட்டதை யாரும் நேரில் பார்க்கவில்லை ....சம்பவம் நடந்த தினத்தன்று காலை சுமார் 5-மணிக்கு முதலாளியின் அறையில் என்று மில்லாதபடி அரவம் கேட்கவே, காலைச் சமையலுக்காக கறிகாய் நறுக்கிக் கொண்டிருந்த அழகப்பன், ஆர்வத்தின் காரணமாக அங்கு சென்றிருக்கிறன். மறதியாகக் கத்தியையும் கையோடு கொண்டு போய் இருக்கிறன். அறைக் கதவு திறந்த படியே இருந் திருக்கிறது. அறையில் இருந்த 'லைட்' அணைக்கப் பட்டிருக்கிறது. விளக்கைப் போட வாச லருகில் சென்ற அழகப்பன் தன்னை யாரோ இடித்துக்கொண்டு ஓடு வதை உணர்ந் திருக்கிறன். இருட்டில் அவனை இன்னன் என்று அடையாளம் கண்டு கொள்ள முடிய வில்லை அழகப்பனல்- பரபரப்பாக விளக்கைப் போட்டுப் பார்த்த பொழுது யாரும் கண்ணில் படவில்லை, நடந் திருப்பதை அறியாமல் முகங் குப்புற விழுந்து கிடந்த முதலாளியைத் தூக்க முயற்சித் திருக்கிறன். அவர் மார்புக்கடியில் தேங்கி யிருந்த இரத்தத்தைக் கண்ட பிறகு தான் அவர் குத்தப் பட்டிருந்ததை உணர்ந்தான். மற்றவர்களை உதவிக் கழைக்கும் முன் காரியம் மிஞ்சி விட்டது. அவனைப் பின் தொடர்ந்து வந்த மற்ருெரு ஹோட்டல் சிப்பந்தி 'கொலை கொலை' என்று கூச்ச லிட்டு விடவே அளவு கடந்த அதிர்ச்சியால் தன் நினைவையும் நிலையையும் இழந்திருந்த நிரபராதியான அழகப்பன் அந்த நிர்ப்பந்தமான, நிர்ப்பாக்கியமான நிலையில் பிடிபட்டான். நடந்தது இதுதான் ......

பப்-பீரா; (குறுக்கிட்டு) ஆனல் நம்பத் தகாதது. விந்தையான பேச்சு. விநோதமான விவாதம். ஆனல் மகத்தான தோல்வி.

வராகசாமி; நான் இன்னும் என் வாதத்தை முடிக்கவில்லை. அதற்குள் முந்திக் கொள்கிறர் என் நண்பர் முந்தி...

நீதிபதி; Alright, Proceed.

வராகசாமி: (தொடர்ந்து) நிரபராதி ஒருவனின் உயிர் இன்று நீதி மன்றத்தில் ஊசலாடுகிறது, அவன் வாழ்வும் சாவும் உங்கள் கையில்தான் இருக்கிறது. சட்டம் சாதாரண மனிதனல் வகுக்கப் பட்டது. ஆகையால் அதில் (Perfection) முழுமையை எதிர் பார்க்க இயலாதுதான். சட்டம் எப்படி இருந்தாலும் அதன் வெற்றி தோல்வி பெரும்பாலும் அதை அமுல் நடத்துகிறவர்களையே பொருத்திருக்கிறது இப்பொழுது உங்கள் பொறுப்பு மகத்தானது. உண்மைக் கொலையாளி எங்கோ ஒளிந்து கொண்டிருக்கிறன், இதோ இந்த இளைஞன் குற்ற மற்றவன்.

'பழியோரிடம், பாவ மோரிடம்' என்பது போல் சமய, சம்பவ, சந்தர்ப்ப. சாட்சியங்களின் சாதகத்தால் இன்று கூண்டிலே குமுறுகிருன் குறற்வாளியாக! குற்றவாளி சட்டத்தின் பிடியில் இருந்து தப்பித்துக் கொண்டு விட்டால் கூட அத்தனை பெரிய தோஷ மில்லை. ஆனுல் நிரபராதி ஒருவன் தண்டிக்கப் பட்டால் அது நீதிக்கு இழைக்கப் படும் துரோகம் மட்டு மல்ல. ஈஸ்வரனுக்கும் எதிரான பாபம். ஆகவே மனச் சாட்சிக்கு மாறு படாமல் ஈஸ்வர கோபத்துக்கும் இலக் காகாமல் இரக்க சிந்தை யுடன் இவனுக்கு நீதி வழங்கப் பிரார்த்திக்கிறேன்.

(அமருகிருர்)

பந்-பிரா; (எழுந்து) யூவர் ஆனர்! போர்க் களத்தில் ஒப் பாரி வைக்கிருர். நீதி மன்றத்தில் பஜ கோவிந்தம் பாடுகிருர் என் நண்பர். கடவுளைக் காட்டி ஜூரிகளின் மனதை அவர் கலைப் யதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

(அமருகிருர்)

நீதி: Yes, I agree with the Prosecutor.

வராக; (எழுந்து) எஸ். மைலார்டு, மன்னிக்க வேண்டும்.

(மீண்டும அமர்கிருர்)

நீதி: இந்த வழக்குக்கான எவிடென்ஸை 'Sum up' செய்யும் முன் ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். நீதி புனித மானது. ஆனுல் சட்டத்துக்குக் கட்டுப் பட்டது. சட்டத் தால் வரையறுக்கப் பட்டது. சட்டத்துக்குப் புறம்பாக நீதி தனித் தியங்க இயலாது. சட்டத்தின் பிரதிநிதிகளாக நியமிக்கப் பட் டிருக்கும் எங்களுக்கு எப்படி துவேஷம், பார பட்சம், சுய நலம் ஆகியவை கூடாதோ, அப்படியே தயையும் தாட்சண்யமும் கூடாது. நீதிநிர்த்தாட்சண்யமாய் வழங்கப் பட வேண்டியது. இனி இந்தக் கேசுக்கான ருசுக்களை ஜூரிகளுக்குத் தெளிவு படுத்துகிறேன். (ஜூரிகளை நோக்கி) ஜெண்டில்மென் ஆப் தி ஜூரி! இரு தரப்பு வாதங்களையும் கேட்டீர்கள். ஏற்கனவே எடுத்துச் சொல்லப்பட்ட விஷயங்களுடன் இவற்றையும் மனதில் இருத்தி நன்ருய் அலசி ஆராய்ந்து உங்கள் முடிவைச் சொல் லுங்கள்........

... அழகப்பன் அந்த நேரத்தில் என்று மில்லாதபடி முதலாளி அறைக்குள் போனது ஏன்? ஆர்வத்தினுலா? அல்லது கெட்ட நோக்கத்துடனு? கத்தியுடன் போக வேண்டிய காரணம்/ தனி மையில் உள்ளே நுழைந்தது எதற்காக? கொலையை அறிந்தும் கூச்சலிடாதது மனிதத் தன்மைக்கு மாறுபட்ட செய்கையா? கத்தியில் எப்படி ரத்தம் தோய்ந்தது? அழகப்பன் சட்டைப் பைக்குள் பணம் எங்கே யிருந்து வந்தது? காணுமல் போன

பாக்கி பணம் என்ன ஆயிற்று? உங்கள் அபிப்பிராயத்தை அடுத்த வாய்தா வன்று தெரியப் படுத்துங்கள். தீர்ப்பு வருகிற சனிக்கிழமை. இருபத் தொன்றும் தேதி.

வரா: I beg your pardon Your Honour?

நீதி: Twenty First!

(கோர்ட் கலைகிறது)

[*திரை*]

காட்சி 59.

இடம்: அழகாபுரி ஆற்றங்கரை பங்களா.

காலம்: நள்ளிரவு.

பாத்திரங்கள்: சாவித்திரி தங்கம்மா.

(பலத்த புயல் காற்று வீசுகிறது. வானத்தில் திரண்டிருந்த கார் மேகங்கள் கனத்த மழையை வருஷிக்கின்றன. இடியும் மின்னலும் கொளுத்துகிறது. குழந்தை தூளியில் தூங்கிக்கொண் டிருக்கிருன். சாவித்திரி பயங்கரக் கனவு கண்டு விழித்துக் கொள்கிருள்)

சாவி; (படுக்கையை விட்டெழுந்து) நல்ல வேளை, எல்லாம் கனவுதானே?

தங்கம்மா: (பரபரப்புடன்) என்னம்மா?

சாவி; பயங்கரமான கனவு.

தங்; சொர்ப்பனம்தானே? மனக் குழப்பம் அம்மா.

சாவி; என் வலது கண் துடிக்கிறதே!

தங்: பெல வீனம்.

சாவி: (காற்றில் விழுந்து கிடந்த அழகன் படத்தைக் கண்டு) ஆ இது என்ன அப சகுனம்?

தங்: ஒண்ணு மில்லே யம்மா. ஆணி பல மில்லே. அவ்வளவு தான். மனசு தானுங்களே எல்லாத்துக்கும் காரணம். உடைஞ்சு போன உள்ளத்துக்கு உறுதி இருக்கா தம்மா.

சாவி: நீ என்ன சொன்னலும் என் மனசு ஆறுதலடைய லேயே தங்கம்மா, அவருக்கு ஏதோ ஆபத்து! மூத்தவர் அண்

ணைக்கு அப்படிச் சொன்னது கூட எனக்கு இப்போதான் புரியுது.

தங். அதெல்லாம் ஒண்ணும் வராதம்மா. சகுனம் சாஸ்திர மெல்லாம் 'குருவி உட்கார பனம் பழம் விழுந்த'தைப் போல அபூர்வமாய்த்தான் பலிக்குமே தவிர உண்மைக்கு ஒருபோதும் ஒவ்வா தம்மா. நீங்க உடம்பை அலட்டிக்காமல் பேசாமே தூங் குங்க. தூக்கம் துக்கத்தை நீக்கும்.

சாவி: என்ன மோம்மா! நான் சுமங்கிலியாகவே சாகணும். அது தான் எனக்கு இருக்கிற ஒரே ஆசை.

(சாவித்திரி படுத்துக் கொள்கிருள்.)

தங்கம்மா: நீங்க ஒண்ணு. சின்ன ஐயா சீக்கிரம் வருவார்.... அம்மா கிட்டே அன்பாய்ப் பேசுவார்..... அப்படியே அள்ளி அணைச்சிக்குவார்... அப்புறம்.... கன்னத்திலே....

சாவி: (வாடிய வதனத்திலும் வெட்கமும், மகிழ்ச்சியும் தோன்ற) போடி குறும்புக்காரி.

[திரை]

காட்சி 60.

இடம்: நஞ்சப்பன் பங்களா.
காலம்: இரவு.
பாத்திரங்கள்: நஞ்சப்பன், நாக மணி.

(நஞ்சப்பன் செய்தித் தாளைப் படித்துக் கொண் டிருக் கிறுன். நாக மணி அவன் அருகில் உட்கார்ந் திருக்கிருள்)

நஞ்: ஹஹ்ஹஹ்ஹா! சபாஷ்! அழகனுக்கு விரோதமாய் எவிடன்ஸ் 'ஸ்ட்ராங்' ஆய் அமைஞ்சு போச்சு.

நாக: அப்படின்னு தூக்கு தண்டனை நிச்சயம்ன்னு சொல் லுங்க.

நஞ்: சந்தேகம் வேறேயா? நான் மட்டும் அந்த மாதிரி அவன் பாக்கெட்டிலே இரண்டு நோட்டைத் திணிச் சுட்டு வரலேன்னு Case fail ஆயிடும். நமக்கும் ஆபத்து வந்து விடும்.

நாக: இந்த சமாச்சார மெலலாம் இந்தத் தடிப் பசங்க யாருக்காவது தெரியுமோ?

நஞ்: ஊம் ஹூம்! ஒருத்தன் கிட்டேயாவது மூச்சு விட்டால் போச்சு.

(வீரப்பன் பிரவேசம்)

நஞ்: ஏது அகால வேளையிலே இப்படி?

வீர: அர்ஜண்டா ஒரு ஹண்ட்ரட் ருப்பீஸ் வேணும்........

நஞ்: அம்மாடி யோவ்! நூறு பைசாவுக்கு வழியைக் காணோம். நூறு ரூபாய்க்கு எங்கே யப்பா போறது?

வீர: நீ அப்படிச் சொல்லக்கூடாது. என் wifeக்கு ரொம்ப 'சீரியஸ்' ஆய் இருக்குதாம். தந்தி வந்திருக்கு.

நஞ்: Sorry ப்பா. எல்லாம் விதி போலே நடக்கும். விதியை மாத்த முடியுமோ? தனக்கே தாளம் போடற போது நான் தானம் எப்படி யப்பா பண்றது?

வீர: (கோபமாய்) நான் உனக்கு செஞ் சிருக்கிற ஒத்தாசைக்கு இந்த மாதிரி ஆபத்திலே கூடவா கை விரிக்கிறாய்? அழகாபுரி பண்ணையார் போய் இப்பதான் ஆதனூர் மைனர் மாட்டிக்கிட்டு இருக்கிறாரே. அவரு கிட்டே இருந்து எவ்வளவு பணம் கறக்கிறீங்க நீங்க இரண்டு பேரும்?

நாக: (குறுக்கிட்டு) Shut up You Nonsense. (நஞ்சப்பனிடம்) இந்த உதவாக்கரைப் பசங்களை யெல்லாம் இன்னும் எதுக்காகக் கட்டி மாரடிக்கிறீங்க?

நஞ்: எல்லோரும் போய்ட்டாங்க. இவன் ஒருத்தன்தான் பாக்கி. வீரப்பா இனிமே நீயும் வேறே பொழப்பு நடக்கிற இடமாய்ப் பார்த்துப் போயிடு.

வீர: ஓ! அவ்வளவு தூரத்துக்கு ஆயிடுத்தா? ஆகாதா பின்னே? நான் போறேம்ப்பா போறேன். இந்த மடம் இல்லேன்னா சந்தை மடம்.

நஞ்: சரிதான் போயேண்டா. உன்னை யார் வேண்டாம்னு கையை எட்டிப் பிடிக்கிறது?

(வீரப்பன் வீராவேசமாக வெளியேறுகிறான்)

[திரை]

காட்சி 61.

இடம்: நீதி மன்றம்,

காலம்: காலை.

பாத்திரங்கள்: நீதிபதி, அன்பன், அழகன் முதலானோர்.

நீதி: ஜூரிகளின் அபிப்பிராயம்?

ஜூரிகளில் ஒருவர்: அழகப்பன் குற்றவாளி என்று எல்லோரும் ஏகோபித்து முடிவு செய் திருக்கிறோம்.

(மாறு வேஷத்தி லிருந்த அன்பன் ஓடோடியும் வருகிறான்.)

அன்: யூவர் ஆனர்! சற்றுப் பொறுங்கள். இந்த இளைஞன் குற்ற மற்றவன். இந்த பயங்கரப் படு கொலையைச் செய்தது இந்தப் பாவி தான். என்னைக் கைது செய்யுங்கள். இவன் நிரபராதி............!

நீதிபதி: (ஆச்சரியம் மேலிட) என்ன? நீதான் கொலையாளியா? யாரப்பா நீ?

அன்: கனம் நீதிபதியவர்களே, என் பெயர் கருணாகரன். வேலை தேடி வேற்றூர் வந்தேன். வந்த இடத்தில் இந்த மகா பாதகத்தைச் செய்யத் துணிந்து விட்டேன்,

நீதி: நீதான் கொலை செய்தாய் என்பதற்கு என்ன ருசு?

அன்: குற்றவாளி யாகிய நானே குற்றத்தை ஒப்புக் கொள்கிறேன்.

நீதி: அதனால் மட்டும் நீதான் குற்றவாளி என்று எப்படி ஒப்புக் கொள்ள முடியும்?

அன்: யூவர் ஆனர், விபரமாய் விளங்கச் சொல்கிறேன் கேளுங்கள். நான் சென்ற சில தினங்களாக ஆனந்த பவன் 'லாட்ஜிங்'கில் ஒரு அறை வாடகைக்கு எடுத்துத் தங்கியிருக்கிறேன், வேலை தேடி அலைந்தது தான் மிச்சம். என் கையிலிருந்த பணம் அத்தனையும் தீர்ந்து விட்டது. வேலையோ கிடைத்த பாடில்லை. பார்த்தேன். திருடுவதைத் தவிர வேறு வழி யில்லை. சம்பவ தினத் தன்று காலை ஐந்து மணி சுமாருக்கு, காலைக் கடன்களை முடிப்பதற்காக நான் மாடியில் இருந்து

இறங்கி வந்த பொழுது முதலாளி தமது அறையில் மேஜை டிராயரைத் திறந்து பணத்தை எண்ணிக் கொண் டிருப்பதைக் கண்டேன். பணஆசை என்னை உந்தித் தள்ளியது. சுற்றும் முற்றும் பார்த்தேன், யாரும் அருகில் இல்லை. மெல்ல அடிமேல் அடி வைத்து அறைக்குள் நுழைந்தேன், நான் அவரை அணுகுவதைக் கண்ட முதலாளி அலற வாயெடுத்தார். அவர் வாயில் துணியை அடைத்து விட்டு, விளக்கையும் அணைத்து விட்டேன். அகப் பட்ட பணத்தைச் சுருட்டிக் கொண்டேன். நான் அத்துடன் திருப்தியடைந்து விட வில்லை. ஏற்கனவே என்னை அவர் அடையாளம் கண்டு கொண்ட படியால், எங்கே போலீசுக்கு என் திருட்டைத் தெரிவித்து எனக்கு தண்டனை வாங்கிக் கொடுத்து விடுவாரோ என்று அஞ்சி, என் திருட்டை மறைக்க ஒரு கொலை செய்தேன், அவரைக் குத்திய கத்தி இதோ! (இரத்தம் தோய்ந்த கத்தி ஒன்றை பைக்குள் இருந்து எடுத்து கோர்ட்டில் ஆஜர்ப்படுத்துகிறான்) கத்தியில் என் பெயர் பொறிக்கப் பட் டிருப்பதைப் பாருங்கள். இதோ நான் அன்று அணிந் திருந்த உடைகள். (துணிகளை ஆஜர்ப் படுத்துகிறான்) அதி லிருக்கும் கோர ரத்தக் கரைகளை கவனியுங்கள். முதலாளியைக் குத்தி வீழ்த்தியதும் சற்று தொலவில் (அழகனைக் காட்டி) இந்த இளைஞன் அறையை நோக்கி வந்து கொண் டிருந்ததைக் கண்டேன். ஆனல் முதலாளி அறையி லிருந்த விளக்கு அணைக்கப் பட் டிருந்ததால் அவன் என்னைக் கண்டு கொள்ள வில்லை. அவசரத்தில் அகப் பட்ட நோட்டுகளைச் சுருட்டிக் கொண்டு ஓட்டம் பிடித்தேன். அந்த நிலையிலும் எனக்கு ஒரு யோசனை தோன்றியது. அவனைக் குற்றவாளி யாக்கி விட்டால் நான் தப்பித்துக் கொள்வது எளிதா யிருக்கும் என் றெண்ணி என் கையி லிருந்த நோட்டுகளில் ஒன் றிரண்டை அவன் சட்டைப் பைக்குள் திணித்து விட்டு வேகமாய் வெளியே ஓடி வந்து விட்டேன். இதுதான் நடந்தது.

நீதி: (குறுக்கிட்டு) ஆச்சரியம்!

அன்; ஆனல் அத்தனையும் உண்மை. (சட்டைப் பைக்குள் கை விட்டு ஒரு நோட்டுக் கத்தையையும் சில்லரைகளையும் எடுத்து) இதோ நான் திருடிய பணம், இந்த பணத்துக்காகவே இந்த பயங்கர பாவத்தைச் செய்யத் துணிந்தேன்- பாவத்தால் சம்பாதித்த இந்தப் பணம் எனக்கு வேண்டாம்.

(பணத்தைக் கோர்ட்டாரிடம் கொடுக்கிறான்)

பப்-பிரா; (பணத்தை எண்ணிப் பார்த்து) ரூபாய் ஆயிரத்து முன்னூற் றிருபத் தொன்பது.

வராகசாமி: (உற்சாகத்துடன்) ஆம்! முதலாளியின் கணக்குப் புஸ்தகத்தின்படி, காணமல் போன பணத்தில் அழகப்

பன் பாக்கெட்டில் இருந்த இருநூறு ரூபாய் போக பாக்கி சரியாய் இருக்கிறது.

(பணம் எண்ணப்பட்டு கணக்குப் புத்தகத்துடன் ஒத்திடப் படுகிறது)

பப்-பிரா: (ஏமாற்றத்துடன்) பணத்துக்காகப் படு கொலை செய்தவன்! குற்றத்தை ஒப்புக்கொள்வது; அதிலும் நீதி மன்றத்தில் தெரிவிப்பது. உலகத்திலேயே இல்லாத புதுமையாய்த்தான் இருக்கிறது.

அன்: ஐயா! நான் பரம்பரைத் திருட னல்ல. பழக்கமான கொலைகாரனுமல்ல சமயம் என்னைத் திருடனுக்கியது சந்தர்ப்பம் என்னைக் கொலைகாரனுக்கி விட்டது. முதலில் தண்டனைக்குத் தப்பிவிட எண்ணினேன். என் முயற்சியில் ஓரளவு வெற்றியும் பெற்றேன். ஆனுல் நிரபராதியான ஒருவன் அநியாயமாய்த் தண்டிக்கப் படப் போவதைக் கண்டதும் என் மனச் சாட்சி என்னை சித்ர வதை செய்ய ஆரம்பித்தது. 'உன் பாதகச் செயலுக்காக குற்ற மற்ற ஏழை இளைஞன் ஒருவன் தண்டிக்கப் படப்போவதைப் பார்த்தும் நீ சும்மாவா இருக்கிருய்? ஓடு! அவன் உயிரைக் காப்பாற்று. ஒரு உயிரைக் கொன்ற குற்றத்துக்குப் பிராயச்சித்தமாக மரணத்துக்கும் ஜீவனுக்கு மிடையே ஊசலாடும் மற்ெருரு குற்ற மற்ற உயிரை யாவது தப்புவிக்க ஓடு' என்று என் அந்தராத்மா எனக்கு அறிவுறுத்தியது. மனச்சாட்சியின் வாதையை என்னுல் சகிக்க முடியவில்லை. எனக்கும் என் அந்தராத்மாவுக்கு மிடையே நடந்த போராட்டத்தில், முடிவில் அந்தராத்மாவே வெற்றி பெற்றது. இம்மையில் இரண்டு உயிர்களின் அழிவுக்குக் காரண மாகி, மறுமையில் ஈஸ்வர கோபத்துக்கும் இலக்காவதை விட, நான் செய்த பாபத்துக்குப் பரிகாரமாக நிரபராதியை மீட்டு தண்டனையை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டு மறுமையில் பகவானின் இரக்கத்துக்குப் பாத்திரமாவதே மேல் என்ற முடிவுக்கு வந்து விட்டேன். நிரபராதி யாகிய இவனை விடுதலை செய்யுங்கள். என்னைத் தண்டியுங்கள்.

(சட்டப் புத்தகங்கள் புரட்டப் படுகின்றன)

நீதி: (நீண்டநேர ஆலோசனைக்குப் பிறகு) நிரபராதியான அழகப்பனை விடுதலை செய்ய உத்தர விடுகிறேன். கருணுகரனைக் கைது செய்யவும் உத்தர விடுகிறேன். இந்த கேஸ் சம்மந்தமான புனர் விசாரணையை ஒத்தி வைக்கிறேன்.

(கோர்ட் கலைகிறது)

[திரை]

காட்சி 62.

இடம்: சிறைக் கூடம்.
காலம்: மாலை.
பாத்திரங்கள்: அன்பன், அழகன்.

(அழகன் அன்பனைக் காண வருகிறான்)

அழ: (அன்பனை அடையாளம் கண்டு கொள்ளாமலே) அய்யா கருணாகரரே! சமயத்தில் என் உயிரைக் காப்பாற்றிய தங்களுக்கு இந்த ஏழை என்ன கைம்மாறு செய்வேன்? தாங்கள் செய்த சிறு தவறுகளையும், ஒப்புக்கொள்ள விரும்பாத மனிதர் நிறைந்த இந்த மாநிலத்தில், அபூர்வமாகத் தாங்கள், கொடிய தண்டனையையும் பொருட் படுத்தாமல் சாவுக்கும் வாழ்வுக்கு மிடையே போராடிக் கொண் டிருந்த நிரபராதியான எனக்கு உயிர்ப் பிச்சை அளித்தீர்கள். உங்கள் தியாகம் மகா மகத்தானது. மதிப்பிட முடியாதது. உங்களை என்னென்று அழைப்பேன்? நீங்கள் மாபெரும் தியாகி. என் அண்ணாவைப் போன்றவர்.

அன்: தம்பி அழகா, வேண்டுமானால் என்னை '**அண்ணா**' வென்று அன்பு ததும்ப அழை. அதுவே போதும்.

அழ: ஆம். நீங்களும் என் அண்ணாவைப் போன்றவர் தான். அவர் என்னை இந்த நிலையில் பார்த் திருந்தால் தன் உயிரைக் கொடுத்தாவது என்னைக் காப்பாற்றித்தான் இருப்பார். அவர் சொல்லை அசட்டை செய்ததற்கு நான் அளவு கடந்து அனு பவித்து விட்டேன். அவரைப் போன்ற தியாகிதான் தாங்களும். தங்களை அண்ணா வென்று தான் அழைக்க வேண்டும் **அண்ணா! அண்ணா!!**

(அழகன் அன்பனைக் கட்டி யணைக்கிறான். இருவர் கண்களிலும் கண்ணீர் உதிருகிறது. ஆனால் கடைசி வரை அழகன் அன்பனை அடையாளம் கண்டு கொள்ள வில்லை)

அன்: தம்பி, உடனே நேரே உன் சொந்த ஊர் போய்ச் சேர். அதுதான் நீ எனக்குச் செய்ய வேண்டிய கைம் மாறு.

அழ: ஆகட்டும் அண்ணா!

போலீஸ் காரன்: உம் சரி! சரி! போதும் நாழியாகி விட்டது.

(இருவரையும் பிரிக்கிறான்.)

(அழகன் வெறிப் பிடித்தவன் போல் வெளியேறு கிருன். அன்பன் அவன் போன திசையைப் பார்த்த வாறு மௌனமாய்க் கண்ணீர் உகுக்கிருன்)

[திரை]

காட்சி 63.

இடம்: பம்பாய் வீதி.

காலம்: மாலே.

பாத்திரங்கள்: அழகன்.

அழ: (தனக்குள்) அப்பாடா! தலேக்கு வந்தது தலேப் பாகையோடு போயிற்று. இனி அரைக் கணம் கூட இங்கு தாமதிக்கக் கூடாது. அப்பா, அண்ணு. சாவித்திரி, குழந்தை எல்லோரையும் கண்டு களிக்க வேணடும். ஆனுல் வழிச் செலவுக்குப் பணம்............? எப்படியும் உடனே போயாகணும்........... (புறப் படுகிருன்) (சுசீலாவின் ஞாபகம்) ஆனுல் சுசீலா............ களங்க மற்ற கட்டழகி. என் வாழ்வில் குறுக்கிட்ட வைரம். ஒரு தடவை யாவது அவளேப் பார்க்காமல் போகக் கூடாது.

(போகிருன்.)

[திரை.]

காட்சி 64.

இடம்: சுந்தரம் பிள்ளே பங்களா,

காலம்: மாலே மயங்கும் நேரம்.

பாத்திரங்கள்: சுந்தரம் பிள்ளே, சுசீலா, அழகன்,

(சுசீலாவும் சுந்தரம் பிள்ளேயும் ஹாலில் உட்கார்ந்து பேசிக் கொண் டிருக்கின் றனர்.)

சுசீ: (படித்துக் கொண்டிருந்த பேப்பரைக் கீழே வைத்து விட்டு) அப்பா, 'City Murder Case' இல் 'accused'ஐ 'release' பண்ணிட்டாங்களாம்.

சுந்: யாரை அழகப்பனையா?

சுசீ: ஆமாப்பா, யாரோ 'கருணாகரன்'னு ஒருத்தன், தான் தான் கொலை செஞ்சேன்னு 'கோர்ட்'லே (Court) 'சரண்டர்' (Surrender) ஆயிட்டானும்.

சுந்: எவனும் எப்படியும் போறான். நம்ம அழகனும் அன்பனும் எங்கே போனாங்க, என்ன ஆனாங்கன்னு தெரியலையே!

(அழகன் தயங்கித் தயங்கி உள்ளே வருகிறான். சுந்தரம் பிள்ளையைக் கண்டதும் ஓட்ட மெடுக்க ஆரம்பிக்கிறான். வழியில் சோணாசலம் அழகனைத் தடுத்து நிறுத்திக் கூட்டிக் கொண்டு வருகிறான்.)

சுந்: ரொம்ப நல்லா இருக்கப்பா நீ செய்றது!

(அழகன் திடுக்கிடுகிறான்)

அழ: (பயத்துடன்) நான் ஒன்றும் செய்யலீங்களே!

சுந்: ஏம்ப்பா, உங்க அண்ணன் என்னடான்னா உன்னைத் தேடி அலையறான். நீ இப்படித் தறுதலையாய்ச் சுத்திகிட்டு இருக்கியாக்கும்?

(சுசீலா அழகனைப் பார்த்து விட்டு லஜ்ஜையுடன் உள்ளே சென்று விடுகிறாள்)

அழ: (திகைப்பு நீங்கி வியப்பு மேலிட) யார் ஙீங்கள் அண்ணாவா?

சுந்: ஆமா. உங்கள் அண்ணன் அன்பானந்தனைத் தான் சொல்கிறேன். நான் யார் தெரியுமா?

அழ: அதுக் குள்ளே மறந்துடுமா என்ன? நீங்க...வந்து மிஸ்டர் சுந்தரம் பிள்ளை.

சுந்: அடசே! நான் உங்க மாமாப்பா. உங்க அம்மா கூடப் பொறந்தவன். வா.... உட்கார்.

(இருவரும் அமருகின்றனர்)

அழ: அப்படியா மாமா! ஆச்சரியமா யிருக்கே!

சுந்: உங்க அண்ணன் சொன்னதுக் கப்புறம்தான் எனக்கும் தெரிஞ்சுது.

அழ: அண்ணா எங்கே?

சுசீ: உன்னைத் தேடிப் போனவன்தான் இன்னும் திரும்பலே. ஆமா........... கிராமத்திலே இருக்கிற பண்ணையத்தை லட்சணமாய்ப் பார்த்துகிட்டு இருக்கிறதை விட்டுட்டு இப்படிப் பராரியாய் அலையறியாக்கும்?

(அழகன் ஆசனத்தை விட்டு எழுகிறான்)

சுந்: எங்கேயப்பா புறப்படுகிறாய்?

அழ: .அண்ணாவைப் பார்க்க.

சுந்: ரொம்ப புத்திசாலி. சீ! உட்காரு. அண்ணனைத் தேடிப் போகிறாராம் இல்ல. உன்னைத் தேடி அவன், அவனைத் தேடி நீ.... அப்புறம் உங்க இரண்டு பேரையும் தேடி....?

(அழகன் உட்காருகிறான்)

உங்க அப்பாவுக்கு உடம்பு அசௌகரியமா யிருக்குன்னு உங்க அண்ணன் அப்பவே சொன்னான்.

அழ: என்ன?

சுந்: ஆமா. உன்னைக் காணாமே படுத்த படுக்கையா யிருக்கிறாராம்.

அழ: அப்படின்னா நான் உடனே ஊருக்குப் போகிறேன். ஆனால் அண்ணா?

சுந்: அவன் வந்தால் உடனே நான் அனுப்பி வைக்கிறேன். ஒரு வேளை உன்னைத் தேடி அலுத்துப் போய், திரும்பி ஊருக்கே போய்ட்டானோ என்னமோ?

அழ: (சிந்தித்தவாறு) ஆமாம். சுசீலா எங்கே?

(சுசீலா நாணிக் கொண்டு அறையி லிருந்து வெளியே வருகிறாள்)

சுசீ: (சுந்தரம் பிள்ளையிடம்) அப்பா நான் பிறந்ததிலே இருந்து இது வரையிலே நம்ம ஊரையே பார்த்த தில்லை. நானும் அத்தான் கூடப் போகட்டுமாப்பா!

சுந்: நீயும் அழகன் கூடப் போறேங்கிறியாம்மா?

சோணா: ஆமாங்க, அம்மா ஆசைப் படுது. அவரோடே தான் போகட்டுமுங்களே.

சுந்: சரி. சந்தோஷமாய்ப் போய்ட்டு வாம்மா. நான் கூட கூடிய சீக்கிரம் கம்பெனியை 'க்ளோஸ்' பண்ணிட்டு நம்ம ஊரி

லேயே வந்து 'செட்டில்' (settle) பண்ணிடலாம்னு தான் இருக்கேன்.

(கார் ஸ்டேஷனை நோக்கிச் செல்லுகிறது)

(**காட்சி மாற்றம்**) ரயில்வே ஸ்டேஷன்,

சுந்: (ரயில்வே விளம்பரத்தைப் படிக்கிறார்)

'உங்கள் குறைகளை எழுத ஸ்டேஷன் மாஸ்டரிடம் புகார் புஸ்தகம் இருக்கிறது' (சிரித்துக் கொண்டே) அண்ணைக்கு ஒரு நாள் ஏதோ ஒரு புகார் எழுதணும்னு Complaint Book ஐப் போய்க் கேட்டால், 'கொடுக்க முடியாது'ன்னு தகராறு பண்ணிட்டாங்க.

அழ: புகார் புஸ்தகத்தையே தர மறுத்த புகாரை எந்த புகார் புஸ்தகத்திலே எழுதுகிறதோ?

(எல்லோரும் சிரிக்கின்றனர்)

சுந்: ரெயில்வே டிபார்ட் மெண்டிலே அர்த்த மில்லாத விளம்பரத்துக் கெல்லாம் ஒண்ணும் குறைச்ச லில்லை.

(அழகனும் சுசிலாவும் ரயிலில் ஏறிக் கொள்கின்றனர்)

சுந்: (சுசிலாவிடம்) உடம்பை ஜாக்ரதையாய்ப் பார்த்துக் கோம்மா. போன உடனே லட்டர் போடு

சுசி: (கண்களில் நீர் மல்க) ஆகட்டும் அப்பா.

சுந்: (அழகனிடம்) மச்சானை ரொம்ப விசாரிச்சதாகச் சொல்லு.

அழ: நல்லது மாமா.

(ரயில் புறப்படுகிறது)

[*திரை*]

காட்சி 65.

இடம்: ஆபத் சகாயம் பிள்ளை வீடு.

காலம்: காலை.

பாத்திரங்கள்: ஆபத் சகாயம் பிள்ளை, அழகன், செல்லப்பன் சுசிலா, சாமி, வேலன் முதலானோர்.

(ஆபத்சகாயம் பிள்ளை படுக்கையில் இருக்கிறார். செல்லப்பன் அவருக்கு சிசுருட்சை செய்து கொண் டிருக்கிறான், பண்ணையாள் வேலன் ஓடி வருகிறான்)

வேலன்: எசமான்! எசமான்!! நமக்கு நல்ல காலம் பொறந்துடுச்சிங்க.

செல்: ஏன்டா! படி அரிசி விலே எட்டணுவா இறங்கிப் போச்சுதா? இல்லே. மந்திரி சபை மாறிப் போச்சா?

வேலன்: நம்ம சின்ன எசமான் வண்டியிலே வந்துகிட்டு இருக்கிருங்க.

செல்: (ஆச்சர்யத்துடன்) என்ன? கனுக் கண்டியா?

வேலன்: ஆமாங்க.... இல்லீங்க.

செல்: என்னடா பேத்தறே?

வேலன்: ஆமாங்கன்னு. எங்கப்பன் ஆணை. அவரைப் பார்த்துட்டுத்தான் வயல் காட்டு மேலே விழுந் தடிச்சு குறுக் காலே ஓடியாரேனுங்க.

ஆபத்: (மகிழ்ச்சி பொங்க) அப்பாடா! என் கவலை தீர்ந்தது!

(செல்லப்பன் ஆபத்சகாயம் பிள்ளையைத் தாங்கிப் பிடித்த வண்ணம் வாசலுக்குக் கூட்டிக்கொண்டு வருகிருன். வண்டி வந்து நிற்கிறது. அழகனும் சுசீலாவும் வண்டியில் இருந்து இறங்குகின்றனர்)

அழ: (ஓடி வந்து தந்தையின் காலில் விழுந்த வண் ணம்) அப்பா! என்னை மன்னிச்சுடுங்கப்பா. உங்க வார்த்தை யைக் கேளாமல் போனதற்கு நான் பட்ட பாடெல்லாம் போது மப்பா.

செல்: சும்மாவா சொல்லி வைச்சாங்க. தந்தை சொல் மிக்க மந்திர மில்லே, அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்ன்னு.

ஆபத்: (மகனைத் தூக்கித் தழுவிய வண்ணம்) மகனே எழுந்திரு. என் வயிற்றில் பாலே வார்த்தாயடா. என்று உன் தவறை மனப் பூர்வமாக உணர்ந்து விட்டாயோ, அன்றே என் மன்னிப்பைப் பெற்று விட்டாய்.

(எல்லோர் கண்களிலும் ஆனந்த பாஷ்பம் பெருக் கெடுக்கிறது)

(சுசீலா ஆபத் சகாயம் பிள்ளையை வணகுங்கிருள்)

ஆபத்: அழகா இந்தப் பெண் யார்?

அழ: மாமா சுந்தரம் பிள்ளை மகள்.

ஆபத்: (சந்தோஷத்தோடு) அப்படியா? ரொம்ப சந்தொஷம். அப்பா சௌக்யமாய் இருக்கிறாராம்மா?

சுசீ: இருக்கார் மாமா.

செல்: உங்களுக்கு ஒரு மகன் பொறந்திருக்கான். மூக்கும் முழியும் உங்களாட்டம். படுசுட்டியும் கூட அப்பனாட்டம்.

ஆபத்: பாவம் சாவித்திரிதான் நலிஞ்சு நடைப் பிணமாய்ப் போய் விட்டாள். கவலையே அவளைத் தின்னுட்டுது. செல்லப்பன் பெண்சாதி சொர்ணம்தான் எப்பவாவது பேரப் பயலைக் கொண்டாந்து காண்பிச்சுட்டுப் போவாள்.

(சாமி அலறி யடித்துக் கொண்டு வருகிறான்)

சாமி: (பரபரப்போடு) எசமான்! (அழகனைப் பார்த்து விட்டு) அடடே யாரு? சின்ன எசமானா? வாங்க! நல்ல சமயத்திலே வந்தீங்க. சாவித்திரி அம்மாவுக்கு உடம்பு கவலைக் கிடமா இருக்குன்னு டாக்டர் சொல்லிட்டுப் போறாருங்க.

அழ: (திடுக்கிட்டு) ஐயையோ. வாங்க போகலாம்.

(எல்லோரும் ஆற்றங் கரை பங்களாவுக்குச் செல்கின்றனர்)

[திரை]

★

காட்சி 66.

இடம்: ஆற்றங் கரை பங்களா.

காலம்: காலை.

பாத்திரங்கள்: சாவித்திரி, சொர்ணம், தங்கம்மா, அழகன் சுசீலா முதலானோர்.

(சாவித்திரி படுக்கையில் படுத்துக் கொண் டிருக்கிறாள்) சொர்ணம் அவளுக்கு சிசுருட்சை செய்தவாறு அருகில் இருக்கிறாள். தங்கம்மா ஓடோடியும் வருகிறாள்)

தங்: அம்மா! அம்மா! சின்ன ஐயா வந்துட்டாராம்.

சாவி: (மகிழ்ச்சியோடு) ஆ உண்மை யாகவா? (படுக்கையை விட்டு எழும்ப முயற்சிக்கிறாள். ஆனால் முடிய வில்லை)

தங்: சத்தியமாம்மா. பண்ணையார் கூட பேசிகிட்டு இருக்கார்.

சொர்: இனிமே உங்க கவலை யெல்லாம் விடிஞ்சு போச்சு அம்மா.

சாவி: கவலை விடிஞ்சு போச்சு. ஆனால் என் உயிர் தான் அஸ்த மிக்கப் போகிறது.

(அழகன் பிரவேசம்)

சொர்: (குழந்தையிடம்) இதோ உங்க அப்பா. (சிறுவன் அழகனை நோக்கி ஓடுகிறான், அழகன் அவனை வாரி எடுத்து உச்சி முகர்கிறான். இந்தக் காட்சியை சாவித்திரி படுக்கையி லிருந்த வாறே பார்த்து ஆனந்தக் கண்ணீர் உகுக்கிறாள்)

அழ: (சாவித்திரியை அணுகி) சாவித்திரி!

(குழந்தையை அழகனிடமிருந்து சொர்ணம் வாங்கிக் கொள்கிறாள்)

சாவி: (மகிழ்ச்சி பொங்க) அத்தான் ... ஆ!...... அம்மா!

(இருதய வேதனை அதிகமாகிறது)

அழ: சாவித்திரி என் கண்ணே. என்னம்மா இப்படி இளைத்து விட்டாய்? உருண்டு திரண்டு குழிந்த உன் கன்னங்கள் ஒட்டி உலர்ந்து உரு மாறிப் போய் விட்டனவே! குறுகுறுத்த உன் கண்கள் இன்று குழி விழுந்து, ஒளி யிழந்து காண்கின்றனவே. உனது இந்த நிலைக்கு இந்தப் பாவிதானே யம்மா காரணம்? என்னை மன்னித்து விடு. மடையரின் போதனையில் மனதைப் பறி கொடுத்து மாசிலா என் மாது சிரோன்மணியின் மானத்துக்கு மாசு கற்பித்த இந்த மதோன்மத்தனை மன்னித்து விடு. கயவரின் சகவாசத்தால் கருத் தழிந்து என் கண்மணியின் கற்புக்குக் களங்கம் நினைத்த இந்தக் கசடனை மன்னித்து விடு.

சாவி: (தேம்பியவாறு) அத்தான்!

(சொர்ணத்திடம் குழந்தையை வாங்கி அழகனிடம் கொடுத்து)

இதோ உங்கள் செல்வக் குமரன். என்றாவது ஒரு நாள் உங்கள் தவறை உணர்ந்து வருவீர்கள். உங்கள் மகனை உங்களிடம் ஒப்படைக்க வேண்டும். என்மேல் சுமத்தப் பட்ட அபாண்டப் அகல வேண்டும். உங்கள் மடியிலேயே என் உயிரை விட வேண்டும் என்று நான் விரும்பியது வீண் போக வில்லை. என் ஆவல் நிறைவேறி விட்டது. இனி ஆனந்தமாய்ச் சாகிறேன்.

அழ: அப்படி யெல்லாம் சொல்லாதேம்மா. இனி சீக்கிரம் குணமாயிடும்.

சாவி: அப்படி இல்லை அத்தான். அணைகடந்த வெள்ளம். என் இருதயம் மிகவும் பலஹீன மடைந்து விட்டது. என்றைக்கோ போக வேண்டி உயிர், உங்கள் வரவுக்காக இத்தனை நாள் உடலோடு ஒட்டிக் கொண் டிருக்கிறது. சமயத்தில் வந்து சேர்ந்தீர்கள்.

அழ: என் மனம் கலங்குகிறதே யம்மா

சாவி: வருந்தாதீர்கள். (குழந்தையைக் காட்டி) அதோ நமது அன்பில் அரும்பிய அழகு மலர். அவன் நல் வாழ்வுக்காக நீங்கள் அவசியம் மறு மணம் செய்து கொள்ளத்தான் வேண்டும். (சாவித்திரியின் பார்வை படுக்கைக்குப் பின்புறம் நின்று அழுது கொண் டிருந்த சுசீலாவின் மீது விழுகிறது)

சாவி: (அழகனிடம்) இந்தப் பெண் யார் அத்தான்?

அழ: (விம்மல்களினூடே) பம்பாய் மாமா சுந்தரம் பிள்ளை மகள் சுசீலா. என்மேல் உயிர் அவளுக்கு அவர்கள் உதவியைப் பெற்றுதான் ஓடோயும் வந்தேன். உன் அனுமதியைப் பெற்று அவளையும் மணம் செய்து கொள்ளலாம் என்றுதான் எண்ணினேன். ஆனல்........

சாவி: (குறுக்கிட்டு) ஆனல் என்ன? பழம் நழுவிப் பாலில் விழுந்து விட்டது.

(கணவனிடம் தான் சொன்ன வார்த்தைகளை நினைவு கூருகிருள்)

'மனைவி என்ற மகத்தான ஸ்தானத்தை உங்கள் மனதுக்குப் பிடித்த மற்றொருத்திக்கு மனப் பூர்வமாய்த் தத்தம் செய்து விடுகிறேன்'

(முக மலர்ச்சியோடு சுசீலாவிடம்)

அம்மா சுசீலா! இப்படி வா (சுசீலா வருகிருள்) தாயை இழக்கும் என் பாலகனுக்கும் தாரத்தைப் பிரியும் என் பர்த்தாவுக்கும் இனி நீதான் அன்பும் ஆதரவும். (அழகன் சுசீலா இருவர் கரங்களையும் சேர்த்து வைக்கிருள்) இதோ (மகனுக்கு முத்தமிட்டு) இனி இவன் உன் மகன்,

(சுசீலா குழந்தையைப் பெற்றுக் கொள்கிருள்)

(சாவித்திரிக்கு இருதய வேதனை எல்லை மீறுகிறது. அவள் ஆவி பிரிகிறது. எல்லோரும் அழுது புலம்புகின்றனர்)

அழ: (புலம்புகிருன்) ஆ! என் கண்ணே சாவித்திரி! போய் விட்டாயா? மாதருள் மாணிக்கமே! மறைந்து விட்டாயா? அன்பற்ற அதமர் லோகத்தில் அன்பும் ஆதரவுமாய் இருந்த நீ என்னைக் கண் கலங்கிக் கதறி யழ விட்டு விட்டு எங்கே யம்மா போய் விட்டாய்? சாவித்திரி, நீ பெண் ணல்ல! பெண் தெய்வம்!! மண்ணில் தோன்றி மறைந்த மகா உத்தமிகளான மாதர் திலகங்களின் பட்டியலில் சேர்ந்து விட்டாய்! உன்னை எப்படி மறப்பேன்? சீக்கிரம் என்னையும் அழைத்துச் செல் அம்மா.

(குலுங்கிக் குலுங்கி அழுகிருன்)

[*திரை*]

காட்சி 67.

இடம்: ஆபத் சகாயம் பிள்ளை வீடு.

காலம்: காலை.

பாத்திரங்கள்: ஆபத் சகாயம் பிள்ளை, அழகன், சுசீலா, சாமி முதலானோர்.

ஆபத்; ஹூம்! சாவித்திரிக்கு வந்த எமன் இந்தக் கிழத்துக்கு வந்திருக்கக் கூடாதா?

சாமி: அதை யெல்லாம் என்னத்துக்குச் சொல்றீங்க எசமான்? எல்லாம் அவன் செயல்! நாளைக்கு நடக்கப் போறதை நாம் கண்டோமா?

ஆபத்: அன்பனைப் பற்றி ஒண்ணுமே தகவல் தெரியலை யேப்பா.

அழ: அதுதான் எனக்கும் கவலையா யிருக்கு. அண்ணுண்ணு அண்ணுதான்.

சாமி: அது அப்பவே தெரிஞ்சிருந்துதுன்னு இந்தச் சங்கட மெல்லாம் வந்தே இருக்காது. அண்ணைக்கு நான் கன்னத்திலே பட்ட அடியை இப்போ நினைச்சிட்டாலும் கதி கலங்குது.

(கன்னத்தைத் தடவி விட்டுக் கொள்கிருன்)

தபாற்காரன்: ஸார் போஸ்ட்.

(அழகன் கடிதத்தை வாங்கிப் பிரித்துப் படிக்கிருன்)

என் உயிரினும் இனிய அழகா!

உனக்கு இந்தக் கடிதத்தை எழுதுகையில் நான் சாவின் சந்நதியில், மரணத்தின் முடியில், என் முடிவை எதிர் நோக்கிக் கொண் டிருக்கிறேன். நீதி மன்றத்தில் சாவுக்கும் வாழ் வுக்குமிடையே போராடிக் கொண் டிருந்த உன்னைப் பிராண பாயத்திலிருந்து காப்பாற்றிய கருணாகரன் என்ற மனிதனை உனக்கு ஞாபகமிருக்கிறதா? அது வேறு யாரும் இல்லை. உன்னை உயிருக் குயிராய் நேசித்த உன் அண்ணன் அன்பன்தான் என்று தெரிந்தால் உனக்கு ஆச்சரியமாய் இருக்கும். என்ன? உன் அண்ணன் கொலையாளியா என்று குமுறுகிறாயா? இல்லை. உண்மைக் குற்றவாளி சட்டத்தின் ஓட்டைகளில் ஒளிந்து கொண் டிருக்கிறான். நீயும் நிரபராதி என்று எனக்கு நிச்சயமாய்த் தெரியும் ஆனால் சமயமும், சந்தர்ப்பங்களும், சம்பவங்களும், சட்டமும், சாட்சியங்களும் உனக்கு எதிராய்ச் சதி செய்து விட்டன. யாருக்காக இந்த உடலையும் உயிரையும் வைத் திருந்தேனோ, அந்தச் சகோதரன், சாவின் சரிவில் நின்று சஞ்சலப் படுவதை என்னால் சகிக்க முடியவில்லை சட்டத்தின் பிடியிலிருந்து உன்னைத் தப்புவிக்க ஒரே வழிதான் எனக்குத் தோன்றியது. எந்த சட்டத்தின் பலவீனத்தால் நிரபராதி யாகிய நீ பலியிடப் படவிருந்தாயோ அதே சட்டத்தின் பல வீனத்தைப் பயன் படுத்திக் கொண்டேன். கற்பனைக்கு மெரு கிட்டேன், கட்டுக்கதை புனைந்தேன். சில சிக்கல்களை சிருஷ்டி செய்தேன். கோர்ட் நடவடிக்கைகளை அவ்வப்போது கண்ணும் கருத்துமாய் கவனித்து வந்த எனக்கு அது சாத்தியமாயிற்று. தேவையாயிருந்த தெல்லாம் ஒரு உயிர்ப் பலி. உன் வாழ்வை இலக்காகக் கொண்டு, என்னுயிரைப் பணயமாக வைத்து, நீதி மன்ற மென்ற சூதாட்ட சாலையில், சட்ட மென்ற சதிகாரனுக்கு எதிராக, வழக்கு என்ற பந்தயத்தில், வாக்கு சாதுர்யம் என்ற துருப்புச் சீட்டைக் கொண்டு விளையாடினேன். வெற்றி கிட்டி யது. நீ காப்பாற்றப் பட்டாய்.

உன்னை முதன் முறையாக ஹோட்டலில்க் கண்ட பொழுது உன்னை உடனே அணுகி ஊருக்கு அழைத்து வரத்தான் எண்ணி னேன். ஆனால் நீ ஏற்கனவே என் மீது கொண் டுள்ள சந்தேகத் தால், எங்கே என்னுடன் வர மறுத்து விடுவாயோ என்று எண் ணியதுடன், என் முகத்தில் விழிக்க மனமின்றி வேறெங்காவது போய் விடுவாய். அல்லது உன் அலங்கோல நிலையை உன் எதி ராளியாக நீ கருதிய சகோதரன் அறிந்து கொண்டானே என்ற வெட்கத்தால் மன முடைந்து ஒரு வேளை தற்கொலைகூட செய்து கொண்டு விடுவாயோ என்றும் அஞ்சினேன். உன் மன நிலையை அறியமாறு வேடம் பூண்டேன். வெண்ணை திரண்டுவரும் சமயம்

தாளி உடைந்தது போல் அதற்குள் விதி சதி செய்து விட்டது. கொலைக் குற்றத்துக்காக நீ கைது செய்யப் பட்டிருந்தாய். அதற்குப் பிறகு நடந்த தெல்லாம் உனக்குத் தெரியும். சாவித்திரியும் சில விஷயங்களைச் சொல்லி யிருப்பாள். உன் மன மாற்றத்தை நான் வழக்கின் போது அறிந்து கொண்டு விட்டேன் என்றாலும் அந்த நிலையிலும் நான் என்னை வெளிப் படுத்த விரும்ப வில்லை. ஏனென்றால், என்னை நீ அடையாளம் கண்டு கொண்டால் ஒரு வேளை குற்றத்தை நீ உன் மேலேயே சுமர்த்திக் கொண்டு தண்டனை யடைந்து விடுவாயோ என்று பயந்தேன் மேலும் நான் உன் சகோதரன் என்பதைக் கோர்ட்டார் அறிந்தால், என் வாக்கு மூலத்தை நம்ப மாட்டார்கள்; உன்னை மீட்க நான் எடுத்துக் கொண்ட முயற்சிகள் அத்தனையும் வியர்த்த மாகி விடுமே என்றும் அஞ்சினேன். கோர்ட்டில் நான் ஆஜர்ப் படுத்திய பணம், நம் சொந்தப் பணம். திருடு போய் விட்டதாகச் சொல்லப் பட்ட பணத்தை நான் கொண்டு வந் திருந்த பணத்தி லிருந்து ஈடு செய்து கொடுத்து, கோர்ட்டாரின் சந்தேகத்தை முற்றிலும் நிவர்த்தி செய்தேன். இன்னும் சில தினங்களில் எனக்கு அளிக்கப் பட்டிருக்கும் **மரண தண்டனை** நிறைவேற்றப் பட்டுவிடும். (எல்லோரும் திடுக்கிடுகின்றனர்) தீர்ப்புச் சொல்லி இத்தனை நாளாய் உனக்கு இதை நான் அறிவிக்க வில்லை உன் தலை யீட்டினால் உனக்கு மறுபடியும் இடுக்கண் நேர்ந்து விடுமோ என்று அஞ்சிய காரணத்தால். சிறையில் என்னை நீ 'அண்ணா' வென்று அழைத்துத் தழுவினாய். அதுவே நான் கடைசியாக விரும்பி வேண்டி நின்ற தெல்லாம்.

தம்பி! என் அருமைச் சகோதரனே! உனக்காகவே வாழ்ந்தேன். உனக்காகவே மரண மடைகிறேன். தாய்க்கு நான் கொடுத்த வாக்கை முற்றிலும் நிறை வேற்றி விட்டேன். நான் சாகும் பொழுது என் உடம்பி லுள்ள ஒவ்வொரு அணுவும் இந்தப் பெருமையினாலும், மகிழ்ச்சியினாலுமே துடித்து ஓயும். கடைசியாக ஒரு வார்த்தை, உன் மனைவி மாசற்றவள் கனவிலும் அவள் கற்புக்குக் களங்கம் கற்பிக்காதே. அப்பாவுக்கு என் வணக்கத்தைச் சொல். அந்திய காலத்தில் அவருக்கு ஆதரவாயிரு. உன் மகன், நமது குலக் கொழுந்து. குடும்ப ஜோதி, மாசற்ற மாணிக்கத்துக்கு என் எண்ணற்ற முத்தங்கள்.

என் பிரிவுக்காக வருந்தாதே. அந்தக் கவலையால் உன் உயிரை மாய்த்துக் கொள்ள எந்த வித முயற்சியும் செய்யாதே.

இது தான் உன் அண்ணனுக்கு நீ செய்ய வேண்டிய கைம் மாறு.

இப்படிக்கு,

உனக்காகவே உயிர் வாழ்ந்த உடன் பிறந்தோன்

அன்பானந்தன்.

பின் குறிப்பு,

இந்தக் கடிதத்தை சிறை யதிகாரிகளுக்குத் தெரியாமல் எனக்குத் தெரிந்த மனித ஹிருதயம் படைத்த ஒருவர் மூலம் அனுப்புகிறேன்.

(அழகன் கண்களிலிருந்து நீர் பொல பொல, வென்று உதிருகிறது. அண்ணா என்று அலறுகிறான்.)

ஆபத்: (அதிர்ச்சி யடைந்து) ஐயையோ மகனே! அநியாயமாய் மாண்டாயே.

(ஆபத் சகாயம் பிள்ளை மாரடைப்பால் மரண மடைகிறார். அழகன் தகப்பனாருக்குச் செய்ய வேண்டிய ஈமக் கிரியைகளை முடித்து விட்டு அண்ணனைக் காப்பாற்ற சுசீலா வுடன் பம்பாய் விரைகிறான்.)

[திரை].

காட்சி 68.

இடம்: சிறைக் கூடம்.

காலம்: காலை.

பாத்திரங்கள்: அழகன், சிறை யதிகாரிகள் முதலானோர்.

அழ: (சிறை யதிகாரியிடம்) அய்யா! ஹோட்டல் முதலாளி கொலை கேஸில் தண்டிக்கப் பட்ட அன்பானந்தனைப் பார்க்க வேண்டும். நான் அவர் சகோதரன்,

சிறை அதிகாரி. (கைக் கடிகாரத்தைப் பார்த்து விட்டு) ஓ! I am Sorry. You are a bit late! காரியம் மிஞ்சி விட்டது. சற்று முன் துப்பாக்கி சுடும் சத்தம் கேட்டதே. இந் நேரம் அந்த குண்டுகள் அவர் உயிரைக் குடித்து விட்டிருக்குமே.

அழ: (திடுக்கிட்டுக் கதறி) ஐயையோ நான் மகா பாபி. நிரபராதியான என் அண்ணுவைக் காப்பாற்றவே ஓடி வந்தேன்....

சி-அ: (குறுக்கிட்டு) நிரபராதி. அபராதி என்று நிர்ணயிக்க வேண்டியது நீதி மன்றம், நீரும் நானும் என்ன செய்வது? அளித்த தண்டனையை அமுல் நடத்துவதுதான் எங்கள் அலுவல். நீதி மன்றத்தின் தீர்ப்பைப் பழித்தால் கோர்ட்டை அவ மதித்த குற்றத்துக்கு ஆளாக நேரும்.

அழ: (அழுதவாறு) ஐயா! என் அருமை அண்ணுவின் உயிரைத்தான் எடுத்துக் கொண்டீர்கள். அவர் உடலை யாவது தகனம் செய்ய எனக்கு அனுமதி தாருங்கள்.

(அதிகாரிகளின் அனுமதியின் பேரில் அன்பனின் உடல் அழகனிடம் தரப்படுகிறது. தமையனின் சடலத்தை அழகன் கொண்டு போகிருன்)

அழ: (அன்பனின் சடலத்துக் கருகில் அமர்ந்தவாறு) எனக்கு உயிர் அளிக்க உயிர் நீத்த உத்தமரே, உங்களுக்கா இந்த கதி! மனதாலும் மாற்ருனுக்கும் பொல்லாங்கு நினையாத மகா னுக்கா மரண தண்டனை? ஐயையோ! நினைத்தாலும் நெஞ்சம் குமுறுகிறதே! சகோதர வாஞ்சையே உரு வெடுத்த தாங்கள் சட்டத்தின் சதிக் கிரை யாகி விட்டீர்களே, சட்டம்! உயிர் அளிக்க சக்தி யற்ற உனக்கு உயிரைப் பறிக்க மட்டும் உரிமையா? சட்ட மென்ற சண்டாள அரக்கனே! வீணர்களை வீதியில் உல்லாஸமாய் உலவ விட்டு நிரபராதிகளின் நிர்மலமான இரத்தத்தை உன் கோரப் பசிக்கு இரை யாக்குவதுதான் உன் கொடிய கொள் கையா? பகுத்தறி வற்ற பாதகரின் கைப் பாவையாகி நீ எத்தனை பாவ மற்ற ஜீவன்களைப் பலி கொண்டிருக்கிருய்? எத்தனை உத்தம ரின் உதிரத்தை உறிஞ்சி யிருக்கிருய்? நீ செல்வந்தரின் செல்லப் பிள்ளை. ஏழைகளின் எதிரி. விலை யின்றி வழங்கப் பட வேண் டிய நீதி, உன்னுல் இன்று நிலை தடுமாறுகிறது. நீதி உனக் கடிமை நீ பணத்துக் கடிமை. பணம் படைத்த பலர் உன் தயவால் எத்தனை பாமரரைப் பழி வாங்குகின்றனர்? உன்னை நம்பி எத்தனை உலுத்தர்கள் உயிர் வாழ்கின்றனர்? உன் தயவால் பழமை விரும்பிகள் எத்தனை பகுத்தறிவுப் பாசறைகளைப் பாழ

டிக்கின்றனர்! சட்டங்கள்...அவற்றை அமுல் நடத்த பற்பல சதி காரர். நீதி நியாயத்தின் நிலைக்கும் எல்லை வகுத்த நீ முற்றிலும் அவசியம்தானா? உன் கோர சொரூபத்தை உடனே மாற்றிக் கொள். அல்லது என் போன்றவர்களின் எரிகிற வயிற்றிலிருந்து எழும் கோபாக்கினி உன்னை நிர்மூல மாக்கி விடும்.

(சோர்ந்து அன்பன் உடல் மீது சாய்கிறான்)

[திரை]

காட்சி 69

இடம்: ருத்ர பூமி.

காலம்: மாலை.

பாத்திரங்கள்: அழகன், சுசிலா, சுந்தரம் பிள்ளை முதலானோர்.

(அழகன் தமயனின் சடலத்துக்குக் கொள்ளி வைக்கிறான். அக்கினி ஜுவாலை கொழுந்து விட்டெரிகிறது)

அழ: (கதறுகிறான்) அண்ணா! அண்ணா! அன்பின் ஆழ் கடலே! தம்பியுடன் வாழ்வுகக்காகத் தன்னுயிரைத் தாரை வார்த்த தயா நிதியே! என் சுகத்துக்காகத் தங்கள் சுகத்தைத் துறந்தீர்கள். என் வாழ்வுக்காகத் தங்கள் வாழ்வைக் தியாகம் செய்தீர்கள். எல்லாவற்றிற்கும் மேலாக என் உயிருக்காகத் தங்கள் உயிரையும் தத்தம் செய்து விட்டீர்கள். இதற்கெல்லாம் நான் செய்யும் கைம் மாறு கொள்ளி வைப்பது தானா? உங்கள் பொன்னான மேனியையும் பாழும் தீ பட்சிக்கிறதே அண்ணா! உலகில் ஒரே தாய் வயிற்றில் பிறந்தோம், ஒன்றாய் வளர்ந்தோம். கடைசியில் என்னை விட்டு விட்டு நீங்கள் மாத்திரம் போய் விட்டீர்களே அண்ணா! என்னைச் சில காலம் பிரிந்திருந்தால் சிந்தை கலங்குவீர்கள், உங்களை ஒரேயடியாய் இழந்து விட்டு எப்படி

வாழ்வேன்? இந்தப் பேரிடியை எப்படிச் சகிப்பேன்?....உங்கள் தியாகத்தை எவ்வாறு மறப்பேன்? உங்கள் புனித உடல்! **தியாகத் தீ** யில் பொசுங்கி விட்டதே அண்ணு! தாங்கள் அன்புச் சுரங்கம், பொறுமையின் பொக்கிஷம், தியாகி! தியாகத்தின் சிகரம்! தியாக மூர்த்தி! அண்ணு! அண்ணு! ஐயையோ!

(மூர்ச்சிக்கிருன்)

[*திரை*]

காட்சி 70.

இடம்; நஞ்சசப்பன் பங்களா.

காலம்; மாலை.

பாத்திரங்கள்; நஞ்சசப்பன், நாக மணி முதலானோர்.

நஞ்: (நாக மணியிடம்) அப்பாடா! கேஸ் ஒரு வழியாய் முடிஞ்சுட்டுது. அன்பனுக்கும் தண்டனையை நிறைவேத்தியாச்சு. இனிமே நாம் ஜாலியாய், நிம்மதியாய் இருக்கலாம்.

நாக: ஆனல் அந்தப் பயல் அழகன் பிழைத்துக் கொண்டு விட்டானே!

நஞ்: அந்த மட்டுக்கும் நாம் தப்பிச்சோமே! நான் மட்டும் அந்தச் சமயத்தில் தலையைக் கொடுத்து எக்கச் சக்கமாக மாட்டிக் கொண்டால்....அப்புறம்....பின்னுலே ஆபத்து........

(பின்னல் ஆபத்து வந்து விடுகிறது. அழகன், வீரப்பன் பின் தொடர போலீஸார் வந்து நஞ்சப்பனையும், நாக மணியையும் அநேக குற்றங்களுக்காகக் கைது செய்து இழுத்துச் செல்கின்றனர்)

[*திரை*]

(அழகன் அன்பன் பெயரால் பல ஸ்தாபனங்களை நிர்மாணிக்கிறான். 'அன்பானந்தன் ஞாபகார்த்த தொழிற்சாலை, வைத்தியசாலை, கலா சாலை, வாசக சாலை முதலியவை அவற்றிற் சில. தன் மகனுக்கும் தமையன் பேரையே சூட்டுகிறான் சாவித்திரியின் ஞாபகார்த்தமாக 'பிரசவ விடுதி' 'சிசு சம்ரட்சணை சாலை' 'அனாதை விடுதி' 'கைம் பெண்கள் பராமரிப்பு சங்கம்' 'நல்லொழுக்கக் கழகம்' முதலானவற்றையும் நிறுவுகிறான்.

சுசீலாவை மணந்து, தந்தை தமையன் ஆகியோரின் அறிவுரைகளைச் சிரமேற் கொண்டு தன் மனைவி மகனுடன் வாழ்க்கையில் புதிய அத்தியாயத்தைத் தொடங்குகிறான் அழகன்.)

(நலம்.)

ஸ்ரீ வாணி விலாசம் பிரஸ், திருப்பாதிரிப்புலியூர்.

புதிய நாவல் இனிய நடை!
உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும் கற்பனை!
படித்து இன்புற வேண்டிய நாவல் இதுவே!

நாவல் உலகத்தில் முடிசூடா சக்ரவர்த்தியாகிய
நிகரற்ற நாவலாசிரியர்

ஸ்ரீமான் K. வடுவூர் துரைசாமி அய்யங்கார் B. A.,
அவர்கள் எழுதிய

காங்கிரஸ் கமலம்

அல்லது

ஆணென்று அணைய அகப்பட்ட பெண் புதையல்.

மலைவிழுங்கி மகாதேவனின் பரிபாலிப்பும் 70 வயதடைந்த-ஜட்ஜ் விதவை சுந்தரிமேல் மோகங் கொள்ளுதலும்-ஜட்ஜ் மோட்டார் விபத்தினல் மரண உயில் எழுதும் வேடிக்கையும் ஜட்ஜ் தங்கை கல்யாணியம்மாள் அவள் புத்திரன் ராஜகோபாலன் புத்திரி கமலம் அவர்கள் செய்யும் ஜவுளிக்கடை, சாராயக்கடை மறியலும், கல்யாணி, ராஜகோபாலன் மறியலில் சிக்ஷை அடைவதும் சித்தானை குட்டியின் சில்விஷமமும் கிராமணியின் ஆர்பாட்டமும் கமலம் ஆண் வேடமணிந்து ஈஸ்வர வாலிபனை கண்டு மோகங் கொள்வது. இது போன்ற அநேக அதிசய சம்பவங்கள் நிறைந்த நாவல் இதுவே!

உங்கள் பிரதிக்கு உடனே எழுதுங்கள்.

சித்திரப் படத்துடன் விலை ரூ. 3—8—0

இடைக்குமிடம்:—

ஸ்ரீ வாணி விலாசம் பிரஸ், திருப்பாதிரிப்புலியூர்.

கதையில் ஒரு புதுமை! கருத்திலே ஒரு புரட்சி!!

வானம் பொழியுது — பூமி விளையுது

என்று கர்ஜித்த

ஜகவீர பாண்டிய

கட்டபொம்மன் - ஊமைத்துரை

ஜீவிய நாடகம்

யாருக்கு யார் அடிமை? அதுதான் அன்றுமில்லை! இன்றுமில்லை!! என்றுமே இல்லை!!!

யார் குற்றவாளி! நானா குற்றவாளி? உரிமைப்போர் கொண்டாடியது குற்றமா?

பிறந்த நாட்டின் சுதந்திரத்தை நிரந்தர மாக்கச் செய்ய நினைத்தது குற்றமா?

கள்ளனை காவலுக்கு அழைக்காதே என்றது குற்றமா?

தேசீயம் பேசியது குற்றமா?

வெள்ளையனே வெளியேறு என்றது குற்றமா?

ஆம்-உங்கள் சட்டப்படி நான் குற்றவாளிதான்

ஆனால்! இந்த ஒரு கட்டபொம்மனைப் பிடித்து விட்டோம் என்று ஒய்யாரமாய் ஆடலாம்-பாட லாம் குடித்து கூத்தாடலாம். இன்னும் சற்று நேரத்திலே ஒன்பதினாயிரம், சுதந்திர வீரர்கள் வரத்தான் செய்வார்கள்.

அன்று! அழியும் இந்த ஆங்கிலேய ஆட்சி. இந்த அந்நியனின் சூட்சி-அடிமை ஆதிக்கம்....

இப்படி கதறுகிறான் **கட்டபொம்மன்.**

மூவர்ண ஜாகட் அட்டையுடன் விலை ரூ. 2-0-0.

கிடைக்குமிடம்:—

ஸ்ரீ வாணி விலாசம் பிரஸ், திருப்பாதிரிப்புலியூர்.

வந்து விட்டது! வந்து விட்டது!!

துன்புற்றிருக்கும் காதலர்களை இன்புறச்செய்யும் காதல் மருந்து;
இன்புற்றிருக்கும் காதலர்களை அன்பை பெருக்கச் செய்யும் நாவல் விருந்து.

வடுவூர் K. துரைசாமி அய்யங்கார் B. A.

கும்பகோணபுரத்தின் மர்மம்

அல்லது

லீலாவதியின் மூடுமந்திரம்

என்னும் துப்பறியும் நாவலை எழுதியிருக்கிறார்,
பல 2-கலர் படத்துடன் விலை ரூ. 6.

புதிய நடை - இனிய போக்கு - விநோத அலங்காரம்- இணையற்ற கற்பனை - விபரீத விஷயம் - காதற் களஞ்சியம்- இன்ப ஊற்று-ஆனந்த வெள்ளம் இவைகள் ஒருங்கே அமைய

வடுவூர் K. துரைசாமி அய்யங்கார் B. A.
அவர்களால் எழுதப்பட்ட

திடும்பிரவேச மகாஜாலப் பரதேசியார்

என்னும் அற்புத நாவலை வாங்கி வாசியுங்கள். இதில் இடும்ப சேர்வைக்காரனின் விபரீத செயல்களும் ராமாமணி அம்மாள் புஷ்பாங்கி என்னும் புனைப் பெயருடன் செய்யும் அநியாய சூழ்ச்சிகளும், திருநடனம் பிள்ளை குமாரத்திகள் மோகனாங்கி, இந்திராமணி படும் அவஸ்தைகளும், மன்னார் குடி கண்ணப்பாவின் சகோதரன் கந்தசாமி புஷ்பாங்கி சூழ்ச்சியில் சிறைபடுதலும், திகம்பரசாமி சர்வேயர் வேடத்தில் துப்பறிந்து குற்றவாளிகளை சிறைபடுத்தும் வேடிக்கையைப் படிக்கப் படிக்க இனிக்கும். நினைக்க நினைக்க மணக்கும் நாவல் இது.

கலர் படங்களுடன் கூடியது

1-வது பாகம் விலை ரூ 4—0—0
2 வது பாகம் விலை ரூ. 3—0—0

கிடைக்குமிடம்;-
ஸ்ரீ வாணி விலாசம் பிரஸ், திருப்பாதிரிப்புலியூர்.

நவீன முறையில் திடுக்கிடும் சம்பவங்கள் நிறைந்த துப்பறியும் நாவல் சினிமா பதிப்பாகவந்து விட்டது!

வடுவூர் K. துரைசாமி அய்யங்கார் B. A.,

அவர்கள் எழுதப்பட்ட

இரு மனமோகினிகள்

அல்லது **ஏமாளியை ஏற்றிய கோமாளி**

எந்த நாவலிலும் இல்லாத விசித்திரக் களஞ்சியமென்றும் இதைக்கூறுவது மிகையாகாது. இந்திராமணி சந்திராமணி இவ்விரு பெண்களால் நடைபெறும் விசித்திரங்களும் ஆண் பெண்ணுகவும் பெண் ஆணுகவும் மாறுவது, பெண்களுக்கு மீசை முளைப்பது, ஆண்கள் குழந்தைகளுக்கு பால் ஊட்டுவது முதலிய அபூர்வ சம்பவங்களும் துப்பறிபவருடைய பித்தலாட்டங்களும் ஊமைப்பெண் அன்பு மிகையால் பெறும் அடி உதைகளும். இரண்டு நொண்டிகளின் லீலைகளும் இன்னும் இவை போன்ற விசித்திரங்கள் நூற்றுக்கணக்கில் நிரம்பி ஓயாச்சிரிப்பை உண்டாக்கும் விதமாய் கற்பனு சக்தியால் அதியற்புதமாய் எழுதிய துப்பறியும் நவீன நாவல் இதுவே.

4-இரண்டு கலர் சித்திரப் படங்களுடன் விலை ரூ. 4.
சினிமா படங்களுடன் கூடிய விலை ரூ. 4-8-0

நவரசம் பொருந்தியதும் — திடுக்கிடும் சம்பவங்களும் நிறைந்த துப்பறியும் நாவல்
எம்முறையிலும் இதுவரை எழுதப்படாதது!

வடுவூர் ஸ்ரீமான்

K. துரைசாமி அய்யங்கார் B. A.,

அவர்களால் எழுதப்பட்ட

காந்திமதி அல்லது

மர்மச் சுழலில் நீந்திய மாயாவி

கலர் படத்துடன்	**விலை ரூ. 3—8—0**
கிளேஸ் பதிப்பு	**விலை ரூ. 4—0—0**

கிடைக்குமிடம்:—

ஸ்ரீ வாணி விலாசம் பிரஸ், திருப்பாதிரிப்புலியூர்.

இப்போது விற்பனையாகிறது! வாசித்து விட்டீர்களா?

உள்ளத்தை கிள்ளி, உணர்ச்சிக்கு உயிர் ஊட்டும்

ஒப்பற்ற உயிரோட்ட நாவல் எது?

இதோ!

மதிவாணன் எழுதிய

★ ஜீவ யாத்திரை ★

- மகரயாழை மீட்டி மந்தகாச கீதத்தை எழுப்ப அவன் நினைத்தான்!
- சுகந்த மணத்தைத் தெளித்து அதிலே முத்துக் குளித்து முகிழ்தெழ அவள் துடித்தாள்!

அதன் செயலும் முடிவும்?........

கண்ணைப் பறிக்கும் இருவர்ண அட்டைப் படம்

தொகுப்பு நாவல்கள்

சுமார் 300 பக்கங்கள் கொண்டது விலை ரூ. 3-8-0.

இராயஜீப்புயல் அதிக உக்கிரமாய் வீசுகின்ற இக்காலத்தில் கதாவாகர்களின் மனோபாவம் தேச பக்தியையும் வீர ரசத்தையோ நாடுகின்றதல்லவா?

அத்தகைய வீரம் சொறிந்த நவீனம் எது?

அறுபது தலை வாங்கிய

அற்புதவல்லி

அவள்—

சகல கலாவல்லி! சாகசக்காரி!!

சகித்தியக்காரி!!! சரசக்காரி!!!!

அத்தகைய அழகி - அற்புத வல்லியின் - அதிசயச் செய்கை!

அனைத்தும் அதிசயம் - அனைத்தும் ஆச்சரியம்

- அனைத்தும் அற்புதம்!

எல்லாம் திகைப்பு - எல்லாம் மர்மம் - எல்லாம் ரகசியம்!

ஆப்டோன் படங்களுடன் விலை ரூ. 3-0-0.

கிடைக்குமிடம் :—

ஸ்ரீ வாணீ விலாசம் பிரஸ், திருப்பாதிரிப்புலியூர்.

தமிழ் அன்பர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்!

நீங்கள் பார்த்தீர்களா?

வாங்கிப் படித்தீர்களா?

திங்கள் பதிப்பகத்தாரின்

மூன்றாவது வெளியீட்டின்

நவீன வாழ்க்கை

என்னும்

புது வாழ்வு

[திருமணப் பரிசுக்குரியது.]

- ★ உள்ளெல்லாம் கண் கவரும் 40 சித்திர விசித்திரங்கள்!
- ★ 20 சிறு கதைகள்!
- ★ மேலட்டையில் கண்ணையுங் கருத்தையும் கவர்ந்திழுக்கும் மூவர்ண ஓவியம்!
- ★ திண்மையான பயிண்டு!
- ★ நேர்த்தியான அச்சு!
- ★ மொத்தத்தில் இணையற்ற பொக்கிஷமாகத் திகழ்வது!

மூவர்ண ஜாகட் அட்டையுடன் விலை ரூ. 2-8-0.

உங்கள் பிரதிக்கு உடனே எழுதுங்கள்.

கிடைக்குமிடம்:—

ஸ்ரீ வாணி விலாசம் பிரஸ், திருப்பாதிரிப்புலியூர்.

விற்பனையாகிறது!

"கருப்பு முல்லையை" எழுதி தமிழ் மக்களின்
கருத்தைக் கவர்ந்த 'சிரஞ்சீவி' ஆசிரியர்

ஜெகசிற்பியன் எழுதிய

★ நீல ரோஜா ★

கண்ணைக் கவரும் மூவர்ண ஜாகட் அட்டையுடன்
கூடிய சுவையான நாவல்

விலை ரூ. 3-0-0

ஷை ஆசிரியர் எழுதிய

★ ஏழ்மையின் பரிசு ★

'பேரிகை' ஆசிரியர் திரு. எஸ். எஸ் மாரிசாமி அவர்களுடைய மதிப்புரையும், தமிழ் நாட்டின் ஓவியக் கலைஞர் திரு. வர்மா அவர்களின் முகப்புச் சித்திரமும் கொண்டது.

கிளேஸ் பதிப்பு விலை ரூ. 1-12-0
ரப் பதிப்பு 1-8-0

ஆப்டோன் படங்களுடன் கூடியது

மர்மங்களை வெளியாக்கி விபரீத செய்கைகள் பல புரிந்து வந்த துரச்சனனை தும்சம் செய்த துப்பறியும் சிங்கத்தின் தீரச் செயலை உண்மையாய் உணர வேண்டுமானால்!

மர்மமுகி

அல்லது

ரஸாயனக் கள்வன்

மருதூர் A. பிரபாகர சாஸ்திரியார் B. A.,
அவர்கள் அழகுபட எழுதியிருக்கிறார்

வர்மா தீட்டிய 2 கலர் படத்துடன் விலை ரூ. 1-12-0

கிடைக்குமிடம்;-.

ஸ்ரீ வாணி விலாசம் பிரஸ், திருப்பாதிரிப்புலியூர்,

கேள்வி ஒன்று! வரம் இரண்டு! மணமக்கள் மூவர்!

எவ்வாறு என்பதை

உயர்திரு வித்வான்

மு. இராசாக்கண்ணு B. O. L. Hons.

அவர்களால் எழுதப்பட்ட

சித்திராபதி

அல்லது

இரண்டு வரங்கள்

என்னும் அதிசயக்கற்பனையை களிகூறப் படித்து அறியுங்கள்.

நாலு-இரண்டு கலர் சித்திரப்படத்துடன்

விலை ரூ. 1-8-0

வாசித்து விட்டீர்களா? விற்பனையாகிறது!!

தமிழ் நாட்டு பிரபல நாவலாசிரியர்

A. பிரபாகர சாஸ்திரியார் B. A.

அவர்கள் எழுதிய

சுந்தரவதனி

என்னும் துப்பறியும் நாவலை வாங்கி வாசித்துப் பாருங்கள்.

பிரபல ஓவியர் எழுதிய மிக அழகிய இருவர்ண முகப்பு படத்துடன் விலை ரூ. 1-8-0.

அழகான சித்திரப் படங்கள் அடங்கிய புதிய நாவல்

இருவரசன்

அல்லது **ஸுவர்ணபுரி மர்மம்**

தென்பாதி T. S. கனகசபை பிள்ளை

அவர்கள் எழுதியது

2-கலர் படத்துடன் விலை ரூ. 1-8-0

கிடைக்குமிடம்:—

ஸ்ரீ வாணி விலாசம் பிரஸ், திருப்பாதிரிப்புலியூர்.

வந்து விட்டது! விற்பனையாகிறது!!

சினிமா நடிப்பதற்குகந்த நாவல்

தனலக்ஷ்மி

அல்லது

தாத்தாவின் கல்யாணம்

K. S. வெள்ளைச்சாமி பாவலர்

அவர்கள் எழுதியது.

உலகில் பல நாவல் வெளிவந்திருந்த போதிலும் இம்மாதிரியான நாவல் படித்திருக்க மாட்டீர்கள் 60 வயது கிழவன் காமவாசையும் தரகன் சாகசங்களும் பெண்ணை பெற்றோர் கடனால்-அவஸ்தையுற்று பரிதபிக்கும் சமயம் நர்காஸ்திரத்தில் கட்டுண்ட மாதிரி தரகனால் கட்டுண்டு சம்மதிப்பதும் இன்னும் பல மர்ம விஷயங்களும் ஆச்சரியமும் ஆனந்தமும் ஆஸ்யமும் நிறைந்தது.

மூவர்ண அட்டையுடன் விலை ரூ. 1-8-0

வந்துவிட்டான்!

இவன் யார்? தெரியுமா?

★ சினிமா ரௌடி அல்லது

சிங்கள்க் கள்வன்

[ஆனந்த விகடன் புகழ்ந்துரைத்த அற்புதமான துப்பறியும் நாவல்,]

விலை ரூ. 1—4—0.

எஸ். ஆறுமுகம் எழுதிய

வாழும் காதல்

'காதல்' அரு. ராமநாதன் அவர்களின் முன்னுரையுடன் தமிழ்நாட்டு இலக்கியச் சந்தை கண்டறியாத புத்தம் புதுமைகளோடு கூடியது.

விழிகளுக்கு விருந்தளிக்கும் மூவர்ண முகப்பு.

விலை ரூ. 1—0—0.

கிடைக்குமிடம்:—

ஸ்ரீ வாணி விலாசம் பிரஸ், திருப்பாதிரிப்புலியூர்,

குறைந்த விலை! விற்பனையாகிறது!

- திருக்குறள் -

திருக்குறள்

இஃது உலகப் பொது நூல்;
உலக மக்கட்கு வாழ்க்கைச் சட்ட நூல்;

இத்தகைய சிறப்பு வாய்ந்த இந்நூல் அழகாக கிளேஸ் பேப்பரில் பாக்கெட் அளவில் அச்சிடப்பட்டு விற்பனையாகிறது.

3x4 பாக்கெட் சைஸ் சாதா பயிண்டு 1—0—0
ஷை காலிகோ பயிண்டு 1....2....0

காமரஸ நூல் வெளிவந்து விட்டது!

சிற்றின்ப வெற்றி! பேரின்ப வெற்றி!

பண்டை கொக்கோகம்

அல்லது

மன்மதனின் 64 லீலைகளின் இன்பம்

சிற்றின்ப ரகசியங்கள் அனைத்தும் விளக்குவது!

இதன் விலை அணா 12.

15 அணா ஸ்டாம்பு அனுப்பினால் ஷை புத்தகம் அனுப்பப்படும்.

தீந்தமிழ் இலக்கியங்களை தரும்
'திங்கள் பதிப்பகத்'தின் இரண்டாவது சாதனை!

வாழ்க்கை ஆசிரியர்
சித்தார்த்தன்
மீட்டும்

ஜீவநாதம்

காவிய நடை! கற்கண்டு கருத்துக்கள்!!

விலை அணா 0—12—0

கிடைக்குமிடம் :—
ஸ்ரீ வாணி விலாசம் பிரஸ், திருப்பாதிரிப்புலியூர்.

12.2.84.

822/84

1-A
2-48